ISSN 1800-3699

# இருக்கிறோம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 5 - இருக்கை 3 ஒரு பொல்லாப்புமில்லை 15-31 மார்ச் 2010



நிலவு தின்றுவிட்ட தென்றல்



வேகத்தின் நாயகன்
பிரட் லீ



கதவைத் திற



இலவச
இணைப்பு உள்ளே

50/-

"இராவணேசன்"
ஒரு பார்வை!





ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை

இதழ் 51

காத்திருப்பு 05 - இருக்கை 03

ஈகோ மீடியா ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட் வெளியிடுகிறது



#3, டொரிங்டன் அவெனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 3150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukiram@gmail.com

ஸ்தாபக ஆசிரியர் :
இளையதம்பி தயானந்தா

நிர்வாக ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் :
அருளானந்தம் சஞ்ஜீத்

ஆசிரியர் குழு :
பஸ்லான் மொஹமட்

ஓவியர் :
சஞ்ஜீத்

வடிவமைப்பு :
சோ.விபுலன்
செ. ஜெயதேவன்
சி.திவாகரன்

புகைப்படம் :
பா.கரன்
சோ.விபுலன்

கணனி தட்டச்சு :
எஸ். சதீஸ்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.













# கதவைத் திற

வணக்கம் தாய்த் தமிழகமே!

தமிழ் எழுத்தின் 'ஐ'கரத் தொடர் கிடைப்பதால் தாயையும் தமிழகத்தையும் ஒன்றாகச் சேர்க்க முடிகிறதே தவிர மனதால் முடியவில்லை என்பது குறித்த வருத்தங்கள் இருக்கின்றன. இலங்கை மண்ணில் இன்றும் இனியும் எழுத ஆயிரம் தலைப்புக்கள் வரிசை கட்டி நிற்கின்றன. தேர்தல் இருக்கிறது. யார் எவர் என்றில்லாமல் களம் இறங்கும் அபேட்சகர்கள் இருக்கிறார்கள். சாதாரண வானொலிப் பேட்டியைக்கூடச் சந்திக்க முடியாத தானைத் தலைவர் இருக்கிறார். பிறந்தநாள் அழைப்பினால் மட்டுமே தன் வீழுந்த (வர்ண வியாபாரிகள்) வியாபாரிகள் இருக்கிறார்கள். பாராளுமன்றம் செல்லத் துடிக்கும் ஊடகவியலாளர்களும் ஊடக முதலாளிகளும் இருக்கிறார்கள். முகாம்களும் அங்கு இடர்ப்படும் பெண்களும் இருக்கிறார்கள். இன்னும் இன்னும் முற்றுப்புள்ளியிட முடியாத ஆயிரமாயிரம் தலைப்புக்கள் நம்மிடம் இருக்கின்றன. இருந்தபோதிலும் அவை எதையும் இப்போது எழுத முடியவில்லை.

''எருவாய்க்கு இருவிரல்மேல் ஏறுண்டிருக்கும்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்!''

என்பதாய்ப் பட்டினத்தார் சொல்லும் அக் கருவாய்க்குள் சிக்குண்ட நித்தியானந்தா (மன்னிக்க வேண்டும் என் ஹம்சரே) தடுக்கிறார். தன்னைத் தவிர வேறு எதையும் எழுத விடாமல், தலை எடுத்து அவர் ஊடகம் எங்கும் ஆடுகிறார். இதை எழுதுகிறபோது ஹரித்துவாருக்குத் தப்பிச் சென்ற அவர் குறித்து எழுத இனி எதுவும் இல்லை என்றாகி விட்டது. இப்போது எம் கோபம் எல்லாம் தமிழகத்தின் வெகுஜன இதழ்கள் மீது மட்டும்தான்.

சிந்திக்கத் தூண்டும் தமிழகச் சிற்றிதழ்களையும் ஏனைய நாட்டு தமிழ்ச் சஞ்சிகைகளையும் தின்று ஏப்பம் விடும் தமிழக வர்த்தக சஞ்சிகைகளே! காவி கட்டியவர்களை கடவுளர்கள் ஆக்கியது பக்தர்கள் அல்ல நீங்கள்தான். உங்கள் வியாபாரத்துக்காக எதையும் எதுவாகவும் உங்களால் மாற்ற முடிகிறது. நல்ல மனிதர்களை அல்லது தலைவர்களைவிட நீங்கள் அதிகமாய உருவாக்கியது சாமியார்களைத்தான். பக்தியையும் நம்பிக்கையையும் காசாக்கக் கற்றுக் கொண்டவர்கள் நீங்கள்தான். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது போல, சாமி இருந்தாலும் காசு, லீலை புரிந்தாலும் காசு என்று தெரிந்து கொண்ட வல்லிய வியாபாரிகள் நீங்கள்.

ஈழப் போர் வரலாற்றில் நாங்கள் உயிர்களையும் நீங்கள் இதழ்களையும் விற்றுக் கொண்டிருந்தீர்கள் அல்லது விற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாம் இப்போதும் அறிவோம். இதோ மீண்டும் ஒரு வியாபாரம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. நடத்துங்கள்.

கமெரா வரும் என்று தெரியாமல் கதவைத் திறந்த நித்தியானந்தாவின் நினைவுகளோடு,

ஆசிரியர்

15-03-2010



இருக்கிறம்



'சுயேட்சை வேட்பாளர் பட்டியல்'


நூலகம்

Free Issue
Irukkiram

# பதிப்பகத்தார்

பத்திரிகை, இணையத்தளம் என்று எங்கு திரும்பினாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான விமர்சனங்களாக இருக்கின்றன. இதன் தலைமை தீவிர தமிழ் தேசியவாதத்தைக் கைவிட்டு விட்டதா? இந்திய அரசாங்கத்தின் அடிவருடிகளாகப் போய் விட்டனரா? என்றெல்லாம் அலசப் படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலாக கூட்டமைப்பின் தலைவரான திரு. சம்பந்தன் அவர்கள் இந்தியாவின் உதவியில்லாமல் இங்கு ஒன்றும் செய்ய முடியாது என்கின்ற யதார்த்த அரசியலை விளக்கியிருக்கிறார்.

நாம் இதையெல்லாம் திரும்ப இங்கு அலசத் தேவையில்லை. ஆயினும் இந்தியாவை அனுசரித்துப் போகவே வேண்டும் என்கின்ற கூற்றைப் பற்றிச் சிறிது ஆராய வேண்டியிருக்கின்றது. ஏனெனில் இது திரு. சம்பந்தன் மட்டும் சொல்கின்ற விடயம் அல்ல. பலராலும் முன்வைக்கப் படுகின்ற, அரசியல் அவதானிகள் யாவருமே எடுத்த எடுப்பில் மறுக்க முடியாத வாதம். இதனால்தானோ என்னவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, இலங்கையில் இருக்கின்ற நாட்களைவிட இந்தியாவில் கழிக்கின்ற நாட்கள் அதிகமாக இருக்கின்றன. இங்கு பாராளுமன்றத்தில் உரையாற்றுவதைத் தவிர அங்கு போய் காங்கிரஸ் பிரமுகர்களுடனும் இன்னோரன்ன அரசியல்வாதிகளுடனும் (யார், அவர்களுடன் என்ன பேசப்படுகிறது என்பது எங்களுக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை) பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியலாக முத்திரை குத்தப்பட்டு விட்டது. எங்களுக்கு வாக்குகளைத் தாருங்கள், நாங்கள் எப்படியும் இந்தியாவிடம் பேசி தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினைப் பெற்றுத் தரப் போகின்றோம் என்றுதான் அனேகமாக அவர்களுடைய தேர்தல் பிரச்சாரங்கள் இருக்கும் என நினைக்கின்றோம். ஆகவேதான் இதை இங்கு நின்று யோசிக்க வேண்டியிருக்கின்றது.



## ஜெயிக்குமா தரகு அரசியல்?

இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லரசாக செல்வாக்கு செலுத்திக் கொண்டிருக்கும் நமது அயல்நாடு. தன்னைச் சுற்றியுள்ள நாடுகளெல்லாமே தனது நலன்களுக்குப் புறம்பாக ஒரு சிறிய நகர்வையேனும் செய்யக்கூடாது என்கின்ற ஒரு வல்லரசுக்கேயுரிய நிலைப்பாட்டில் தீவிரமாக இருக்கும் நாடு. இலங்கை பற்றியும் இலங்கைத் தமிழ் மக்கள் பற்றியும் அதன் நிலைப்பாடுகளை மேலோட்டமாகச் சொல்வதானால், அவை இலங்கையில் வேறெந்த வல்லரசும் தளம் அமைக்காமலும், தமிழ் நாட்டின் தமிழ் தேசியத்தை உலுப்பி எழுப்பாதவாறு இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வு இருக்காமலும் பாதுகாப்பதாகக் கொள்ளலாம். இந்த நிலைப்பாடுகளின் வெளிப்பாடே சென்ற வருடம் நாம் கண்ட இந்திய அரசின் சாணக்கியம். ஒரு பக்கம் தமிழ் மக்களின் அழிப்பு யுத்தம் நடைபெற நடைபெற மறுபக்கமாக தமது தூதுவர்களை அனுப்பி அது நாடகமாடியதை நாம் மறக்கத்தான் முடியுமா? யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவரப் போகிறோம் என்று சென்னையில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்துவிட்டு விமானமேறி இங்கே வந்து ஜனாதிபதியிடம் தாம் பௌத்த தலங்களைத் தரிசிக்கப் போகிறோம் என்று கண்டி தலதாமாளிகைக்கும், அனுராதபுரத்திற்கும் சுற்றுலா சென்றவர்களாச்சே!

இந்தியாவுக்கு விடுதலைப்புலிகள் ஒரு நெருடலாக இருந்திருக்கின்றனர். ஆயினும் விடுதலைப் புலிகள் இல்லையெனில் தமிழ் மக்களுக்கான



தீர்வைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்பதும் இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினைப் பற்றி இந்தியா அக்கறை கொண்டிருந்திருந்தால் சென்ற வருடம் வேறென்ன செய்திருக்கலாம்? ஒரு தரம் கற்பனை செய்து பார்ப்போம். விடுதலைப்புலிகள் கிளிநொச்சியைக் கைவிட்டு முல்லைத்தீவுக்குப் பின்வாங்கும்போதே அவர்களுடைய பலவீனங்கள் தெரிய ஆரம்பித்துவிட்டன. அந்த நேரத்தில் ஒரு யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்திருக்கலாம். விடுதலைப் புலிகளின் பலவீனத்தை சாதகமாக்கி, அவர்களின் பேரம் பேசும் பல்லைக் கழற்றியிருக்கலாம். அதே சமயம், அவர்களைக் காட்டிக் காட்டியே இலங்கை அரசினை பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்து வந்திருக்கலாம். அந்த மேடையில் தனக்கு விரும்பிய தமிழ் மிதவாதத் தலைவர்களை அமர்த்தி ஒரு டீலைப் போட்டிருக்கலாம். ஒரே கல்லில் தனக்கு விருப்பமில்லாத விடுதலைப் புலிகளை நடுநிலையாக்கித் தமது நலன்களைப் பாதுகாத்துக்கொண்டு, அதே சமயத்தில் தமிழ் மக்களுக்கும் ஏதாவதொரு தீர்வைக் கொண்டு வந்திருக்கலாம். முடியாது என்கிறீர்களா?

ஆனால் இந்தியா என்ன செய்தது? யுத்தத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி செய்தது மட்டுமன்றி, தமிழ்நாட்டு மக்களை அப்பட்டமான பொய்கள் சொல்லி ஏய்த்தது மட்டுமன்றி யுத்தத்தின் பின்னர் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னாலும், ஐ.நா பாதுகாப்புச் சபையின் முன்னாலும் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டு பிரேரணையை முறியடிக்க அல்லும் பகலும் அயராது உழைத்தது. வெற்றியும் கண்டது. சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவிருந்த கடனை மனித உரிமை மீறல் என்கின்ற அடிப்படையில் அமெரிக்கா தடுத்து வைக்க முயன்றபோது சர்வதேச அரங்கில் வாதாடி அதனைப் பெற்றுக் கொடுத்தது. சர்வதேச நாணய நிதியம் கடன் கொடுத்திருக்காவிடில் நாமே அந்தக் கடனை வழங்கியிருப்போம் என்றுவேறு மார் தட்டி நின்றது. இனி தமிழ் மக்களுக்கு எதிராக வேறென்னய்யா அது செய்யக் கிடக்கின்றது? தயவுசெய்து சொல்லுங்கள். இந்த இந்தியாதான் இனி வந்து தமிழ் மக்களுக்கு ஏதாவதொரு அரசியல் தீர்வைத் தரப் போகிறது என்று கூட்டமைப்பு சொன்னால் அதைப் பற்றிய கருத்துக் கணிப்பை வாசகர்களிடமே விடுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலை தரகு அரசியல் என்று சொல்லலாம். அவர்கள் தமிழ் மக்களின் தரகர்களாகவே எப்பொழுதும் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். தரகர்கள் எப்படி இருப்பார்கள்? எந்தவொரு ஒப்பந்தத்திலும் இரு பார்ட்டிகளுக்கு இடையில் தொடர்பாளர்களாக (gobetween) இருப்பார்கள். ஆனால் இரு பார்ட்டிகளையும் நேரடியாக சம்பந்தம் வைக்க விடமாட்டார்கள். ஏனெனில் அப்படி நேரடியாக தொடர்பு வைத்தால் தமக்கு அங்கு வேலையில்லாமல் போய்விடுமே. தாம் கொண்டுள்ள தொடர்பும் அதனூடாகத் தாம் பிரத்தியேகமாகப் பெற்றுக் கொள்ளும் தகவல்களும்தான் எப்பொழுதும் தரகர்களின் அதிகாரத் துருப்புச் சீட்டாகும். இது வலுவூட்டும் அரசியலுக்கு(empowering politics) நேரெதிராகும். வலுவூட்டும் அரசியலானது யார் சார்பாக இயங்குகின்றதோ அவர்களைப் பலப்படுத்த முயலும். அவர்களுக்கு நேரடியான தொடர்புகளும் அதற்குரிய முழுத் தகவல்களும் கிடைக்கச் செய்யும். ஒரு ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்படுத்துவதற்கு சாதகமாக உடன் நிற்கும்.


இங்கு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டியது சிங்கள மக்களுடன். கூட்டமைப்பினரே தனி நாடு இனிச் சாத்தியமில்லை என்கின்றனர். அந்த லொஜிக்கின்படி பார்த்தால் எந்த ஒப்பந்தத்திற்குப் பிறகும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன்தானே தொடர்ந்து வாழவேண்டும்? அப்படியானால் நாம் யாரை நம்பிப் பழக வேண்டும்? யாருடன் உறவுகளை ஆழப்படுத்த வேண்டும்? யார் மத்தியில் உள்ள முற்போக்குச் சக்திகளை இனம் கண்டு அவர்கள் மூலம் ஒரு நாடளாவிய சிந்தனை மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்? எங்களை ஏய்க்கின்ற இந்திய அரசுடனா? நாங்கள் ஒன்றாக வாழப் போகின்ற சிங்கள மக்களுடனா?



எங்கள் முன்னாலிருக்கின்ற பணி, தமிழ் மக்களைப் பலப்படுத்துகின்ற பணிதான். என்னென்ன நடக்கின்றது என்பது அவ்வப்பொழுது நேர்மையாக அவர்களுக்கு விளங்கப்படுத்தப்படவேண்டும். ஆடிக்கொரு தடவை அமாவாசைக்கொரு தடவை என்று சொல்வதுபோல் அறிக்கைகளை மட்டும் விட்டுக்கொண்டிருந்தால் போதாது. தமிழ் மக்களுடன் தொடர்ந்து பேசவும், கட்சிக் கொள்கைகளை விளக்கவும், சிங்கள முற்போக்கு சக்திகளுடன் தொடர்புகளை ஆழப்படுத்தவும் தமிழிலும் சிங்களத்திலும் கட்சிக்கென ஏடுகள் ஆரம்பிக்கப்படவேண்டும். கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்தும் விளக்கங்கள் அளிக்கப்படவேண்டும். சிங்கள, தமிழ் அமைப்புக்களுக்கிடையிலான கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இக்கட்சி முன்னெடுக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் இந்நாட்டில் அதிகாரப் பரவலுக்கான ஜனநாயக இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படலாம். வருகின்ற பொதுத் தேர்தலில் கூட்டமைப்பினரின் தரகு அரசியல் திரும்ப ஜெயிக்குமா?

# நிலவு தின்றுவிட்ட தென்றல்

ஸ்ரீதர் பிச்சையப்பா





**மரணம்** நண்பர் ஸ்ரீதரின் உடலை அழைத்துச் சென்று விட்ட தருணத்தில் அவரது ஞாபகங்களை மீட்டிப் பார்க்கிறேன். அவரை நான் முதல் முதலாக 1979 ஆம் ஆண்டின் இறுதிக் கால கட்டத்தில் சந்தித்தேன். அவரை எனக்கு அறிமுகப்படுத்தியது பொன் தமிழ்நேசன் மற்றும் ஈழகணேஷ் அடங்கிய நண்பர் குழாம்தான். தெளிவான முகம்! நெற்றியில் திருநீறால் வரையப்பட்ட மூன்று கோடுகள்! இதை குறிப்பாக சொல்வதற்கு காரணம் அவ்வாறு நெற்றியில் திருநீறு பூசுவதிலும் கூட அவரது ஓவிய உணர்வு பளிச்சிட்டது என்பதை எடுத்துக்காட்டத்தான்.

இவ்வாறான ஒரு கோலத்தில் அவரது வீட்டு வாசலில் அவரை முதல் முதலாக சந்தித்த பொழுது ஏலவே அவர் தனது தந்தையின் வழியில் வானொலி மற்றும் மேடை நாடகங்களில் தனது நடிப்பின் திறனைக் காட்டி கொண்டிருந்தார். அவருடன் பழகப் பழகத்தான் அவருக்குள் இருந்த பலவிதமான ஆற்றல்களை என்னால் இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. அவரும் நானும் அந்த கால கட்டத்தில் நாள் தவறாமல் சந்தித்த வேளை, எமக்குள் பரிமாறப்பட்ட கருத்துகளும் சரி. நடந்த நிகழ்வுகளும் சரி. கலை இலக்கியம் சார்ந்தவையாகத்தான் இருந்தன என்பதுதான் இங்கு விஷேடமாக குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

என்னை பொறுத்தவரை ஸ்ரீதரின் ஆளுமை என்பது பல்வகை திறன் சார்ந்தது. நடிப்பு, பாட்டு, கவிதை போன்ற துறைகளில் அவரது சம காலத்தவர்களிலிருந்து வேறுபட்ட பாணியாக இருந்தது என்பது பலர் அறிந்த ஒன்று. ஆனால், ஓவியத் திறனைப் பொறுத்தவரை அவரது சமகாலத்தவர்களிடம் அவரது சமத்துறைகாரர்களிடம் காணப்படாத ஒரு திறனாகவும் தனித்துவமாகவும் இருந்தது எனலாம். அவரது ஓவியத்துறை வளர்ச்சி பற்றி சொல்வது என்றால், அவருக்கு நான் 'தமிழ்' சிறு சஞ்சிகைச் சூழலின் வழியாக அறிமுகப்படுத்தி வந்த நவீன ஓவியர்களான ஆதிமூலம், பாஸ்கர், மருது மற்றும் இலங்கை ஓவியர்களான மாற்கு மாஸ்டர், ரமணி, கைலாசநாதன் மற்றும் மேலைத்தேய ஓவியர்களான Pablo Piccasso, Jackson Pollock, Edvard Munch, Salvador Dali போன்ற ஓவியர்களினது பரிச்சயம் என்பது என் வழியாக அவருக்குக் கிடைத்த பின்னான காலகட்டத்தில் அவரது கோட்டோவியங்கள் மிகுந்த வீச்சான தனித்துவமான ஒரு வளர்ச்சியினை பகிரங்கமாக வெளிப்படுத்தின.

இத்தகைய ஓவியர்களின் பரிச்சயம் கிடைத்த பின்தான் அவர் தனித்துவமாக வரைய ஆரம்பித்தார் என்ற நோக்கில் இதனை நான் சொல்ல வரவில்லை. இங்கு குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால் இந்த ஓவியர்களை அவர் பரிச்சயப்படுத்திக் கொள்வதற்கு முன்னதாகவே, ஓவியப் பாணியில் சில சோதனை முயற்சிகளை அவர் செய்து வைத்திருந்தும். அவைகளை பகிரங்கப்படுத்துவதில் அவருக்கு இருந்த சங்கடத்தை, நான் மேற் சொன்ன ஓவியர்களின் படைப்புக்கள், அச்சங்கடத்தை அவரது









பரிசோதனை மிக்க ஓவியப் படைப்புக்களை பகிரங்கப்படுத்துவதற்கான தைரியத்தை அவருக்கு கொடுத்தன என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்ரீதருக்கு இலங்கை ஓவியர்களில் ரமணி மீது அளவு கடந்த ஈடுபாடு இருந்தது. இதற்கு காரணம் ரமணியின் வித்தியாசமான கோடுகள் தான் காரணம்.

அவருடன் பழகிய காலகட்டத்தில் நான் அறிந்த மட்டில் மரபார்ந்த ஓவிய முறைமை மீது அவருக்கு ஈடுபாடு இருப்பினும்கூட, யாருடைய உருவத்தையும் அந்த பாணியில் அவர் வரைந்ததாக எனக்கு நினைவில் இல்லை. ஆனால், அவரது தனித்துவமான கோடுகளால் பிற்காலத்தில் முக்கியமான ஆளுமைகள் பலரை கோட்டோவியங்களாக அவர் வரைந்திருந்ததை நான் அறிவேன். அந்த வரிசையில் அவரது தந்தையார் இறந்திருந்த காலகட்டத்தில், இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அன்னை திரேசா அம்மையாரை தனது கோடுகளால் வரைந்திருந்தார். அந்தக் காலகட்டத்தில் வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழலில், அவர் வசித்து வந்த அதே தெருவில் அமைந்துள்ள ஒரு கோயிலில் அன்னை திரேசா அம்மையார் தங்கியிருப்பதை அறிந்து, அதிகாலை வேளையில், அவரை சந்திக்க காத்து நின்ற கியூ வரிசையில் நின்று ஸ்ரீதர் வரைந்த அன்னை அவர்களின் ஓவியத்தில் அன்னையாரின் கையெழுத்தை நான் பெற்ற சம்பவம் மறக்க முடியாத ஒரு சம்பவம் எனலாம். ஸ்ரீதரின் மற்ற துறைகளையிட்டு பேசாமல் குறிப்பாக பாடல், நடிப்பு என்ப



வற்றை பற்றி பேசாது அவரது ஓவியத் துறை பற்றி முதன்மையாகவும் அழுத்தியும் அவரது நினைவு மீட்டலில் நான் பேசுவதற்கு காரணம் இருக்கிறது.

மற்ற துறைகளான நடிப்பு பாடல் என்பவற்றை பொறுத்த வரை, அவரது ஆற்றலை நான் இனங் கண்டிருப்பினும், அத்துறைகளையிட்ட அவரது வளர்ச்சிக்கு ஏலவே பலர் அவருக்கு எனக்கு முன்னதாகவே உதவிக்



கொண்டிருந்தமையும், அதே வேளை, அவரது ஓவிய ஆற்றலின் வீச்சை புரிந்துக் கொள்வதற்கான சூழல் இல்லாதிருந்த நிலையில், அவரது ஓவியத் துறை வளர்ச்சியினையே நான் கூர்ந்து கவனித்தவன் என்ற வகையில்தான் அவரது ஓவியத்துறை வளர்ச்சியை பற்றி அழுத்தி பேசுகிறேன். என்னைப் பொறுத்தவரை அவரது ஓவியத்துறை சம்பந்தமான விடயத்தில் ஓயாத குறை ஒன்று இன்னும் இருந்துக்கொண்டே இருக்கிறது. அதுபல தனிநபர் ஓவியக் கண்காட்சிகள் நடத்தும் அளவான ஓவியங்கள் அவர் வரைந்திருந்தும் அவையெல்லாம் பெரும் சாதனைகள் அல்ல என்ற நிலை நின்று இயல்பாக அவர் கொண்டிருந்த தன்னடக்கத்தின் காரணமாக அவ்வாறான கண்காட்சிகளை நடத்துவதில் ஆர்வம் செலுத்தவில்லை என்பதுதான்..

இவ்வாறான ஓவியக் கலைஞராக திகழ்ந்த ஸ்ரீதருக்கு ஐரோப்பா நாடுகளில் இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்த பொழுது அச்சந்தர்ப்பத்தை வேறு எந்தவொரு கலைஞனும் பயன்படுத்தாத வகையில் பயன்படுத்திக் கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும். ஓவியத்துறையில் ஆழமான ஈடுபாடு காட்டிய ஸ்ரீதர் ஐரோப்பிய பயணத்தில் பிரான்சுக்கு சென்றிருந்த வேளை, நான் மேலே குறிப்பிட்ட மேலைத்தேய நவீன ஓவியங்களின் குறிப்பாக Pablo Piccasso,Salvador Dali போன்ற உலக ஓவியர்களின் ஓவியங்களின் அசல் பிரதிகளை பார்த்து வந்தமை அவரை மிகவும் உற்சாகப்படுத்திய நிகழ்வாக திகழ்ந்தது.



இலக்கியத்துறையைப் பற்றி அறியாத வயதிலேயே அதற்குள் காலடி எடுத்து வைத்து பல மேடை நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்தார். பின் அவரே கவிதைகளை எழுதி குவித்தாலும் கவிதைகளைப் பொறுத்த வரையும் பிரசுரக் களங்களுக்கு அனுப்பியது குறைவு. ஆனால், அவரது கவித்துவ ஆற்றல் என்பது அவர் இயற்றிய மெல்லிசைப் பாடல்களில் வெளிப்பட்டதை நான் அவதானிக்கத் தவறவில்லை. அன்றைய நாள் தொடக்கம் ஈழத்து மெல்லிசைப் பாடல்களின் பிரியனாக நான் இருந்ததினால் ஒரு காலத்தில் எனக்கும் மெல்லிசைப் பாடல்கள் எழுதவேண்டும் என்ற ஆசை மனதுள் இருந்தது. அந்த ஆசை நிறைவேறும் வகையிலான ஒரு சூழலுக்கு என்னை அழைத்துச் சென்றது ஸ்ரீதர்தான் என்பதை இங்கு நான் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

இப்படியாக ஸ்ரீதரின் ஆற்றல்களை, நாம் இனங்கண்டு கொண்ட நினைவுகளை பகிர்ந்து கொண்டே போகலாம். ஸ்ரீதரின் ஒட்டுமொத்தமான கலை இலக்கிய வெளிப்பாடுகளை வைத்துக் கொண்டு ஓர் ஆய்வினை நடத்தினோமானால் அவ்வாய்வு கூட, ஒரு நீண்ட நூல் அளவில் இருக்கும். அதே வேளை, அந்த சந்தர்ப்பத்தில்தான் ஸ்ரீதர் பிச்சையப்பா என்ற கலைஞனின் படைப்புலகம் நமக்கு பல செய்திகளைத் தரக்கூடிய உலகமாக இயங்கி இருக்கிறது என தெரிய வரும். இத்தகைய சிறப்பான நினைவுகளுள் சங்கமித்து இருக்கும் நண்பன் ஸ்ரீதரின் படைப்புக்கள் நூலுருவம் பெற வேண்டும் என்ற தேவையை, எங்களதும் அவனதும் ஆசையானது நிறைவேறும் வகையில், அவரது ஓவியங்களுடன் கூடிய ஒரு கவிதைத் தொகுப்பை அவரது வடிவமைப்பில் அவரே தயார் செய்துக் கொண்டிருந்த வேளை அப்பணி முழுமை அடையாத நிலையில், அவர் எம்மை விட்டு பிரிந்து சென்றுள்ளார். அவர் கொண்டிருந்த நோக்கத்துடன் கூடிய, சிந்தனைகளுடன் கூடிய முறையில் அத்தொகுப்பை நம்மால் வெளிக்கொண்டு வர முடியாவிட்டாலும், அவர் இதுவரை தயார் செய்து வைத்திருந்த முறைமையுடனாவது அத் தொகுப்பு வெளிக்கொணரப்படவேண்டும். அப்பொழுதான் ஸ்ரீதர் பிச்சையப்பா என்ற கலைஞனின் இழப்பு என்பது வெறுமனே சிறந்த ஒரு பாடகனின் அல்லது ஒரு சிறந்த கவிஞனின், அல்லது சிறந்த ஒரு நடிகனின் இழப்பு மட்டுமல்ல அதற்கு மேலாக, ஈழத்து தமிழ் சூழலில் தனது கோட்டோவியங்களால் வீச்சாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்த ஈழத்தின் சிறந்த ஒரு ஓவியனின் இழப்பாகவும் அவ்விழப்பு உணரப்படும் என்பது நிச்சயம். ஸ்ரீதர் பிச்சையப்பா எனும் நண்பன் உடலால் நம்மை விட்டு பிரிந்தாலும் காலஉடலால் காலமெலாம் எம்முடன் வாழப் போகும் ஒரு கலா இயக்கம்!



மேமன்கவி



"அழகிய பூங்காற்றின் மீது அனுதினம் என் பாடல் தூது
மிதக்கும் போது கலக்கம் நெஞ்சில் ஏது
என் நெஞ்சில் சோகங்கள் இல்லை
நான் சங்கீத தேசத்து பிள்ளை"


இது ஸ்ரீதர் பிச்சையப்பா எனது இசையமைப்பில் உருவான பாடலுக்கு எழுதிய வரிகள் இப்பாடல் "மீண்டும் மீண்டும் கோமாளிகள்" தொலைக்காட்சி நாடகத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீதர் பிச்சையப்பா ஓவியர், பாடகர், கவிஞர், பாடலாசிரியர், அறிவிப்பாளர், நடிகர் என பல்வேறு கோணங்களில் பரிணமித்துக் கொண்டிருந்தவர். அவற்றையும் விஞ்சி ஒரு புதிய ஆற்றலும் அவரில் இருந்ததை நாம் யாவரும் அறிவோம். அதுதான் தற்பொழுது "அசத்தப்போவது யாரு" மற்றும் கலக்கப்போவது யாரு போன்ற இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் "Stand up Comedy" என்று சொல்லப்படுகின்ற அதாவது மதுரை முத்து என்றால் ஞாபகம் வரும். இப்போது அவர்கள் செய்யும் "Stand up Comedy" 1992ம் ஆண்டிலேயே நம் நாட்டில் ஸ்ரீதர் பிச்சையப்பாவிடம் இருந்தது. நாங்கள் இசைநிகழ்ச்சிகளுக்கு செல்லும் பொழுது வாகனத்துக்குள் பொழுது போக்காக மிக சரளமாக இந்த "Stand up Comedyயை" சொல்லிக் கொண்டே போவார்.

யாருடனும் இலகுவில் "மச்சான்" என்று சொல்லி பழகும் சுபாவமே இந்த மனிதரின் வெற்றிக்கு ஒரு காரணம் இவரை பற்றி சொல்வதென்றால் பக்கம் பக்கமாக சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வளவு திறமைகளையும் கொண்ட ஒரு அமுதசுரபியான கலைஞன் இன்று நம்மைவிட்டு மீண்டுவர முடியாத தூரத்திற்கு சென்றுவிட்டார். அவரின் நினைவுகளோடு அவரது கலைகளும் வாழும் என்ற நம்பிக்கையோடு......

ஸ்ருதி பிரபா

அதற்குத் தக

# மக்கள் அரசியல்



போதை என்பது உடலுக்கு மட்டு மன்றி உணர்வுக்கும் உரியதுதான்.

மனிதனுக்குப் போதை தருகின்ற அல்லது தன்னுணர்வை இழக்கச் செய்கின்ற சமாச்சாரங்களைச் சொல்லுமாறு யாரிடமாவது கேட்டால் மது, மாது, பணம், பதவி என்று வரிசையாகவும் சுலபமாகவும் சொல்லி விடுவார்கள். என்னைப் பொறுத்தவரை அப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய மற்றொரு அம்சமும் இருக்கிறது. அதுதான் அரசியல்.

மேற்சொல்லப்பட்ட அம்சங்களினால் ஏற்படும் பாதிப்புக்களுக்குச் சற்றும் குறைவின்றி அரசியலாலும் ஏற்படுகிறது. ஏனையவை ஏற்படுத்தும் பாதிப்புக்கள் ஒரு தனி மனிதனை அல்லது ஒரு சாராரை மட்டுமே பாதிக்கிறது. அரசியலால் பாதிக்கப்படுகின்ற மக்களின் தொகை எப்போதுமே அதிகமாக இருக்கிறது.

வீதியில் கிடக்கும் ஒரு சரளைக் கல் முதல் ஒரு பாண் துண்டு வரை அரசியல் பரவிக் கிடக்கிறது. நமது நடப்பு, சிரிப்பு முதற் கொண்டு நமது அழுகை, மரணம் வரை அது ஆதிக்கம் செலுத்துகிறது. உலகத்தில் குழந்தையின் சிரிப்பைத் தவிர மற்றைய எல்லா விடயங்களும் அரசியல் கலப்பு மிக்கது என்று எழுத்தாளர் சுஜாதா எழுதியிருந்ததை ஒரு முறை படித்தேன். ஆனால் குழந்தையின் சிரிப்பு அக்குழந்தை உட்கொள்ளும் பாலோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. எனவே அதிலும் அரசியல் கலப்பு இருப்பதாகவே நான் கருதுகிறேன். தாய்ப்பால் அருந்தும் குழந்தையாயின் அத்தாயின் உணவு சம்பந்தப்படுகிறது. தவிர தங்களது அழகு குறைந்து விடும் என்பதற்காகத் தாய்ப் பால் கொடுக்காமல் புட்டிப் பால் கொடுக்கும் தாய்மார் பலர் உள்ளனர். எனவே எங்கும் எதிலும் அரசியல் மயம்.

அரசியல் என்பதை நாம் பாராளுமன்றத்துக்கும் மாகாண சபைக்கும் பிரதேச சபைக்கும் நடத்தப்படும் விடயம் என்று நம்மில் பலர் நினைக்கிறார்கள். தமது லாபத்திற்காக தமது எதிராளியை வஞ்சம் தீர்ப்பதற்காகப் போடப்படும் திட்டங்களும் அரசியல் தான். ஒரு பத்திரிகை ஆசிரியர் தனது நண்பர் என்பதற்காக ஒரு அரை வேக்காட்டை அற்புதமான அறிவாளியாகச் சித்தரிக்க முற்படுவதும், அவர் எழுதும் அரைகுறை அனுபவத்தைப் பிரசுரிப்பதும்கூட அவரது அரசியல் சார்ந்த விடயமே.

'அரசியல் என்பது ஒரு சாக்கடை' என்று நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாரோ ஒருவர் சொன்னது. இன்று அதற்கான வரைவிலக்கணத்தைப் போல் பலராலும் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில் சாக்கடை மட்டும்தான் சாக்கடை. மற்ற விடயங்கள் யாவும் நல்லவையே. அதை எப்படிப்பட்டவர்கள் எப்படிக் கையாள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அது சாக்கடையாகவோ ஜவ்வாது மேடையாகவோ மாறுகிறது.

தோசை சுடுவதற்கென்று ஒரு முறை இருக்கிறது. அதே போல இட்லி சுடுவதற்கும் ஒரு முறை உண்டு. இட்லியை வடை சுடுவது போலவோ தோசை சுடுவது போலவோ சுட முடியாது. அதே போல்தான் அரசியலும். கட்சிகள், அங்கத்தவர்கள், அரசியல் வாதிகள், ஆதரவாளர்கள் என்று ஒரு பின்னணி அதற்கு உண்டு. எனவே ஆதரவாளர்களையும் அங்கத்தவர்களையும் தனக்கு வாக்களித்த மக்களையும் புதிதாக இணைந்து கொள்ளும் ஆதரவாளர்களையும் சமாளித்தபடி, எதிரணியை எதிர்த்தபடி அரசியல்வாதி பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது. சுபாவங்களில் வித்தியாசமான மனிதர்கள் எதிரும் புதிருமாக இங்கு மோதிக் கொள்கிறார்கள். தங்களது கட்சி நலனுக்காக அதன் பின்னணியில் தான் செய்யும் அர்ப்பணத்தை வெளிப்படுத்துவதற்காக அதன் மூலம் அரசியல்வாதியிடம் எதையோ பெற்றுக் கொள்வதற்காக என்றெல்லாம் அவர்களது செயற்பாடு அமைந்து விடுகிறது. அரசிய





வில் இவையெல்லாம் தவிர்க்க முடியாத அம்சங்களாக இன்று மாறிப் போய் இருக்கின்றன.

இம்மாதிரியான சிக்கலான ஒரு விடயமாக அரசியல் அமைந்து விட்டதால் புத்தி ஜீவிகள் அல்லது நியாயமான நடுநிலைப் போக்குடைய கற்றோர் அரசியலில் ஈடுபடுவதில்லை. கேவலமான வார்த்தைப் பிரயோகங்கள், நபர்களின் தனிப்பட்ட வாழ்க்கை விடயங்களை விமர்சித்தல், அடிதடி, சண்டை, கத்திக் குத்து, துப்பாக்கிச் சூடு என்று வியாபித்திருக்கும் அரசியலுக்கு அவர்கள் விரும்புவதில்லை. எவ்வளவு உண்மையான மனிதனாக அரசியலில் நுழைந்தாலும் ஏதோ ஒரு கட்டத்தில் அவனுக்கு நடிக்க வேண்டியேற்படுகிறது. பொய் சொல்லியாக வேண்டியிருக்கிறது. கட்சியின் நலனுக்காக கட்சி முடிவுகளுக்காக உண்மைக்கு மாறாகச் செயற்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. பத்திரிகையாளர்களும் அரசியல்வாதிகளும் சந்திக்கும் ஒரு நிகழ்வு கடந்த மாதம் ஒரு தொலைக்காட்சியில் இடம்பெற்றது. வந்திருந்த இளம் பத்திரிகையாளர் நாட்டிலுள்ள எந்த அரசியல் கட்சிக்கும் அரசியல்வாதிக்கும் ஒரு நல்ல நோக்கம் இல்லை என்பதை மட்டுமே தெரிவித்துக் கொண்டிருந்தார். மீண்டும் மீண்டும் அவர் இவ்வாறு சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த அரசியல்வாதி 'நாங்கள் சரியில்லையென்றால் இந்த நாட்டைப் பாலனம் செய்து வந்த நாங்கள் அனைவரும் மடையர்களா?' என்று போட்டார் ஒரு போடு. அதுமட்டுமன்றி 'அப்படியானால் நீங்கள் பத்திரிகையாளர்களெல்லாம் அரசியலுக்கு வாருங்கள்' என்று அழைத்தார். பத்திரிகையாளர் முகத்தில் ஈயாடவில்லை.

ஒரு முறை மறைந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அவர்களிடம் ஒரு தொலைக்காட்சி நிருபர் 'அரசியலுக்குச் சண்டியர்கள் வந்து விடுகிறார்களே..' என்று கேட்டார். அதற்கு ஜெயராஜ்அவர்களின் பதில் என்ன தெரியுமா?

'அப்படியானவர்களைத் தெரிவு செய்யும் மக்களிடம்தான் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்'.

மக்கள் ஜனநாயகம் என்பது இதுதான்!

**அஷ்ரஃப் சிஹாப்தீன்**



# எப்படித் தெரியுது?



ஒரு இளம் தம்பதியினர் புதிய வீட்டிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். ஒரு நாள் கணவன் வேலை முடித்து வீட்டுக்கு வந்ததும் மனைவி அவனைப் பார்த்து 'செல்லம் உங்களுக்குத் தெரியுமா? எங்கட வீட்டு மேல் மாடியில் உள்ள குளியல் அறையில் பைப் லீக் ஆகுது' என்றாள். அதற்கு கணவன் 'என்னைப் பார்த்தால் எப்படி தெரியுது? குழாய் திருத்துபவன் மாதிரியா?' என்றான் கடுப்பாக.

சில நாட்கள் செல்ல கணவன் வேலை முடித்து வந்ததும் மனைவி அவனைப் பார்த்து 'செல்லம் அந்த கார் ஸ்டார்ட் ஆகல. நான் நினைக்கிறன் அதுக்கு புதிய பட்டரி தேவையெண்டு. உங்களுக்கு அதை மாத்தித்தர முடியுமா?' என்றாள்.

அதற்கு அவன் 'என்னைப் பார்த்தா எப்படி தெரியுது? மெக்கானிக் மாதிரியா? என்று சிடுசிடுத்தான்.

கொஞ்ச நாள் சென்றது. அவள் வீட்டின் கூரையில் இருந்து நீர் கசிவதைப் பார்த்தாள். கணவனைப் பார்த்து'செல்லம் எங்கட வீட்டுக் கூரையில் தண்ணீர் லீக் ஆகுது. அதை உங்களால் செய்து தர முடியுமா?' என்றாள்.

அதற்கு அவன் 'என்னைப் பார்த்தால் உனக்கு எப்படி தெரியுது? பிளம்பர் மாதிரியா?' என்றான் கோபமாக.

சில நாட்கள் சென்றன. கணவன் வேலை முடித்து வீட்டுக்கு வந்தான். கூரை சரி செய்யப்பட்டிருந்தது. குளியல் அறை பைப் சரி செய்யப்பட்டிருந்தது. கார் பட்டரி மாற்றப்பட்டிருந்தது. அதிர்ச்சியுற்ற அவன் தனது மனைவியிடம் என்ன நடந்தது? என விசாரித்தான்.

'ஓ..! அதுவா? வீட்டு வேலை செய்து தரும் ஒருவரைக் கொண்டு செய்வித்தேன்' என்றாள். கணவன் 'பிரமாதம்.. சரி அதுக்கு எவ்வளவு செலவானது?' என்று கேட்டான்.

மனைவி அவனைப் பார்த்து 'ஒன்றுமில்லை 'அந்த வேலையாள் இலவசமாக நான் செய்து தாரன். அதற்கு பிரதியுபகாரமாக கேக் ஒண்டு செய்துதா என்றான். நானும் செய்து கொடுத்தேன்' என்று அவள் கூறினாள்.

'ஓ நல்லது. என்ன மாதிரியான கேக் செய்து கொடுத்தாய்?'என்றான் கணவன்.


அதற்கு அவள் 'என்னைப் பார்க்க உங்களுக்கு எப்படித் தெரியுது? என்று கேட்டாளே ஒரு கேள்வி.

இது எப்பிடியிருக்கு.

"வான்மறைச் சோலை"



# தொழுகையின் தத்துவம்



சுவர்க்கத்திற்குத் திறவுகோல் தொழுகை. இந்த தொழுகையின் தத்துவம் என்ன? மனிதன் தான் இறைவனுடைய அடியான் என்பதை செயல் வடிவில் காண்பதற்கு தொழுகை ஓர் கருவியாக அமைந்துள்ளது. ஏனெனில் சாஸ்டாங்கமும் சிரம்தாழ்த்தலும் அடங்கியுள்ளன. மேலும் மனிதருடைய சரீர அமைப்பு, மற்ற மிருக சரீர அமைப்பு போலன்றி மிக அற்புதமாகவும் அழகாகவும் படைக்கப்பட்டுள்ளது. தொழுகை இவ்வழகிய அமைப்புக்கு நன்றியாக அமைந்துள்ளது. எவ்வாறெனில் நீட்டுவதற்கும் மடக்குவதற்கும் வசதியாக மனிதனுடைய கரங்கள் அமைக்கப்பட்டதற்கு நன்றியாக தொழுகையின் கைக்கட்டுதலும் பேசுவதற்கு வசதியாக அவனது நாவு படைக்கப்பட்டதற்கு நன்றியாக அதில் திருமறை ஓதுதலும் வளைப்பதற்கும் நிமிர்வதற்கும் வசதியாக அவனது இடுப்பு






படைக்கப்பட்டதற்கு நன்றித் தொழுகையில் ருகூஉ (குனிவது) செய்தலும் தரைமீது வைப்பதற்கும் எடுப்பதற்கும் வசதியாக அவனது சிரசு படைக்கப்பட்டதற்கு நன்றிக்காக தொழுகையில் நிலைநிற்பதும் அமைந்துள்ளன.

மேலும் இமாம் தொழும் இடத்திற்கு ஏன் மிஹ்ரப் என்று அழைக்கின்றார்கள்? மிஹ்ராப் எனும் அரபு வாக்கியத்தின் பொருள் போர்க்களம். போர்க்களம் என்று ஏன் கூற வேண்டும்? அதாவது நபி (ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் எவன் தன் மனோ இச்சை (நஃப்ஸ்) உடன் போரிட்டு (அதனை அடக்கி) வெற்றி பெறுவானோ அவனே வீரனாவான். எனவே நாம் தொழும்போது நமது எண்ணம் வேறு யோசனையில் இல்லாமல் அல்லாஹ்வின் சிந்தனையில் நம் எண்ணம் நிலை பெற்று தொழுதல் சிறந்த வணக்கமாகும்.

மருதூர் ஏ.எல். அனிஸாரி.

"பக்கத்து வீட்டார் பட்டினியால் வாடும் போது தான் மட்டும் உண்டு களிப்போர் உண்மையான முஃமின்களாக (விசுவாசிகளாக இருக்கமாட்டார்கள் (அத்தபராணி அல்ஹாகிம்)"



# சடங்கு சம்பிரதாயங்கள்

லதா - கல்யாணம் நல்ல கிராண்டா நடந்தது எல்லே மாமி. சாப்பாடும் நல்லா இருந்தது. எங்கை கேட்டர் பண்ணினவை எண்டு கேக்க வேணும்.

கமலா - அதுசரி.. சடங்குகள் நடக்கேக்கை சுமங்கலிப்பொம்பிளை யள்.. அதுகும் பிள்ளையள் பெத்தவை யள்.. 3 பேர் வேணும் எண்டு கூட்டிக் கொண்டு போச்சினம் கவனிச் சீரோ??

லதா - அப்படித்தானே எல்லாக் கலியாண வீடுகளிலையும் செய்யி றவை மாமி?

கமலா - பக்கத்திலை கலியாணம் ஆகாத பொம்பிளையள்.. விதவை யான பொம்பிளையள் எல்லாம் இருக்கத் தக்கதாய் சுமங்கலிகளை மாத்திரம் கூட்டிக்கொண்டு போகினை. அந்த மாற்றப் பொம் பிளையளின்டை மனசை நோகடிக் கிற வேலை எல்லே இது.

லதா - ஓம் மாமி.. ஆனால் இது தானே மாமி எங்கட சம்பிரதாயம்.

கமலா - பிழையான சம்பிரதா யங்களை.. இப்படி வேற்றுமை காட்டுற சம்பிரதாயங்களை நாங்கள் இனித்தன்னும் மாத்த வேணும்.

லதா - எங்கட சமுதாயம் இதை மாத்த முன்வருமா மாமி?

கமலா - ஏன் முன்வரக் கூடாது?? ஒரு சுமங்கலி ஆசிர் வதிக் கிற மாதிரி.. ஒரு கலியாணம் ஆகாத பெண்ணோ விதவைப் பெண்ணோ ஆசிர்வதிக்க மாட்டாளா? அதுகளாலை ஆரத்தி எடுக்க ஏலாதா?

லதா - அப்படி இல்லை மாமி.. சுமங்கலிகள் புருஷன் பிள்ளையள் எண்டு நிறைஞ்ச மனசோட சந் தோஷமா இருப்பினம் எண்டபடியா அவையள் இதுகளைச் செய்தா எல்லாம் நல்லா நடக்கும் எண்டு ஒரு நம்பிக்கைதான்.

கமலா - இது ஒரு மூட நம் பிக்கை.. சுமங்கலிகள் நிறைஞ்ச மனசோடை சந்தோஷமாய் இருக்கி றது சமூகம் அவையளுக்குக்குடுக்கிற அந்தஸ்த்தாலை. அதே அந்தஸ்த்தை விதவைகளுக்கும் கலியாணம் ஆகாத பெண்களுக்கும் இந்த சமூகம் குடுத் தால் அவையளும் ஒருவித தாழ்வு மனப்பான்மையும் இல்லாமல் நிறைஞ்ச மனத்தோடை சந்தோஷ மாய் இருப்பினை.. இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகள் மாறவேணும்.

லதா - எங்கட சனம் இதுகளை லேசிலை மாத்தாதுகள் மாமி.

கமலா - ஏன் அப்படி நினைக்கி நீர்? முந்தி எங்கட சமூகத்திலை விதவைகள் வெள்ளை உடுப்புத்தான் உடுத்தினம். பொட்டு, பூ ஒண்டும் வைக்காமல் இருந்திச்சினம். அது இப்ப மாறி விட்டுது. இப்ப விதவைப் பொம்பிளையளை.. பூவோடை பொட்டோடை பாக்க எவ்வளவு சந்தோஷமா இருக்கு.


லதா - அதை ஒத்துக்கொள்ளத் தான் வேணும் மாமி. அதுவும் இந்த மாற்றம் வர, கனகாலம் எடுக் கேல்லை. ஒரு ஜெனரேஷனுக்குள்ளை இந்த மாற்றம் வந்திட்டுது எண்டு சொல்லத்தான் வேணும்.


கமலா - அதே மாதிரி இதுகளும் மாறவேணும். எல்லாப் பொம்பிளை யளுக்கும் எங்கட சமுதாயம் சம அந்தஸ்த்துக் கொடுக்கவேணும். இல் லாட்டில் எங்கட சமுதாயத்தை ஒரு அநாகரிகமான.. பிற்போக்குள்ள சமூதாயம் எண்டுதான் சொல்லுவன்.

லதா - இதை எப்படி மாமி மாத்திறது?

கமலா - இனங்களுக்கிடையே சம உரிமைக்கும் சம அந்தஸ்த்துக்கும் என்ன பாடு படுறம்? இந்த சம அந்தஸ்த்து எங்கட சமூகத்துக்குள் ளேயே இல்லாமல் இருக்கிறது. எங் கடை கண்ணுக்குத் தெரியுதில்லை. இதைப்பற்றி எழுதக்கூடியவை எழுத வேணும். பொது இடங்களிலை இதைப்பற்றிக் கதைக்க வேணும்.


லதா - ஓம் மாமி. கொஞ்சப் பேர் மாறினால் மற்றவையும் மாறத் தொடங்கி விடுவினை.





# வித்தியாசமானவர்கள்

'எனது திருமணத்தை நான் கொஞ்சம் வித்தியாசமாகச் செய்யப் போகின்றேன்'. 'இன்று நான் சற்று வித்தியாச மாகச் சமைக்கப் போகின்றேன்'. 'இந்தத் திருமணத்துக்கு நான் முற்றிலும் வித்தியாசமான முறையில் ஆடை அணியப் போகின்றேன்'. 'நான் இம்முறை தயாரிக்கும் திரைப் படம் சற்று வித்தியாசமானதாக இருக்கும்'. 'நான் மற்றவர்களைப் போல இல்லை. நான் வித்தியாசமானவன்'.



இப்படியான சுய விளம்பல்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். நூற்றுக்கு 99.99 வீதமான மக்கள் இப்படித்தான் சிந்திக்கிறார்கள்.

நாங்கள் மற்றவர்களைவிட முற்றிலும் வித்தியாசமானவர்கள் என்று சிந்திக்கும் ஒரு சிலர் ஒன்றாகக் கூடி 'நாங்கள் வித்தியாசமானவர்கள்' என்ற பதாகையைப் போட்டுக் கொண்டு தம்மைத் தாமே சிலாகித்துக் கொள்வர்.

வித்தியாசமாக இருக்க வேண்டும் என்ற பேரார்வத்தைப் பூர்த்தி செய்வதற்காக மனிதன் பெருமளவு பணத்தை விரயமாக்குகிறான். புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்கிறான். சிகையலங்காரிகள், பல்வேறு வகையான ஆடை அணிகலன்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், கட்டிடக் கலைஞர்கள், குடும்ப வாகன உற்பத்தியாளர்கள் அனைவருமே கவலைப்படும் விடயம்தான், எந்த உற்பத்தி எனது வாடிக்கையாளனை மற்றவர்களினின்றும் வித்தியாசமாகக் காட்டும் என்பது. அப்படியான கணிப்பீட்டை சரியாகக் கணித்து அதன்படி உற்பத்தி செய்யப்






படும் பொருளை அல்லது ஸ்ரைலை எவ்வளவு விலை கொடுத்தும் வாங்க ஆயத்தமாக இருக்கின்றார்கள் மக்கள்.

இந்த ஆர்வத்தின் அடிப்படை என்ன?

மற்றவர்கள் என்னை மதிக்க வேண்டும். மற்றவர்கள் என்னைக் கவனிக்க வேண்டும். இது நடக்குமா? மற்றவர்கள் நான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்களா? நான் எதையாவது வித்தியாசமாகவும் நன்றாகவும் செய்யும்போது என்னைப் பாராட்டுகின்றனரா?

அப்ளாஸ் வாங்குவது அல்லது மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதுதான் எனது நோக்கம் என்றால் அதற்கு வழிகள் ஏராளம் உண்டு. ஒரு காலத்தில் பெரிய விளையாட்டு மைதானங்களில் நிர்வாணமாக ஓடி மக்களின் கவனத்தை ஈர்க்க முனைந்தவர்கள் சிறைவாசம் அனுபவித்த கதை நாம் அனைவரும் அறிந்ததே. என்ன செய்தும் மக்கள் என்னைக் கவனிக்கிறார்களில்லையே என்ற ஆதங்கத்தினால் வெளிப்படும் இச்செயல்கள் இறுதியாக நாம் எதிர்பார்ப்பதற்கு முற்றிலும் எதிரான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

கவனிக்கப்படவேண்டும் என்ற அந்தத் தேவை பூர்த்தியாகாவிட்டால் மனிதன் பயங்கரவாதியாகவும் மற்றவர்களுடைய வாழ்வுக்கு



ஒரு அச்சுறுத்தலாகவும் ஆகும் சந்தர்ப்பங்களும் உண்டு. திருமண வீடுகளில் முறையான உபசரிப்புக் கிடைக்காவிட்டால் திருமணவிழாவைப் பற்றி கேவலமாகப் பேசி திருமணவீட்டாரின் கோபத்தையும் விலைக்கு வாங்கிக்கொள்வர். மரண வீட்டிலேகூட எம்மை ஒருவரும் கவனிக்கவில்லை என்று குறைப்படுபவர்களும் எம்மிடையே இல்லாமலில்லை.



இப்போது இன்னுமொரு பைத்தியத்தை மக்கள் மனதில் ஊடகங்கள் திணிக்கின்றன. அதுதான் சூப்பர் ஸ்ரார் மோகம்! எப்படியாவது சூப்பர் ஸ்ரார் ஆகிவிட வேண்டும் என்று மக்களிடம் SMS வோட்டுக் கேட்டு அலைகின்ற ஒரு பரிதாபத்தை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். திறமை இருந்தால் மட்டும் போதாது மக்களின் செல்வாக்கும் வேண்டும் என்ற நிலை திறமையுள்ளோருக்கு ஒரு சவாலாகவும் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் செயலாகவும் அமைந்துவிடுகின்றது. மக்கள் கருத்து முக்கியமானதுதான். ஆனால் அது உண்மையுணர்வாக இருக்கவேண்டும். ஒரு மேடை நிகழ்ச்சியிலே மக்கள் கைதட்டி உடனடியாக வெளிப்படுத்தும் பாராட்டு, விருதுகளைவிட மேலானது என்று கலைஞர்கள் கூறுவர். ஆனால் தேர்தல் முறை போன்று விருப்பு வாக்குகள் கேட்டு பிச்சையெடுப்பது எவ்வளவு தூரம் உண்மையானது? பாராட்டு என்பது அறிவு சார்ந்த ஒன்று அல்ல. அது உணர்வு சார்ந்தது. உடனடியாக வெளிப்படுவது. பாராட்டலாமா வேண்டாமா என்று ஒருவர் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் அரசியல் புகுந்துவிட்டது என்றுதான் அர்த்தம்!



குயில் கூவுவது பொழுது விடிவதற்காக அல்ல. அது அதனது ஆத்ம திருப்தியின் வெளிப்பாடு.



மயில் ஆடுவது மக்கள் ரசிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அது உள்ளத்து உணர்வின் வெளிப்பாடு. மக்கள் இயல்பாகவே வித்தியாசமானவர்கள். வித்தியாசமாகப் படைக்கப் பட்டவர்கள். ஒருவர் தாம் தாமாகவே இருப்பதன் மூலம் மற்றவர்களினால் ஈர்க்கப்படலாம். இதற்கு உதாரணமாக நாம் குழந்தைகளையே கொள்ள வேண்டும். குழந்தைகள் இன்னொருவரைப்போல நடக்க முயல்வதில்லை. அவர்கள் தாங்களாகவே இருப்பதனால்தான் மற்றவர்களினால் ஈர்க்கப்படுகிறார்கள்.

ஒருவர் எப்போ தனது சொந்த இயல்பையும் சுபாவத்தையும் ரசிக்க ஆரம்பிக்கிறாரோ அப்போ அவர் இரசிக்கப்படக்கூடிய ஒருவராக மாறி விடுகிறார். அவர் தனித்துவமான இயல்புடைய ஒருவராகக் காணப்படுவார். ஒவ்வொருவருடைய வாழ்வும் அநுபவங்களும் தனித்துவமானவை. சுவையானவை. பொன்விலங்கு என்ற கதையின் கதாசிரியர் பார்த்தசாரதி அவர்கள் அழகான ஒரு கருத்தை அக்கதையிடையே வரும் குறிப்புகளில் கூறினார். ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஒரு சுவாரசியமான கதை உண்டு. அது வெளிப்படாதவரை உலகம் ஒரு நல்ல கதையை இழக்கின்றது.

நீங்கள் பிறந்து வளர்ந்த கதையை ஒரு கதாசிரியரின் நிலையிலிருந்து எழுதிப்பாருங்கள். உண்மையை எழுதுங்கள். யாரென்று கூறாமல் அக்கதையை மற்றவரிடம் காட்டுங்கள். அல்லது ஒரு பத்திரிகையில் பிரசுரியுங்கள். நிச்சயம் பாராட்டப்படுவீர்கள். ஏனெனில் அது அத்தனை சுவாரசியமானது, தனித்துவமானது.


மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், சுப்பிரமணிய பாரதியார், அன்னை தெரேசா போன்ற மகான்கள் எவரையுமே பின்பற்றாதவர்கள். இன்று சினிமா கதாநாயகர்களை எடுத்துக் கொண்டாலும் தனித்துவமாக தமது இயல்புக்கு ஏற்ப தமது கதாபாத்திரங்களை ஏற்பவர்கள் விருதுகளைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

நான் எப்போது மதிக்கப்படுகிறேன்? மதிப்பு என்பது கண்ணாடியில் நாம் பார்க்கும் விம்பம் போன்றது. நான் சிரித்தால் எனது விம்பம் சிரிக்கும். நான் முறைத்தால் அதுவும் முறைக்கும். நாம் பிறரை மெய்யுள்ளத்துடன் மதிக்கும் போதும் பாராட்டும் போதும் நான் மதிப்பது அவர்களையல்ல. என்னைத்தான். தன்னை மதிக்கும் ஒருவன்தான் இன்னொருவரை மதிக்கமுடியும். இது வாழ்க்கை விதிகளுள் ஒன்று.

அன்பழகன்

## சோலார்

சூரிய ஒளியை மின்சக்திக்குப் பயன்படுத்திக்கொள்ளும் சோலார் தொழில்நுட்பம் வேகமாகப் பெருகி வருகிறது. சோலார் கப்பல், விமானம், கட்டிடம், விளக்கு, அடுப்பு என்று இதன் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தற்போது சீனாவில் ஷாங்டாங் நகரில் டெ஝ு பகுதியில் உலகின் மிகப் பிரம்மாண்டமான சோலார் கட்டிடம் கட்டப்படுகிறது. 8 லட்சம் சதுர அடி கொண்ட கட்டிடத்தின் மேற்பகுதியில் சோலார் தகடுகள் பதிக்கப் படுகின்றன. இந்த அலுவலக கட்டிடம் இன்னும் ஒரு ஆண்டுக்குள் செயல்படத் தொடங்கும்.



ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன் தரும் புதிய திகில் தொடர்.

# 'காற்றாய் வருவேன்'

## பருவநாடகம் தொல்லையோ?

கார் நின்றதும், அதன் பின் கதவு தானாகவே திறந்து கொண்டது. அந்த காரின் எண்களைப் பார்த்தாள். சந்தேகமே இல்லை. அது தன் தோழியின் கார்தான் என்பதை அது உறுதிப்படுத்தியது.

"காரில் ஏறுங்கள் சீதா மேடம். மல்லிகா மேடம் உங்களுக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறார் கள்"

முன்னால் இருந்து டிரைவரின் குரல் வந்ததும், பார்வையை திருப்பி னாள் அவள். கறுப்பு நிறத்தினா லான மழைக் கோர்ட் ஒன்றை அணிந்து கொண்டிருந்த அவன், தலையில் அதே நிறத்தினாலான ஒரு தொப்பியையும் போட்டிருந்தான். அதனால் அவன் முகம் சரியாகத் தெரியவில்லை. சீதா எதுவும் பேசா மல் காருக்குள் ஏறி அமர்ந்து கொண் டாள். அமர்ந்து கொண்டதும், கதவு






தானாகவே மீண்டும் சாத்திக் கொண்டது. அடுத்து கார் ஊர்ந்து விரைந்தது.

காருக்குள் இருந்து ஒருவித வாடை வீசி யது.-அதிலிருந்து அந்த கார் சில நாட்களாக உப யோகப்படுத்தப்படாமல் இருக்கிறது என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். ஆனாலும், அதைப் பற்றி டிரைவரிடம் கேட்பதற்கு அவள் தயங்கினாள். கார் இப் போது எந்தப் -பகுதியில் போகிறது என் பதை அவளால் புரிந்து கொள்ள முடிய வில்லை. டிரைவரும் அவளுடன் எதுவும் பேசவில்லை. அவன் கார் ஸ்டியரிங்கை சுற்றியபடியே அமர்ந்திருந்தானே தவிர அப்படி இப்படி அசையவே இல்லை. வளைவுகளில் திரும் பும் போது கூட, அவன் உடலில் அசைவே ஏற்பட வில்லை. சீதாவுக்கு இது பெரும் வியப்பாக இருந்தது. அவன் அவளைத் திரும்பிக் கூட பார்க்க வில்லை.

சுமார், முப்பது நிமிட பயணத்திற்குப் பின் கார் நின்றது. கார் நின்றதும் முன்னரைப் போல, காரின் கதவு தானாகவே திறந்து கொண்டது. பர பரப்புடன் இறங்கிய சீதா, அது எந்த இடம் என்று ஆராய்ந்தாள். இருளில் மூழ்கியிருந்த அந்த பங்களா, தனது தோழி மல்லிகாவிற்கு சொந்தமான 'கிறீன் யார்ட்' எஸ்டேட் பங்களாதான் என்பதைப் புரிந்து கொண்டதும், நிம்மதியாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். அவள் காரை விட்டு கீழே இறங்கியதும், கார் மெல்ல ஊர்ந்து பங்களாவின் பின்பக்கமாக சென்று மறைந்தது. காரை விட்டுக் கீழே இறங்கி யதும் சீதா, பங்களாவை நோக்கி நடந்தாள். அப்போது,



வாசல் கதவைத் திறந்து கொண்டு,

"வா சீதா..


பயணமெல்லாம் எப்படி சௌ கரியமாக இருந்ததா?" என்று ஓடி வந்து, மல்லிகா அவளை வரவேற்க வில்லை.

பதிலுக்கு, பங்களாவின் வாசல் கதவு சாத்தப்பட்டிருந்தது. என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக டிரைவர் சொன்னானே, ஆனால் கதவு மூடப்பட்டுக் கிடக்கிறதே என்று சிந்தித்தபடியே, கதவின் அருகில் வந்த சீதா, கதவைத் தட்டுவதற்கு கையைத் தூக்கினாள்.

அதே சமயம் கதவு தானாகவே திறந்து கொண்டது. வாசலில், மல்லிகா நிற்கவில்லை. சீதாவிற்கு 'திக்' கென்றது. இடது கையை மார்பில் வைத்தபடியே, உள்ளே நுழைந்தாள்.

உள்ளே, இருள் அரக்கன்தான் அமர்ந்திருந்தான்.

"மல்லிகா..." குரல் கொடுத்தாள் அவள் குரல்தான் எதிரொலித்ததே தவிர, மல்லிகா பேசவில்லை.



"மல்லிகா நான் சீதா வந்திருக்கிறேன்.." என்று சொல்லியபடியே இன்னும் கொஞ்சம் முன்னால் நடந்தாள். இரண்டு மூன்று மெழுகுவர்த்திகள் மட்டும் அங்கே எரிந்து கொண்டிருந்தன. என்ன இது? இந்த பங்களாவிற்குள் மின்சாரம் இல்லையா? நான் முன்பு இங்கே வந்த போது, இரவும் பகலாக அல்லவா காட்சி தந்து கொண்டிருந்தது?

அப்படியானால்,சீதாவின் உள்ளத்தில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகத் திகில் படர ஆரம்பித்தது. சுற்றிலும் ஒருமுறை பார்த்தபடியே, இன்னும் கொஞ்சம் முன்னால் நடந்தாள்.

அப்போது,

'கீச்' என்ற சத்தத்துடன் அவள் காதருகில் என்னவோ பறந்து சென்றதைப் போலிருந்தது.

"ஹா...ஞ" என்று அலறியபடியே பின்னால் பாய்ந்தாள் சீதா. நிமிர்ந்து பார்த்தாள். பெரிய வௌவால் ஒன்று மங்கிய மெழுகுவர்த்தி ஒளியில் பறந்து செல்வது தெரிந்தது. அதைப் பார்த்ததும் சீதாவின் இதயம் இன்னும் கொஞ்சம் வேகமாக அடித்துக் கொண்டது.

என்ன இது? எங்கே தொலைந்து போனாள் இந்த மல்லிகா?

இங்கே நடப்பதெல்லாம் ஒரு பயங்கரத்திற்கு பாய் விரிப்பதைப் போல் அல்லவா அமைந்திருக்கிறது? இன்னும் கொஞ்சம் முன்னால் நடந்து சென்ற சீதா சாப்பாட்டு மேசையைப் போல் பெரிதாக இருந்த ஒரு மேசையின் அருகில் வந்தாள். அந்த மேசையின் மேல் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. தலையைக் கொஞ்சம் முன்னால் நீட்டி அதைப் பார்த்தாள். அதில் 'சீதாவிற்கு' என்றிருந்தது. அதே சிவப்பு பேனாவால் எழுதப்பட்டிருந்தது. பரபரப்படைந்த சீதா நடுங்கும் கரத்தினால் அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்.

அன்பு தோழி சீதாவிற்கு,

உன்னை இன்று இங்கே வரச் சொல்லிவிட்டு உன்னை வரவேற்க முடியாமல் போனதற்காக மிகமிக வருந்துகிறேன். ஆனால் நீ எனக்கு ஒரு உதவி செய்தால் மிக விரைவிலேயே உன்னை வந்து சந்திப்பதற்கு முயற்சி செய்கிறேன். எனக்கு நீ செய்ய வேண்டிய உதவியை மூன்று நாட்களுக்குள் செய்து முடிப்பாய் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால், அந்த மூன்று நாட்களும் நீ இந்த பங்களாவில்தான் தங்கியிருக்க வேண்டும். உனக்கு வேண்டிய எல்லா வசதிகளும் இங்கே அவ்வப்போது செய்து கொடுக்கப்படும். அந்த மூன்று நாட்களுக்குள் நீ செய்து முடிக்க வேண்டிய காரியம் என்ன தெரியுமா? மிக எளிது. இந்த ஹப்புத்தளை டவுனில், 'செவன் ஸ்டார்' என்ற ஒரு கிளப் இருக்கிறது. அதில் இருக்கும் மனேஜரை நீ எப்படியாவது மயக்க வேண்டும். அவன் பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் சபலபுத்தி உள்ளவன். அதனால் நீ அவனைக் காதலிப்பதைப் போல் நடிக்க வேண்டும். அப்படி நடித்து அவனை இங்கே எப்படியாவது அழைத்து வரவேண்டும். ஆனால் ஒன்று, அவனை இங்கே அழைத்து வரும் வரைக்கும், நீ யார் என்றோ, எங்கிருந்து வந்திருக்கிறாய் என்பது பற்றியோ, என்னைப் பற்றியோ, இந்த பங்களாவைப் பற்றியோ அவனிடம் சொல்லக் கூடாது. நீ அவனை இங்கே அழைத்து வரும் அன்று நான் உன்னை சந்திப்பேன் என்பதை மறந்து விடாதே..

இப்படிக்கு

உன் உயிர்த்தோழி மல்லிகா.

**தொடரும்......**





## தோட்டியின் பதிவு

# அழகும் ஆபத்தும்



**இன்று** கொழும்பில் தடுக்கி விழுகின்ற இடமெங்கும் பியூட்டி பார்லர்கள்தான் இருக்கின்றன. அந்த அளவுக்கு காணும் இடமெல்லாம் மலிந்து கிடக்கின்றன பியூட்டி பார்லர்கள். எம் கையிலுள்ள காசை கறையானைப் போல அவை அரிப்பதை யாரும் அறியார். ஏன் நானும்கூட அப்படித்தான். அழகு என்பதே முன்னிலையில் இருப்பதால் அவற்றால் வரும் பின்விளைவுகளைப் பற்றி நாம் யோசிப்பது கிடையாது. அழகு நிலையத்துக்குள் சென்றால் வெளியில் வர மனமே வராது. அழகுக்கலை நிபுணர்கள் (யாருக்கு?) அன்பொழுக பேசும் விதம் அப்படி. வெறுமனே மாய வார்த்தைகளைப் பேசி எம்மை ஏமாற்றும் இவர்கள் தங்களையும் ஏமாற்றிக் கொள்வது ஏனோ புரியவில்லை.

நாகரீகத்தின் நிமித்தம் நாம் சிற் சில அழகு சிகிச்சை முறைகளை மேற்கொள்வது இயல்பு. இதில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களோ பரிதாபம். அண்மையில் வெள்ளவத்தைக்கு ஒரு 'பிரபல்யமான 'சூர்ய' மான அழகு சிகிச்சை நிபுணரை சந்திப்பதற்குச் சென்றேன். நான் சென்ற விடயமே வேறு. ஆனால் கையிலுள்ள காசெல்லாம் கோயில் உண்டியலில் போட்ட காணிக்கையாகி விட்டது. காரணம் "உங்கள் முகத்தில் பருக்கள் இருக்கின்றன. இதுவரை நான் சிகிச்சையளித்து பயனளிக்காத எவரும் இல்லை. ஒரு முறை வந்து விட்டு போங்கள். என்னைத் தேடிப்பிடித்து வருவீர்கள்" என அவர் அர்ச்சித்த அர்ச்சனையில் மெய்மறந்து போனேன்.

"ஒரு கிழமையில் நீங்கள் என்னைத்தேடி வந்து நன்றி சொல்வீர்கள்" என்றார். நானும் இணங்கிவிட்டேன். என் சருமத்துக்கு "பொருத்தம்" என அவர் சில கிறீம்களை தெரிவு செய்து பில்லும் போட்டு விட்டார். ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகாது என்று கூறிய அம்மணி 4,500 ரூபா என்று பில் தந்தார். தலை ஒரு நிமிடம் கிர்ர்ர்.... என்று சுத்தியது. என்ன செய்வது? கையிலிருந்ததை அப்படியே கொடுத்துவிட்டு வீடு வந்து சேர்ந்தேன். அவற்றை பாவித்த 2 நாட்களில் அவை தமது புத்தியை காட்டி விட்டன. வெளியில் தலை காட்ட முடியாமல் என் முகம் படு கேவலமாகியது. உடனே call பண்ணி நிலமையைச் சொன்னேன். "உங்கள் சருமத்தில் உள்ள அழுக்குகள் வெளிவருகின்றன. பிறகு சரியாகும்". என்றார். தொடர்ந்து பாவிக்க படுமோசமாகி விட்டது.



அந்தனையையும் விட்டெறிந்து விட்டேன்.

இது மட்டுமல்ல இன்னொரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் என் புருவங்களை சீர்செய்வதற்கு என் வீட்டு பக்கத்தில் உள்ள பியூட்டி பார்லர் செல்வது வழமை. அவ்வப்போது அந்தப் பெண்மணி என்னிடம் வற்புறுத்தும் விடயம் "உங்கள் முகத்தில் உள்ள பருக்களை மட்டும் நீக்கினால் நீங்கள் அழகாக இருப்பீர்கள்" என்று. நிரந்தரமாக நீக்கும் முறையும் தொடர்ந்து வராமல் சருமத்தை பாதுகாக்கவும் அவரிடம் சாதனம் இருக்கிறதாம். ஒவ்வொரு முறையும் சொல்லிச்




சொல்லி என் மனம் மாறிவிட்டது. நேர மின்மை காரணமாக நாட்களை ஒத்தி வைத்திருந்தேன். ஆனால் எப்படியும் சிகிச்சை செய்யவேண்டும் என்று என் மனதில் ஒரு உற்சாகம் பிறந்துவிட்டது.

இரு வாரங்களுக்கு முன் அதே பியூட்டி பார்லருக்கு என் புருவங்களை சரிசெய்யச் சென்றேன். குறிப்பிட்ட அந்த நபர் முகத்தை ஒரு துணியால் மூடிக் கொண்டு என்னை வரவேற்றார். 'என்ன?' என்றேன். தனது முகத்தைக் காட்டி 'முகப்பருக்கள் வந்து முகத்தைக் கழுவக்கூட முடியவில்லை. வேதனை யாக இருக்கிறது. காய்ச்சலும் வந்து விட் டது' என்று மனவேதனையுடன் சொன் னார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல் அங்கிருந்து வெளியேறி விட்டேன். நல்லகாலம் அவருடைய சொல்லைக் கேட்டு நடந்திருந்தால் எனது நிலையும் இப்படித்தான் போயி ருக்கும்.


தன் முகத்தைப் பராமரிக்கத் தெரி யாத, தனக்கே சிகிச்சை செய்ய முடியாத இவர் எப்படி எனக்கு சிகிச்சை செய் வார்? பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான ஏமாற்றும் பேர்வழிகளால் எமது சிந்த னைகள் மழுங்கடிக்கப்படுகின்றன.


இவர்களது நயவஞ்சக வார்த்தைகளால் இன்று எல்லோரும் ஏமாற்றப்படு கின்றனர். எனவே உண்மைத்தன் மையை அறிந்து செயற்பட வேண்டியது எமது கைகளில்தான் இருக்கிறது. எனவே பியூட்டி பார்லர்களுக்கு அடிக் கடி ஓடுபவர்கள் இனியாவது அவதான மாக இருங்கள்.

பியூட்டி பாலர்களுக்கு போய்த் தான் எங்களை அழகுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கட்டாயம் இல்லை. இயற்கையாக கிடைக்கும் காய்கறிகள் மற்றும் பழங்களைப் பயன்படுத்தி இலகுவான முறையில் வீட்டிலேயே செய்யக்கூடிய பல அழகுக் குறிப்புகள் இருக்கின்றன. அவை பக்கவிளைவு களும் அற்றவை. அழகு சிகிச்சை நிலை யங்களுக்கு செல்வதற்கு முன் அவை தரமானவையா? என ஒருதடவைக்கு பலதடவை ஆராய்ந்து பார்க்க வேண் டும். எமது தெரிவுகளில் அவதானம் தேவை. அழகு என்று எம்மை அலலங் சணப்படுத்துபவர்களை சட்டத்தின் முன்கூட நிறுத்தலாம். இவ்வளவு ஏன்? பேசாமல் அழகுநிலையம் செல்வதைத் தவிர்த்துத்தான் பாருங்களேன்.

**சாகித்யா**







# வேகத்தின் நாயகன்

# பிரட் லீ

BRETT LEE

**கிரிக்கெட் உலகம்** உருவாக்கிய வேகப்பந்து வீச்சாளர்களில் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக அனைவராலும் போற்றப்பட்டவர் பிரட்லீ. சர்ச்சைகளில் சிக்காமல் வேகத்தால் சாதித்து அவுஸ்திரேலிய அணிக்குப் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த சாதனை வீரர். அவுஸ்திரேலிய அணியில் கடந்த 9 வருடங்களாக இடம்பிடித்திருக்கும் பிரட் லீ, பல துடுப்பாட்ட வீரர்களை நிலை குலைய வைத்தவர் என்றே சொல்லலாம்.


ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக காலம் விளையாடவும், உடல் நலனைக் கருத்திற் கொண்டும் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ.

தொடர்ச்சியாக காயமடைந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சில காலங்களாக விளையாட முடியாமலிருக்கும் பிரட்லீ, கடைசியாக கடந்த 2008 இல், மெல்பேர்னில் நடந்த தென்னாபிரிக்காவுக்கெதிரான டெஸ்டில் விளையாடினார். இதேபோல கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் வதோதராவில் இந்தியாவுக்கெதிரான சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடினார். அதன்பின் முழங்கை காயம் காரணமாக போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை.

1999 ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமான பிரட் லீ, இதுவரை 76 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 310 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இந்தியாவுக்கெதிராக அறிமுக வீரராகக் களமிறங்கிய பிரட் லீ, மெல்போர்னில் நடைபெற்ற போட்டியில், முதல் டெஸ்டிலே முதல் இன்னிங்சில் 47 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன் போட்டியிலே 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றி முத்திரை பதித்தார். இந்தியத் துடுப்பாட்ட வீரர்களை ஆடுகளத்திலிருந்து விரைவாக வெளியேற்றி, சிறந்த வேகப்பந்து வீச்சாளராக தன்னை கிரிக்கெட்டுலகிற்கு அடையாளம் காட்டிக் கொண்டார்.

டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய அவுஸ்திரேலிய வீரர்கள் வரிசையில் ஷேன் வோர்ன் (708), க்ளென் மெக்ராத் (563), டெனிஸ் லில்லி (355) ஆகியோரைத் தொடர்ந்து நான்காமிடத்திலுள்ளார். அதிவேகமாக (160.8 கி.மீ./மணி) பந்துவீசிய முதல் அவுஸ்திரேலிய வீரர், இரண்டாவது சர்வதேச வீரர் என்ற பெருமையினையும் பெற்றார்.

டிசம்பர் 2008 இல் தென்னாபிரிக்காவுடனான தொடரில் காலில் காயம் ஏற்பட்ட பிரட் லீ அதன் பிறகு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவில்லை.



மீண்டும் ஆஷஸ் தொடருக்கு முன் கடும் நெருக்கடிக்கு மத்தியில் உள்ளூர் அணிக்கெதிரான போட்டியில் 158 கி.மீ வேகத்தில் பந்துவீசி 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பிரட் லீ, மீண்டும் காயமடைந்தார். இதனால் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடும் வாய்ப்பையிழந்தார். அதன் பின் முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக சமீபத்தில் பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான தொடரிலும் பங்கேற்க முடியவில்லை.

இதற்கிடையே ஒரு நாள் போட்டிகள் சிலவற்றில் விளையாடிய பிரட் லீ, "2020" சாம்பியன் லீக் கிரிக்கெட்டில் நியூ சவுத்வேல்ஸ் அணி, டிரினிடாட் அணியை இறுதிப் போட்டியில் வீழ்த்திய போது ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

அவுஸ்திரேலிய அணிக்கு, நீண்ட நாட்களாக டெஸ்ட் போட்டியில் விளையாடியதை மிகப் பெரும் கௌரவமாக கருதும் பிரட் லீ, டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதால் தனது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாக அர்த்தமில்லை, ஒருநாள் மற்றும் "20-20" போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன். இந்த முடிவை ஒரே நாளில் எடுக்கவில்லை. கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக தீவிரமாக ஆலோசித்தே எடுத்ததாகக் கூறுகிறார். இதேவேளை ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கவுள்ள "20-20" உலகக் கிண்ணத் தொடருக்கான உத்தேச அணியிலும் இடம்பிடித்துள்ளார். ஆனால் மார்ச் 12 இல் ஆரம்பமாகவுள்ள 3ஆவது ஐ.பி.எல் தொடரில் பிரட் லீ பங்கேற்பது கேள்விக்குறியே.



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சிறந்த வேகப் பந்துவீச்சாளரான பிரட் லீ, இதுவரை 76 டெஸ்ட் போட்டிகளில் 310 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். சிறந்த பந்துவீச்சுப் பெறுமதி 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள். ஒரு இன்னிங்சில் 5 விக்கெட்டுகளை 10 தடவைகள் கைப்பற்றியுள்ள லீ, ஒரு தடவையேனும் ஒரு போட்டியில்கூட 10 விக்கெட்டுகளை கைப்பற்றவில்லையென்பதும் ஆச்சரியமே. பந்துவீச்சு மட்டுமன்றி தன்னால் இயன்றளவு துடுப்பாட்டத்தில் 5 அரைச் சதங்கள் அடங்கலாக 1451 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

186 ஒருநாள் போட்டிகளில் 324 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள லீயின் சிறந்த பந்துவீச்சுப் பெறுமதி 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள். 5 விக்கெட்டுகளை 9 தடவைகள் கைப்பற்றியுள்ள லீ, துடுப்பாட்டத்தில் 2 அரைச் சதங்கள் அடங்கலாக 897 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்கெதிராக 14 போட்டிகளில் 50 விக்கெட்டுகளையும் பங்களாதேஷ் அணிக்கெதிராக 4 போட்டிகளில் 8 விக்கெட்டுகளையும் இங்கிலாந்து அணிக்கெதிராக 18 போட்டிகளில் 62 விக்கெட்டுகளையும் இந்திய அணிக்கெதிராக 12 போட்டிகளில் 53 விக்கெட்டுகளையும் நியூசிலாந்து அணிக்கெதிராக 8 போட்டிகளில் 44 விக்கெட்டுகளையும் பாகிஸ்தான் அணிக்கெதிராக 3 போட்டிகளில் 5 விக்கெட்டுகளையும் இலங்கை அணிக்கெதிராக 2 போட்டிகளில் 16 விக்கெட்டுகளையும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக 12 போட்டிகளில் 64 விக்கெட்டுகளையும் சிம்பாப்வே அணிக்கெதிராக 2 போட்டிகளில் 6 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.



பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளுக்கெதிராக பிரட் லீயால் பெரிதாக சாதிக்க முடியவில்லை. அவுஸ்திரேலிய மண்ணில் 41 போட்டிகளில் 186 விக்கெட்டுகளையும் வெளிநாட்டு மண்ணில் 35 போட்டிகளில் 124 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.


லீ விளையாடியுள்ள போட்டிகளின் அடிப்படையில் 20 இன்னிங்சில் விக்கெட் எதனையும் கைப்பற்ற முடியவில்லை. அத்துடன் 2 தடவைகள் டெஸ்ட் போட்டியின் 2 இன்னிங்சிலும் விக்கெட் எதனையும் வீழ்த்தவும் முடியவில்லை. 2002 இல் பாகிஸ்தான் அணிக்கெதிராக ஷார்ஜா மைதானத்திலும் 2008 இல் தென்னாபிரிக்க அணிக்கெதிராக மெல்பேர்ன் மைதானத்திலும் ஒரு விக்கெட்டைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை. இது லீயின் கிரிக்கெட் வாழ்வில் கொஞ்சம் கசப்பானதாகவே இருந்திருக்கும்.

26 டிசம்பர் 1999 இல் ஆரம்பித்த டெஸ்ட் வாழ்வு அதே திகதி அதே மாதத்தில் (26 டிசம்பர்) 2009 அதே மைதானத்தில் (மெல்பேர்ன்) நிறைவுக்கு வந்திருக்கிறது. என்ன ஒரு அதிசயம்.

பிரட் லீ, கிரிக்கெட் வீரனாக மட்டுமன்றி ஒரு இசைக்கலைஞனாகவும் பரிணமிக்கிறார். கிரிக்கெட் மீது எவ்வளவு பற்று வைத்துள்ளாரோ அதே போல் கிட்டார் மீது காதல் கொண்ட இசை ரசிகன் லீ.

**வேகத்தின் நாயகன் இன்னும் வேகமாக விரைவில் வருவான்....**

**ஆகாஷ்**



# மௌனகுருவின் "இராவணேசன்" ஒரு பார்வை!

பேராசிரியர் மௌனகுரு அவர்களின் "இராவணேசன்" நாடகம் நடைபெறுகின்றது என்று நண்பரொருவர் சொன்னதும் இருந்த எல்லா வேலைகளையும் புறந்தள்ளி விட்டு நாடகத்தை தரிசிப்பதற்கு தயாரானேன். எங்களுடைய காலத்தில், முழுமையான கூத்துக்கலையையோ, அரங்காடல்களையோ காண்பதற்கு காலமோ மாற்றமோ ஏதோவொன்று இடந்தரவில்லை. இருப்பினும் யாராவது எங்கள் நலிந்து போன கலைகளை மறுபடியும் இளஞ்சமுதாயத்திற்கு காட்சிப்படுத்த மாட்டார்களா? என்றிருந்த எனக்கு இது மிகப் பெரும் தாக சாந்தி. இந்த கலைச் சேவையை கொழும்பு கலையிலக்கியப் பேரவை" தொடர்ந்தும் செய்து வருவது பாராட்டப்படவேண்டிய தொன்று.

தமிழர்களின் மரபு வழிப்பட்ட தேசிய வடிவம் கூத்து. இந்த ஒரு தேசியம் என்கிற விடயத்தை நாடக அரங்காக காட்சிப்படுத்தியமையும், அதனுடன் பிரதேச மரபை இணைத்து வடமோடியாக இராவணேசன் நாடகத்தை அமைத்துக் கொண்டமையும் வலிமையான ஒரு விடயமாகும். அங்கு, கட்டியமுரைத்தல், பாத்திர அறிமுகம் போன்றவற்றை எடுத்தும், கூத்தின் யாப்பு என்று கூறக்கூடிய காப்பு, மங்கலம் போன்றவற்றை விடுத்தும், நாடகக் கூத்து முறைக்குள் நவீனத்தை செருகி இருந்தார்கள். கட்டியக்காரர் அதாவது கதை சொல்லி சூத்திரதாரியைப்போல் நாடகத்தின் கதைப் போக்கை எடுத்தியம்புகிற பாணி கிரேக்க "ஹோரசின்" சாயல். இவ்வுத்தி எமது நாடகக் கலைக்கு புதிது. பழங்கூத்தை புத்தாக்கம் செய்து மரபியல் நெறிகளை சேர்த்துக்கொண்டமை, கூத்துருவ நாடகம் என்ற சட்டத்துக்குள் நின்று நவீன சிந்தனைப் பாங்கில் உள்ளீட்டை அமைத்துக்கொண்டமை, காப்பியப் பொருளை சமகாலத்து மக்களின் உணர்வுக்குள் கொணர்ந்தமை இந்த நாடகத்தின் முக்கிய சிறப்பம்சங்களாகும்.




தர்ஷாயனி லோகநாதன்.

இலக்கியத்தின் பாத்திரங்களை ஒப்பனையிலும், உருவகத்திலும் அந்த பிரதேசவாரியான பாங்குக்கமைய மிக யதார்த்தமாக காட்சிப்படுத்தியிருந்தமை நாடக வெற்றியில் இன்னுமொரு பங்களிப்பாகும். இராவணன், மண்டோதரி, கும்பகர்ணன், இராமன், லக்குமணன், அங்கதன், இந்திரசித்து, அனுமன், நீலன்.. பாத்திரங்களோடு பௌதிக அமைப்பும் ஏதுவாயிருந்தது. தனிப்பட்ட ரீதியில் பாத்திரங்களை விமர்சிக்கப் போகையில் நடிகர்கள் அனைவரும் ஓரளவு இசையுடன் பாடக்கூடியவர்களாயும் ஜதியில் ஆடக் கூடியவர்களாயுமிருந்தது, நுணுக்கமான ஒரு முயற்சியே.

நாடக ஆரம்பத்தில், அத்தனை குழு நபர்களையும் அரங்கத்தில் வட்டமாக நிறுத்தி வைத்து ஆட்டத்தின் போது உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கக்கூடிய அசைவுப் பயிற்சியையும், மனதின் திடத்திற்கு "ஓம்" என்கிற ஆழ்ந்த உச்சரிப்பையும் பார்வையாளர்களுக்கு முன்பாகவே நிகழ்த்தி ஒவ்வொரு மாணாக்கருக்கும் கைலாகு கொடுத்து, அண்ணாவியாருக்கும் மாணாக்கருக்குமுள்ள பரஸ்பரம் உணர்த்தப்பட்டது. இது வழமையான மரபு என்கிற போதும், பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு எப்படியிருந்ததோ, எனக்கு கண்ணீர் வரச் செய்கிற நெகிழ்வைத் தந்தது. இந்த மாதிரியான பாரம்பரியங்கள் தாங்கிய செயற்பாடுகள், இளையவர்களுக்கு எதையோ புரியவைப்பது போலிருந்தது. இவைதான் ஒரு நெறி கடந்த கலையின் நீடித்த நிலைக்கு அத்திவாரம். கலை வளர்க்கும் சாதனங்கள்!

தட்டியினால் ஆன அரங்க மாற்றம், குறிப்பாக சொல்லப்பட





வேண்டியதே, இராவண சபையிலே பச்சை வர்ணத்தில் இருந்தமை இலங்காபுரி பசுஞ்சோலை மிக்கது என்று காட்டுவதாயும் இராமனது சேனையைக் காட்டும் போது, வெண்தட்டியரங்காக இருந்தது இராமனது துணையிழந்த சோகத்தைப் பிரதிபலிக்கும் படிமமாயமைந்தது. தட்டி தாங்கி யுத்த வீரர்களாக இறுதியில் அறிமுகமான நாடகத்தின் அரங்க மாற்றுகையாளர்கள் நிர்மலகாந்தன், மதிராஜ், திருச்செந்தூரன், நிராஜ், கின்ஸ்லி, பேரின்பாகினி, மற்றும் பிரதீப் ஆகியோரின் நடிப்பும் உயர்வானதே.

அடுத்த காட்சி மாறுகையில், மாய்ந்து கிடக்கிற இராவணனது வைரமார்பிலே மண்டோதரி புலம்பியழுகிற காட்சிகளில், அரங்கம் வெண்தட்டியாக மாறுகிறது. சோகத்தின் பிரதிபலிப்பு, துக்கத்தின் வர்ணம் வெள்ளையாகிறது. அங்கு இந்நிலை பெயருகின்ற அரங்க நுட்பம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு பெருவியப்பாய் அமைந்தது.

'Take this road' ஈழத்து சினிமாவில் அறிமுகமான முகமும், 'ஜனகரளிய' அமைப்பின் கைதேர்ந்த நடிகருமான காளிதாஸ் அவர்களின் மிடுக்கான கட்டியக் கதை எதிர்பார்ப்பைத் தூண்டுகிறது. மற்றுமொரு கதைசொல்லியான மோகனதாசுக்கு மொழியை விட பம்பை, மத்தளம் போன்ற வாத்தியங்கள் உச்சக் கட்டக் காட்சிகளின் போது கைகொடுத்தது. போர்க்காட்சிகளில் அவருடைய வேகமான உணர்ச்சிக் குரலும் வாத்திய வாசிப்பும் பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்குக் கொண்டுவந்ததென்னவோ உண்மை.

"இராமன் இல்லையென்றால் அவதாரம் இல்லை. இராவணன் இல்லை என்றிருந்திருந்தால் இராமாயணம் இல்லை" என்கிற யதார்த்தக் கட்டியவுரையுடன் நாடகம் ஆரம்பமாகிறது..! இராவணன் என்கிற கம்பீரத்தின் தோற்ற முதல்வாயும் கூத்தின் நாயகனுமாகிய திரு. ஜெயசங்கர் ஒப்பனையின் செழிப்போடு ஒரு துரித ஜாதிப்பாடலோடு அறிமுகமாகிறார். ஆரம்பத்திலேயே குரலில் ஒரு விதத் தொய்வு, எதிர்பார்ப்பைக் குறைகின்றது. இராவண கம்பீரம் குறைந்து விட்டது போலக் கொஞ்சம் நெருடல். அன்றைக்கு முன்னம் இரண்டு தடவை பாரம்பரிய முறைப்படி ஒத்திகை நடந்ததும் இதற்கொரு காரணமாயிருக்கலாம்.

அடுத்து நாடகம் முழுக்க வரக் கூடிய அருமையான பாத்திரம் மண்டோதரி,(சுயானந்தி) ஒவ்வொரு காட்சிகளிலும் சிறப்பான கைதேர்ந்த நடிப்பு, நேர்த்தியான பயிற்சியைக் குறிக்கின்றது. குரலிலும் இனிமை ஜதியுடன் இசைந்த பாடலைப் பாடுகையில் ஒரு இடத்தில் தானும் சுருதி பிசகவில்லை. அதுவே பாத்திரத்துக்கு இன்னுமொரு பக்கபலம். "போருக்குப் போகாதே மன்னா" என்று இராவணனைத் தடுக்கும் காட்சியிலும், இந்திரசித்து மடிந்து கிடக்கிற காட்சியில் "அம்மா, அம்மா என்று அழைத்தபடி திரிந்த என் புத்திரன் போர்க்களத்தில் அலறி விழுந்த போது யார் பெயரை உச்சரித்தானோ" என்று கதறும் போதும் எனக்குப் பக்கத்திலிருந்த "பெரிய மனிதர்" ஒருவர் "உச்சுக் கொட்டிக்" கலங்கியதைக் கண்டேன் பாத்திரத்தின் வலிமையது. மண்டோதரியின் ஒப்பனையும் தாயையும் துணைவியையும் ஒரு பாத்திரத்துக்குள் கொணரஎடுத்த முயற்சியும் நாடகம் முடிந்த பின்னும் மண்டோதரி நினைவில் நிற்கிறார். இராவணன் இறந்து போன காட்சிகளில் மண்டோதரி புலம்பல் என்ற தனிப்படலமே கம்பராமாயணத்தில் இருக்கிறது. இருப்பினும் அக்காட்சிகளின் நீளம் போதாமல் இருந்தது ஒரு குறை. "சீதையாகட்டும் பாஞ்சாலியாகட்டும் கிரேக்கத்தின் ஹெலன் குமாரி ஆகட்டும் பெண்களை வைத்துத்தான் ஆண்கள் போர் செய்கிறார்கள்" மண்டோதரி கூறுகின்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் சமகாலத்துக்கு கச்சிதமாகப் பொருந்துகிறது.

கும்பகர்ணன், (விமல்ராஜ்) இன்னுமொரு சிறப்பான நடிகன். ஆடை ஆபரணங்களும், ஒப்பனையும் சிறப்பு. கையில் "கதை" தவிர்த்து வேல் வைத்திருந்தமையின் படிமம் இறுதிவரைக்கும் புரியவேயில்லை. போருக்குப் புறப்பட்டெழும் போத தன் நாட்டியம், தீவிர பயிற்சியும், தேர்ச்சியும் இருந்திருக்க வேண்டும். அவையே நடுங்குகிறது. அத்தனை ஆர்ப்பாட்டம். சிறு பாத்திரம்தான் என்றாலும் அருமை.

நாடகத்தில் பொதுவாகவே, இறுதிக் காட்சிகளே அடிக்கோடிட்டுக் காட்டக் கூடியவை. அந்த யுத்தக் காட்சிகள் ஒவ்வொருவரையும் இருக்கையின் நுனிக்குக் கொண்டு வந்ததென்றால் மிகையாகாது, யுத்த பேரிகைகளின் முழக்கமும், கொம்பு ஊதப்படுவதும், தட்டி தாங்கிய போர் வீரர்கள் அரங்கத்தை மாற்றியமைப் பதும் "ஹோ" என்கிற பேரிரைச்சலும் ஆயிரம் யுத்தக்களங்களைக் கண்ட தமிழர் நமக்கு அன்றைக்கும் புதிதாகத் தானிருந்தது. ஒவ்வொரு அரங்காட்டக்காரர்களினதும் தீவிர உழைப்பு அந்த இறுதி நொடிகளிலேயே புலப்

பட்டுப் போக, சுமார் பத்து நிமிடங்கள் அது யுத்த பூமியாகிவிட்டது. அரங்கினுள் நுழைந்து எழுந்து சென்று ஜய கோஷம் போடவேண்டும் போல் உணர்ச்சி வசப்பட்டிருந்தேன்.

(யாரும் பார்த்திருக்கா விட்டால் அதைத்தான் செய்திருப் பேன்) யுத்தத்தின் போததன், இராவணேசனின் மாயப்படையால் தான் மறைக்கப்படுதலும், வீரர்கள் தேடித் திணறுகின்ற காட்சியும், அம்புகளின் மலைக்குள் இராமனை மறைத்து விடுகிற சாகசமும் இறுதியில் இராமனது முகம் பார்த்தபடி இராவணன் நிலத்தில் வீழ்ந்து மாய்ந்து போகிறதும், உண்மையிலேயே உணர்ச்சிமயமான தருணங்கள்..!

சமகால நிகழ்வு எதையோ கண்முன் கொணர்ந்து நிறுத்திய ஒரு சிலேடை எண்ணம் நடிப்பில் வழியும் காட்சியின் தாக்கமும் நாடகம் சற்றைக்குள் முடிந்து விட்டதே என்று சலிப்பாகப் போய் விட்டது. இன்னும் விடிய விடிய பாரம்பரிய முறையில் அரங்காடியிருந்தால் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம் போலத்தோன்றியது.

'மேடைக்குப் பின் செயற்பட்டவர்களைப் பற்றிக் கூறவேண்டும். உடை, மேடை வடிவமைப்பு, மேடைப் பொருட்கள் போன்றவற்றை அழகிய முறையில் ஆவன செய்திருந்தார் திருமதி. வாசுகி ஜெய்சங்கர். காட்சி மாற்றங்களின் போதான இசையமைப்பு, பாடல்களில் தொனித்த தெளிவும், இயல்பும் நாடகத்தோடு ஒன்றிவிட வைத்தது. மரபு தழுவிய இசையை கூத்துருவ நாடகத்தினூடாக நுனுக்கமாகத் தந்திருந்த திரு. பிரதீபன் அவர்களை பாராட்டுக்கள் சென்றடைகின்றன. இசையின் மற்றுமொரு அங்கமான பின்னணிப் பாடகிகளை பின்னிணைப்பாக சொல்லி விடுவதில் எனக்கு உசிதம் இல்லை. குறிப்பாக கீதா அவர்களின் குரல், மண்டோதரியின் புலம்பல்காட்சிகளில்,



"அன்னேயோ! அன்னேயோ! ஆ கொடியேற்கு அடுத்தவாறு! அரக்கர் வேந்தன்

பின்னேயோ, இறப்பது? முன் பிடித்திருந்த கருத்து அதுவும் பிடித்திலேனோ?



முன்னேயோ விழுந்ததுவும் முடித் தலையோ? படித் தலைய முகங்கள்தானோ?

என்னேயோ, என்னேயோ, இராவணனார் முடிந்த பரிசு! இதுவோ பாவம்!"


சோகத்தைப் பிழிகிறது போன்ற கணீர்க் குரல் யாரைத்தான் கலங்கடித்திராது?

மேலும் அபிராமி, சிவகௌரி, துஷ்யந்தி, ரூபினா, ஜெகதா இவர்களதும் குரலிசைப்பு சிறப்பாக விருந்தது. இவர்கள் மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக் கல்லூரி பட்டதாரி மாணவிகள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக இரண்டு மணி நேரம் பார்வையாளனைக் கட்டிப் போட்டிருந்த கூத்துருவ நாடகம் இளந்தலைமுறையினருக்குப் புதிது என்ற போதிலும் அதன் தார்ப்பரியத்தையும் மரபு தழுவிய சாடல்களையும் அதனது உத்வேகப் போக்குடன் கைப்பற்றிக் கொண்டோம். இதுவே ஒரு சிறப்பான கலைப் படைப்பின் உச்சக்கட்டமும்கூட...!

உண்மையில் நலிந்து போகின்ற இவ்வாறான கலைகளை புதிய போக்கில் இளஞ்சமுதாயத்தினருக்கு இட்டுக் காட்டுவதும், ஊக்குவிப்பதுமே இன்றைய சமுதாயம் செய்ய வேண்டிய தலையாய கடமையாகும்.

ஈழத்தமிழர்களின் "முது சொம்" என்ற வகையில் கூத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட தமிழ்த் தேசிய சிந்தனையாக்கத்தின் விளைவு இது என்று கூடச் சொல்லலாம். எனவே எமக்கான தனித்துவங்களையும் மரபுகளையும் பேணுகின்ற வகையிலும், எதிர்வினைகளின் அழகியல் முனைப்பிலிருந்து விடுபட்டுத் தெளிவதற்கும் நாம் இவ்வாறான கலைகளை செம்மையாக ஆதரிக்க வேண்டும். இன்றைக்கு இதன் தேவை கட்டாயம் என்றும் கூறலாம்.

"உலகியல் நடைமுறைக்கு ஏற்ப உதவி செய்யும் உயர்ந்த குணத்தோடு வாழ வேண்டும். கற்க வேண்டியவைகளைத் தேடி நாள்தோறும் கற்றுக்கொண்டேயிருத்தல் வேண்டும். பிறருடைய வாழ்க்கை முன்னேற்றத்தைப் பற்றிப் பொறாமையால் தவறாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்."



escape artists motion pictures and r.s.infotainment present
young superstar silambarasan and trisha in

# விண்ணைத்தாண்டி வருவாயா

## விடலைப் பருவத்தின் வேதனை விளையாட்டு

**காதலின்** வலியும் வலிமையும் ஒன்று சேர்ந்து உணர்வை உலுக்கி எம்முள் ஊடுருவுகின்ற ஒரு படம்தான் 'விண்ணைத்தாண்டி வருவாயா'. ஏ. ஆர்.ரஹ்மானின் இசையில் கௌதம் வாசுதேவ்மேனன் இயக்கத்தில் வெளி வந்துள்ள இப்படத்தை உதயநிதி ஸ்டாலினின் 'ரெட் ஜெயண்ட்' மூவீஸ் தயாரித்துள்ளது.

அடி, தடி, ஆக்ஷன் இல்லாத மென் மையான காதல் கவிதையாக இப் படத்தை எடுத்துள்ளார் இயக்குனர். முழுக்க முழுக்க காதலன், காதலியை மையப்படுத்திய காதல் கதை. கௌதம் மேனன் தன் காதலிக்கு போட்டுக் காட்ட வேண்டிய படத்தை, சொல்ல வேண்டிய காதலை தமிழ் மக்கள் எல்லோரிடமும் பகிர்ந்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இஞ்சினியரிங் முடித்து வேலை யில்லாமல் அலையும் இளைஞனுக்கு சினிமா இயக்குனராக ஆசை. தான் காதலிக்கும் பெண்ணுக்கோ இளை ஞனை விடவும் வயது அதிகம். சினி மாவே பார்க்காத தீவிர கிறிஸ்தவ குடும் பம். அதனால் எதிர்ப்பு. இத்தனைக்கும் மத்தியில் இந்தக் காதல் இளசுகளின் போராட்டத்தை மிக தத்ரூபமாக படமாக்கியுள்ளார் இயக்குனர்.

கார்த்திக்கின் (சிம்பு) கண்களில் விழுகிறாள் ஜெஸ்ஸி (த்ரிஷா). விழுந்தவளுக்கு எழுந்திருக்க மனமில்லை. விழுங்கியவனுக்கு விட்டுவிட மனசில்லை. காதல்! பொலாரிஸில் பணியாற்றும் ஜெஸ்ஸியின் மலையாள கிறிஸ்தவமும், மெக்கானிக்கல் இஞ்சினி யரிங் படித்துவிட்டு சினிமாவைக் காதலிக்கும் கார்த்திக்கின் தமிழ், இந்து அடையாளங்களும் குறுக்கே மறித்தாலும், வயது வித்தியாசம் சின்ன வேகத் தடையாக குறுக்கிட்டாலும் காதல் பூக்கிறது. அதுதானே காதல். பெற்றோரின் எதிர்ப்பு, ஜெஸ்ஸிக்கு வேறு கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யும் வழக்கமான முடிவுக்குத் தள்ளுகிறது. ஆனால் கடைசி நேரத்தில் அந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை என ஜெஸ்ஸி கூற கல்யாணம் தடைபடுகிறது. காதலைக் காப்பாற்றிய ஜெஸ்ஸிக்கு தன்னையே அர்ப்பணிக்கத் தயாராகிறான் கார்த்திக்.

ஆனால் அவளோ புதிராய், குழப்ப மாய், கவிதையாய், புயலாய், அப் போதே சாப்பிடத் துடிக்கும் இனிய பிசா சாய் பிடிக்குள் அடங்காத அழகிய மீனாய் நெருங்கியும் விலகியும் விலகியே போகி றாள். இருவரும் இணைந்தார்களா என் பதுதான் கிளைமாக்ஸ். ஆனால் கொஞ் சம் செயற்கை கலந்த வித்தியாசத்துடன்!



அந்தப் பக்கம், இந்தப் பக்கம் திரும்பா மல் துல்லியமாக நூல் பிடித்ததுபோல ஒரு காதல் கதையைச் சொல்லியிருக்கிறார் கௌதம் வாசுதேவ் மேனன். துணைக் கதை களோ உதிரி இழைகளோ எதுவும் இல்லாத சுத்தமான காதல் கதை. காதலின் சுகமும் பிரிவின் வலியும் நிதானமாகச் சொல்லப் படுகின்றன. சிம்பு தன் காதலை வளர்த்தெடுக்கும் விதமும் த்ரிஷா அதற்குச் சாதகமாக எதிர்வினை யாற்றுவதற்கான சந்தர்ப்பங்களும் சுவாரஸ்யம்!

இந்தப் படத்தின் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மான் என்று தான் சொல்ல வேண்டும். இசையை நீக்கிவிட்டு இந்தப்

படத்தின் காட்சிகளைப் பார்க்க முடியுமா என்பது சந்தேகமே! முதல் காட்சியிலிருந்து முடிவுக் காட்சிவரை, இசையும் காதலும் பின்னிப் பிணைந்து இதயத்தைப் போட்டுத் தாக்குகின்றன.


நின்றுபோன திருமணத்துக்காக போட்ட அலங்கார விளக்குகள் மின்னும் ஒரு இரவில், சுவரேறிக் குதித்து ஜெஸ்ஸியை கார்த்திக் சந்திப்பதும், அந்த பின்னிரவுத் தனிமையில் பரிமாறிக் கொள்ளும் முத்தங்களும் கவிதை. காதலில் விழுந்துதான் பார்ப்போமே என எல்லோரையும் தவிக்க வைக்கும் காட்சிகள்.

வழமையான சிம்புவின் படத்தில் இருக்கின்ற ஸ்டைல் இல்லை. பஞ்ச் வசனம் இல்லை. காதலில் உருகும் இளைஞனின் வேடத்தைக் கச்சிதமாகச் சித்தரிக்கிறார். காதலின் உற்சாகம், ஏமாற்றத்தால் வரும் ஆத்திரம், பிரிவின் வலி எல்லாமே அளவெடுத்தது போல இருக்கிறது.

த்ரிஷாவுக்கு இது முக்கியமான படம். இயல்பான அழகைத் தன்னைச் சுற்றிலும் படர விட்டபடி அவர் நடந்து செல்லும் காட்சிகள், குறும்பான பார்வையிலும் சின்னச் சின்ன சிரிப்பிலும் நுட்பமான முக பாவ மாற்றங்களிலும் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதம் ஆகியவை ரசிக்கும்படி உள்ளன. ரயிலில் சிம்புவின் அதிரடி முயற்சிகளை எதிர்கொள்ளும் விதம், இது சரியாக வராது என்று அழுத்தமாகச் சொல்லும் இடம், கிளைமாக்ஸில் சிம்பு பேசப் பேச உருகும் காட்சி என்று பல இடங்களில் நன்றாக நடித்திருக்கிறார். படம் முழுவதும் புடவைக்கடை மாடல்போல இவர் வருவது வித்தியாசமான அழகாகக் காட்சியளிக்கிறது. துளிக்கூட உடலைக் காட்டாமல் படம் முழுவதும் வசீகரிக்கிறார்.







ஒளிப்பதிவாளர் மனோஜ் அமெரிக்காவையும் கேரளாவையும் சென்னையின் சில இடங்களையும் அழகாகப் படம் பிடித்திருப்பதுடன் த்ரிஷாவை மிக அழகாகக் காட்டியிருக்கிறார். படத்தில் பல விஷயங்கள் சிறப்பாக இருந்தாலும் படத்தின் நீளம் கௌதம் மேனனின் எல்லாப் படங்களையும் போல இந்தப் படத்திலும் அலுப்பூட்டுகிறது.

கதையில் இளமை தெரிகிறது. த்ரிஷா முகத்தில் இல்லை. வார்த்தைக்கு வார்த்தை கார்த்திக் என்ற பெயரும், ஜெஸ்ஸி என்ற பெயரும் நம் காதுகளை குடைந்து கொண்டே இருக்கிறது. காதலை அவ்வளவு தடவி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. கதாநாயகன், நாயகி, கேமரா மேன் என்று மூன்று பாத்திரங்களையே படம் சுற்றி வருவது நிறையவே நம்மை அலுக்க வைக்கிறது. படம் நீண்ட நேரம் இழுப்பது போன்ற உணர்வை கொடுக்கிறது.

இடைவேளைக்கு பின்னர் படம் மிக மெதுவாக நகர்கிறது. வெவ்வேறு இடங்களில் த்ரிஷாவும் சிம்புவும் சந்தித்துப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். காதலின் வெவ்வேறு உணர்வு நிலைகள் பற்றிச் சலிக்கச் சலிக்கப் பக்கம் பக்கமாகப் பேசிக்கொண்டே போகிறார் மேனன். காதலை மென் தென்றலாக உணரவைப்பதற்காக ரொம்பவே மெனக்கெடுவதாகத் தெரிகிறது.

ஆனால் திரும்பத் திரும்ப ஒரே விதமான காட்சிகள் வந்து அலுப்பூட்டுகின்றன. இன்னும் கொஞ்சம் காட்சிகளை வெட்டியிருக்கலாம்.

நான் ஏன் ஜெஸ்ஸியைக் காதலித்தேன்? நீ ஏன் கார்த்தி என்னைக் காதலிச்சே? நீ ஏண்டா அந்தப் பொண்ணை காதலிச்சே? இப்படி படம் முழுக்க யாராவது ஒருவர் மாறி மாறி கேட்டுக் கொண்டே உள்ளனர். இடைவேளைக்குப் பிந்திய சில காட்சிகள் இழுவை. ஆனால் இத்தனையையும் தாண்டி, படம் முடிந்து வெளியே வந்தபோது ஏதோ ஒரு தாக்குதலில் பாதித்த வலியும் உணர்வும் மனதில் தளும்புவது நிஜம்தான்!

•

கண்ணைக் குத்தும் பளீரிடும் வர்ணங்கள் இல்லாமல் பசுமை, வான் நீலம் என படம் முழுதுமே மென்மையான டோனில் அழகு ததும்ப படமாகியிருக்கிறது. முக்கால்வாசிப் படம் வரை வரும் அழகான காதல் காட்சிகளுக்காகவும், ஒரு அழகிய விஷுவல் ட்ரீட்டுக்காகவும் நன்றி கௌதம் மேனன்!

ஆக மொத்தத்தில் 'விண்ணைத் தாண்டி வருவாயா' வித்தியாசமான வானம்.

விக்கிரமாதித்தன்


மன்னா! நீங்கள் சீறும் சிங்கம், பாயும் புலி, பதுங்கும் சிறுத்தை...
புலவரே! நிறுத்தும்! புகழ்ந்து பாடச்சொன்னால் ஒரேயடியாய் புளுகிப் பாடுகிறீரே?
என்னைப் புகழ்ந்து பாட வரும் புலவர்கள் எல்லோரும் வறுமையிலேயே உள்ளார்களே.. என்ன காரணம் அமைச்சரே?
இலக்கியத்துக்கு அவர்கள் செய்யும் பாவமும் துரோகமும்தான் மன்னா!
தொலைக்காட்சியில் பணிபுரிந்துகொண்டிருந்தவரை அரசரின் அறிவிப்பாளராக நியமனம் செய்தது தவறாகிவிட்டது!
ஏன் என்ன நடந்தது?
நமது மன்னர் அவைக்கு வரும்போது "பதவிக்கு வந்து சில மாதங்களே ஆன புத்தம் புதிய மன்னரைக் காணத்தவறாதீர்கள்" எண்டு கூவுறார்!
மண்டையன் மார்த்தாண்டன்.
மன்னா! எதிரி நாட்டு மன்னன் படைகளுடன் வந்திருக்கிறான்.
சரி! கறுப்புக் கொடி காட்டி அவர்களுக்கு நம் எதிர்ப்பை உணர்த்துவோம்
மன்னர் போதையில் இருக்கிறாரெண்டு எப்படிக் கண்டு பிடிச்ச?
'எதிரி மன்னன் உங்களுடைய அத்தியாயத்தை விரைவில் முடிக்கப் போவதாகக் கூறுகிறார்' என்று சொன்னேன்.
'அவன் என்னை வைத்து கதைகூட எழுது கிறானா?' எண்டு கேட்கிறார்.

# வேலி மேயும் பயிர்கள்

டொக்டர்.எம்.கே. முருகானந்தன்.

மகளைவிட தாய் வெட்கத்தில் இருப்பதாகத் தெரிந்தது. சற்றுத் தயங்கிய பின் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். "இந்தப் பிள்ளை மெலிஞ்சு கொண்டு போறாள். சோம்பிக்கொண்டு கிடக்கிறாள். பசியும் குறைவு. நோடியாக விடயத்திற்கு வராது சுற்றி வ[illegible]க் கொண்டிருந்தாள் அம்மா.

சற்று மெல்லிய தோற்றம் கொண்டவளாயினும் மகளின் முகத்தில் நோயின் வாட்டம் தென்படவில்லை. அழகாக திரட்சியாக பதின்ம வயதுகளின் கவர்ச்சியுடன் தோன்றினாள். மகளிலிருந்து கண்ணை விலக்கி அம்மாவில் பார்வையைப் பதித்தேன். சற்று முன் நகர்ந்த அம்மா தனது குரலைத் தாழ்த்தி இவளுக்கு சரியா வெள்ளை படுகுது. உருகிக் கொண்டு போறாள் என்று வேதனை கலந்த குரலில் சொன்னாள்.



வெளிப்படையாகப் பேசுங்கள்.

இவர்கள் சற்று வெட்கப்பட்டவர்கள். காலம் மாறிவிட்டது. இன்றைய இளம் பெண்கள் பலர் தாயின் துணையின்றித் தனியாகவே வந்து தங்கள் பாலியல் பிரச்சினை களை வெளிப்படையாகப் பேசுமளவிற்கு முன்னேறி விட்டார்கள். தன்னம்பிக்கை வளர்ந்து விட்டது. திருப்தியடையக் கூடிய மாற்றம் என்பதில் சந்தேகம் இல்லை.

பாலியல் உறுப்புகளில் அரிப்பு, வேறு நோய்கள், மாதவிடாய்ப் பிரச்சனைகள், பாலுறவின் போது ஏற்படக் கூடிய உடல், உளப் பிரச்சனைகள் என எதுவானாலும் மருத்துவருடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். பெண்களுக்கு மட்டுமின்றி ஆண்களுக்கும் இது பொருந்தும்.

### வெள்ளைப்படுதல்


இந்த வெள்ளைப்படுதல் என்பது பெரும்பாலும் நோயே அல்ல. Vag[illegible]al discharge என ஆங்கி[illegible]ல் சொல்வதை நல்ல தமிழில் [illegible]ிக் கசிவு எனலாம். பெண் பாலுறுப்பிலிருந்து சற்றுத் திரவம் கசிவது இயற்கையானது. வாயிலிருந்து எச்சில் ஊறுவது போன்றது. வாய் எந்த நேரமும் ஈரலிப்பாக இருப்பதற்குக் காரணம் எச்சில். அதேபோல பெண்ணுறுப்பு அதன் சுரப்புகள் காரணமாக எப்பொழுதும் ஈரலிப்பாக இருக்கும். கிருமிகள் தொற்றாதிருக்கவும், உடலுறவின் போது இன்பம் அளிக்கவும், மகப்பேற்றின்போது துணையாக இருப்பதற்கும் இது அவசியம். எனவே குழந்தை பெற்றெடுக்கக்கூடிய வயதுகளில் மிகவும் அவசியமானது. விசனிக்க ஏதும் இல்லை.

உணவில் ஆசை ஏற்பட்டால் எச்சில் அதிகம் ஊறும். அதேபோல பாலுணர்வு மேலெழும்போது யோனியிலிருந்து சுரப்பது அதிகமாகும். பதின்ம வயதுகளில் பாலியல் உணர்வுகள் மெருகேறும் போது பையன்கள் தங்கள் ஆண்குறிகள் திடீர் திடீரென விறைப்படைவது கண்டு வியப்பிற்கும் குற்ற உணர்விற்கும் ஆளாவது போலவே பெண்பிள்ளைகளும் இந்த வெள்ளைப்படுதலைக் கண்டு அசுசை அடைகிறார்கள். தாய்மார் தங்கள் இளமை நினைவுகளை மீ[illegible]ினைத்து தங்கள் பெண் பிள்[illegible]ளைகளுக்கு ஆறுதல் அளிப்பது முக்கியமாகும். ஆயினும் பல நோய்களாலும் யோனியிலிருந்து திரவம் கசியக் கூடும் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

### சாதாரண வெள்ளைப்படுதல்

சாதாரண வெள்ளைப்படுதல் என்பது சற்று வழவழப்பான எச்சில் போன்ற தெளிவான திரவமாகும். பிறப்பு உறுப்பில் உள்ள கருப்பைக் கழுத்திலிருந்து பெருமளவு சுரக்கும். அதேபோல யோனியின் சுவர்களிலிருந்தும் கசியும். சுரக்கும் போது இது வெண்மையாக இருந்தாலும் காற்றுப் பட்டதும் சற்று மஞ்சள் நிறமாகலாம். அதேபோல உள்ளாடைகளில் பட்ட பின்னரும் நிறம் மாறலாம். உடலிலுள்ள பெண்ஹோர்மோன் ஆன ஈஸ்ரோஜின் இதை ஓரளவு கட்டுப்படுத்துகிறது.






வழமையாக ஓரளவு இருக்கும் இந்த வெள்ளைப்படுதல் மன அழுத் தங்களின்போது சற்று அதிகரிக்கலாம். ஏனைய மன அழுத்தங்கள் போலவே வெள்ளைப்படுதல் 'பற்றிய பய உணர்வு, அசுசை ஆகியவை உள்ளதை மேலும் மோசமாக்கிவிடும். பல இளம் பெண்கள் மாதவிடாய்க்கு இடைப்பட்ட சில தினங்களில் இது அதிகமாவதை அவதானித்திருப்பர். சூலகத்திலிருந்து முட்டை வெளி யேறும் நேரத்தில் இவ்வாறு கூடியளவு வெள்ளைப்படலாம்.



கருவுற்று இருக்கும் காலங் களிலும் வெள்ளைப் படுவது அதிகரிக் கும். முன்னரே குறிப்பிட் டது போல பாலியல் ரீதியான உணர்வு கள் கிளறும்போதும் வெள்ளைப்படு தல் அதிகரிக்கும்.

வேறு நோய்கள் காரணமாக தொற்றுநோய், புற்றுநோய், ஒவ் வாமை போன்ற பல காரணங் களாலும் வெள்ளைப்படுதல் ஏற் படலாம். நீரிழிவு இருந்தால் பங்கஸ் தொற்று நோயாலும் தோன்றலாம். ஆனால் இவற்றின்போது பெரும் பாலும் அரிப்பு, எரிவு, கெட்ட மணம் போன்றவை சேர்ந்திருக்கும். வேறு நோய்கள் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகப்படுவதற்கு உரிய அறிகுறிகள் என்ன?

1. இதுவரை இல்லாதவாறு திடீரென அதிகரிக்கும் வெள்ளைப் படுதல்.

2. அதன் நிறத்தில் மாற்றம்.

3. அதன் மணத்தில் திடீரென ஏற்படும் மாற்றம்.

4. பெண் உறுப்பிலும் அதனைச் சுற்றியும் எரிவு, சினப்பு, அரிப்பு போன்றவை தோன்றுதல்.

5. மாதவிடாய் இல்லாத தருணங் களில் வெள்ளையில் இரத்தக் கறையும் தென்படல்.

வெள்ளையுடன் இரத்தக் கசிவும் சேர்ந்திருந்தால் புற்றுநோயாகவும் இருக்கலாம். ஆனால் இது பெரும் பாலும் மாதவிடாய் நின்ற பெண்களி லேயே அதிகம் ஏற்படும். நீங்கள் செய்யக் கூடியவை என்ன?

உங்கள் பாலுறுப்பை சுத்தமாக வும் ஈரலிப்பு இன்றியும் வைத்திருங் கள். பல பெண்கள் உடலுறவின் பின் னரும் மாதவிடாய் காலங்களிலும் தமது உறுப்பைச் சுத்தமாக வைத்திருப் பதாகக் கூறி நீரை உள்ளுக்குள் அடித்துச் சுத்தப்படுத்துவார்கள். இது தவறான முறை. அவ்வாறு செய்யும் போது பெண் பாலுறுப்பின் மென் திசுக்களில் இயல்பாக இருக்கும் நல்ல கிருமிகள் அழிந்து அங்கு நோயைப் பரப்பும் தீய கிருமிகள் பரவிவிடும்.



மாதவிடாய் நேரங்களில் பாட்ஸ்(Pads) மட்டுமே உபயோகி யுங்கள். உள்ளே வைக்கும் டம்புன்ஸ் (tampons) கூடவே கூடாது. உள்ளா டைகள் எப்பொழுதும் பருத்தித் துணியால் ஆனதாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள். சில்க், நை லோன் போன்றவை ஈரத்தை உறிஞ் சமாட்டாது. அத்துடன் வியர்வையை யும் உறிஞ்சமாட்டாது. காற்றோட்டத் தையும் தடுக்கும். இவை காரணமாக அரிப்பும் தொடர்ந்து கிருமித் தொற் றும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அத்து டன் மிக இறுக்கமான உள்ளாடை களும் கூடாது. பாலுறுப்பை அண்டி யுள்ள பகுதிகளில் வாசனை ஸ்ப்ரே, பவுடர் போன்ற பொருட்களையும் உபயோகிக்க வேண்டாம். ஈஸ்ட் கிருமித் தொற்று இருந்தால் லட்டோ பசிலஸ் உள்ள யோகட், தயிர் போன்ற வற்றை உண்பது நல்லது. கடுமை யான அன்ரிபயரிக் உபயோகிக்கும் போதும் தொற்றுதலைத் தடுக்க ஈஸ்ட் உண்ணலாம். பாலுறவின்போது ஆணுறை உபயோகிப்பதன் மூலம் ஒருவரிலிருந்து மற்றவருக்கு கிருமிகள் பரவுவதைத் தடுக்கலாம். நீரிழிவு இருந்தால் உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவை சரியான அளவில் கட்டுப் படுத்தி வையுங்கள். இல்லையேல் பங்கஸ் கிருமித்தொற்றும் ஏற்படும்.

**எப்பொழுது டொக்டரிடம்...**

வெள்ளைப்படுதலுடன் காய்ச் சல், அடிவயிற்றில் வலி போன்றவை

இருந்தால் கட்டாயம் மருத்துவரைக் காணவேண்டும். நீங்கள் உடலுறவு கொண்டவருக்கு சிபிலிஸ், கொனரியா, கிளமிடியா, எயிட்ஸ் போன்ற பாலியல் நோய்கள் இருந் திருக்கலாம் என சற்று சந்தேகம் இருந் தாலும் மருத்துவரை உடனடியாக அணுகுங்கள்.

வெள்ளைப்படுதலுக்கு மேலாக பாலுறுப்புப் பகுதியில் அரிப்பு, சிறிய கொப்புளங்கள், புண் போன்றவை இருந்தால் நிச்சயம் மருத்துவ உதவி அவசியம். எனவே வெட்கத்தை விட் டொழியுங்கள். உங்கள் உடல் நலத் தைப் பேண உங்கள் மருத்துவருடன் ஒளிவு மறைவின்றி வெளிப்படை யாகப் பேசுங்கள்.



மைக்ரோமேக்ஸ் நிறுவனம் செல்போன் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனம் தற்போது புதிய ரக எம்.டி.வி. எக்ஸ் 360 என்ற பிராண்ட் பெயரில் செல்போனை அறிமுகம் செய்துள்ளது. இந்த செல்போன் புளூடுத் வசதி, 3டி மியூசிக், 8 ஜி.பி. நினைவகத்திறன் வீடியோ ரெக்காடர் இரண்டு சிம்கார்ட் வசதி ஜி.பி.ஆர்.எஸ் உள்ளிட்ட பல சிறப்பம்சங்கள் இடப்பெற்று உள்ளன. எம்.டி.வி. நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த செல்போனை அறிமுகப்படுத்தி உள்ளதாக மைக்ரோமேக்ஸ் நிறுவனம் தெரிவித்துள் ளது.


## அடுத்த இதழில் எதிர்பாருங்கள்!



ஒவ்வொரு இருக்கிறமுடனும்
ரூபா 35
பெறுமதியான 5 ஆம் வகுப்பு
புலமைப்
பரீட்சை பல்தேர்வு
வினாவிடைத்
தொகுப்பு இலவசம். உங்கள்
பிரதிகளுக்கு முந்துங்கள்.




# எல்லாவிதமான வீடியோக்களையும் கணனியில் பார்வையிட

## FLV PLAYER



கால ஓட்டத்தில் புதிய கண்டுபிடிப்புகளாக Divx, FLV, MP4, MKV என்று வீடியோக்கள் புதிது புதிதான வடிவங்களில் வருகின்றன. இணையத் தில் பெரும்பாலும் பகிரப்படும் வீடியோக்கள் இந்த வடிவங்களில்தான் வருகின்றன. தரவிறக்கி அவற்றை நீங்கள் பார்க்கமுற்படும் போது Codec இல்லை என்ற பிழைச்சொல் வரும். சிலவற்றில் DVD வீடியோக்கள் ஓடாது.

இது போன்ற வீடியோக்கள் திறக்க உங்கள் கணனியில் அவற்றிற்கு ஏற்ற கோடக் (Codec) தேவைப்படும். விண்டோஸ் இயங்குதளத்துடன் வருவது விண்டோஸ் மீடியா பிளேயர். நீங்கள் திறக்கும் வீடியோ கோப்புகள் இதில்தான் தெரியும். ஆனால் விண்டோஸ் மீடியா பிளேயர் எல்லா வீடியோ வடிவத்திற்கான கோடெக்குகளுடன் வருவதில்லை.

அவற்றை இணையத்தில் தேடி உங்கள் கணனியில் நிறுவ வேண்டி வரும். சில சமயம் வேலை செய்யும். பல நேரம் காலை வாரும். இந்த இம்சையில் இருந்து விடுபட ஒரே வழி விண்டோஸ் மீடியா ப்ளேயரை உபயோகிப்பதை நிறுத்தி விடுங்கள். எல்லா வீடியோ கோப்புக ளையும் தடை இன்றி திறக்க ஒரு மென்பொருள் உள்ளது. அதுதான் VLC Media Player.

கணனிக்கான மிகச்சிறந்த மீடியா பிளேயர் இது. இதற்கென நீங்கள் எந்த வீடியோ கோடக் குகளையும் தனியே நிறுவ வேண்டியதில்லை. எல்லாம் உள்ளடங்கியே வருகிறது. அடிக்கடி மேம்படுத்தப்பட்டு வருவதால் அனைத்து வித மான வீடியோவையும் திறக்கிறது.

இது முற்றிலும் இலவசம். தற்சமயம் ஒரு வினாடிக்கு பதினேழுக்கும் மேற்பட்டோர் இதனை தரவிறக்குவதாக அவர்கள் இணைய தளத்தில் குறிப்பிட்டு உள்ளார்கள். இது விண் டோஸ் லினக்ஸ் மேக் ஓஎஸ் என்று பெரும்பா லான இயங்குதளங்களில் வேலை செய்யும். இந்த சுட்டிக்கு சென்று உங்கள் கணனி இயங்குதளத்திற்கு ஏற்ற விஎல்சி மீடியா ப்ளேயரை தரவிறக்கி உங்கள் கணனியில் நிறுவிக் கொள்ளுங்கள். http://www.videolan.org/vlc/

இணைய உலாவிகளில் பயர்பொக்ஸ் எப்படி இன்டர்நெட் எக்ஸ்புளோரருக்கு மாற்றாக உள்ளதோ அது போல் விண்டோஸ் மீடியா பிளேயருக்கு மிகச்சிறந்த மாற்று விஎல்சி மீடியா பிளேயர். இது ஒவ்வொருவர் கணனியிலும் கட்டாயம் இருக்க வேண்டிய மென்பொருள்.

விஎல்சி மீடியா பிளேயர் வீடியோ பார்ப் பதற்கு மட்டுமல்லாமல் வீடியோக்களை வெட்டு வது இணைய ஒளிபரப்புகளை பார்க்க, வீடியோ கன்வெர்ட் செய்ய, உங்கள் வீடியோக்களை இணையத்தில் நேரடியாக ஒளிபரப்ப, உங்கள் கணனி ஸ்கீரின் காட்சிகளை பதிவு செய்ய என பல விதங்களில் பயன்படுகிறது.

# சுயநலME

சிறுகதை

அந்தக் கவிதையை அவன் பத்தாவது தடவையாகப் படித்து விட்டான். இன்னும் அவனுக்குச் சலிக்கவில்லை. மீண்டும் ஒரு முறை

சுயநலமி நீயென்று
சுட்டு விரல் முன்
நீட்டும் போது
கட்டை விரல் காட்டுவது
முட்டாளே,
உன்னையே தான்!

சொற்செட்டும் கவிச்சிறப்பும் கருத்தாழமும் படிக்கப்படிக்க அவனை மெய்சிலிர்க்கச் செய்கின்றன. கவிதை என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்.

பிரபல பத்திரிகையில் பிரபலமாகப்போகும் கவிஞர் வாத்துக்குஞ்சு வரதராஜனின் கவிதை. எத்தனை பேர் கண்களில் படப் போகிறது! எத்தனை பாராட்டுக் கடிதங்கள் வந்து குவியப் போகின்றன!! யாரிந்த வா.வ என்று எத்தனை 'வண்ணத்துப் பூச்சிகள்' (அஃதாவது வனிதாமணிகள்) விழியுயர்த்தப் போகின்றன!!!



அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்படியாவது இந்தக் கவிதையை அந்த எதிர் வீட்டு அகிலாவின் கண்ணிற் படச் செய்து விடவேண்டும். அதன் பின் அவளது ஒளனப் பார்வை குளிர்ந்த தென்றலாக மாறி...

வாசற்கதவு தட்டப்படும் ஒலியில் அவன் கற்பனை தடைப்பட எரிச்சலுடன் கதவைத் திறந்தவன் விழிகளில் 100 வாட்ஸ் பல்ப். அவன் எதிர்பார்க்கவேயில்லை. எதிர்வீட்டு ஏந்திழையின் ஒரே தம்பி அவன் வீட்டுப்படியேறி உள்ளே வந்தான்.

"இந்த வார கர்ப்பூரத்தை அக்கா வாங்கிட்டு வரச் சொல்லிச்சு"

இன்பத்தேன் ஒரு லீட்டர் அவன் காதில் வந்து பாய்ந்தது.

ஆஹா! என் கவிதை இதில் வெளியான சேதி எப்படியோ அவள் காதுக்கும் எட்டி விட்டது. தூது விட்டிருக்கிறாள் தம்பியை. இனியென்ன? கவிஞனல்லவா -அவன் கற்பனை மீண்டும் சிறகடித்துப் பறக்கலாயிற்று.

"கடையில அக்கா கேட்டிச்சாம் எல்லா பொஸ்தகமும் தீந்திடிச்சாம்"

எத்தனை இனிப்பான சேதி! அவன் கவிதை வெளியான இதழ் யாவுமே விற்றுப்போய் விட்டனவாம்.

தனது இதயத்தையே எடுத்துக் கொடுப்பது போல அந்த இதழைப் பக்குவமாக எடுத்து அவளது தம்பியின் கையில் திணித்தான்.

"கவனம்"

போகிற போக்கில் அவளின் தம்பி சொன்ன வார்த்தைகள் தேனைத் தேளின் விஷமாக மாற்றும் மாயத்தைச் செய்து விட்டன.

"அக்கா எழுதின கதை ஒன்னு இந்த இதழில வந்திருக்காம்"

அவன் புரட்டிப்பார்க்காத பக்கங்களுள் 'அகல்யா' எழுதிய 'கிணற்றுத் தவளை'யும் ஒளிந்திருந்ததை பாவம், வாத்துக்குஞ்சு வரதராஜன் அறிந்திருக்கவில்லை!

வேதா



## தொல்லை தரும் மென்பொருட்களை நீக்க

கணனியில் தினமும் புதியவை பற்றி அறியும் ஆர்வம் உள்ளவர்கள் பலவகையான மென்பொருட்களையும் இன்ஸ்டோல் செய்து பயன்படுத்த முயற்சிப்பார்கள். சில மென்பொருட்கள் இலகுவாக இன்ஸ்டோல் ஆகிவிடும். ஆனால் அவற்றை தேவையற்ற நேரத்தில் நீக்கிவிட முயற்சிக்கும் போது போகமாட்டேன் என அடம் பிடிக்கலாம். விண்டோஸ் கணனிகளில் ஏற்கனவே இருக்கும் புரோகிராம் மனேஜரும் தன்னால் இக்குறிப்பிட்ட மென்பொருளை நீக்க முடியாதென கைவிட்டு விடலாம். இந்தத் தருணத்தில் மிகவும் உதவக்கூடியது Revo Uninstaller எனும் மென்பொருளாகும். இதன் சிறப்புக்கள் என்ன என்று பார்த்தால்


1. விண்டோஸ் இல் இருக்கும் Add Remove புரோகிராம் மனேஜருக்கு மாற்றீடாக பயன்படக் கூடியது.

2. தேவையற்ற மென்பொருட்களை நீக்குவது மட்டுமல்ல குறிப்பிட்ட மென்பொருள் கணனியில் நிறுவியதற்கான தடயங்கள் அனைத்தையும் அழித்துவிடும். (விண்டோஸ் இல் இருக்கும் Add Remove புரோகிராம் மனேஜர் இதை செய்யாது)

3. குறிப்பிட்ட மென்பொருளை முழுவதுமாக அழித்தல் அல்லது Start up மற்றும் Sort cut களை மட்டும் அழித்தல் போன்ற ஒப்ஸன்கள் கொண்டிருத்தல்.

4. கணனிக்கு தேவையான 8 வகையான கிளினிங் டூல்களை உள்ளடக்கி இருத்தல்.

போன்றவற்றைக் கொண்டிருக்கின்றது. http:www.revouninstaller.com என்ற தளத்திற்குச் செல்வதன் மூலம் மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளலாம்.




# talk சில நுட்பங்கள் :

நீங்கள் Google talk ஐ பயன்படுத்துபராக இருப்பீர்கள். ஆனால் அதில் உள்ள நுட்பங்கள் சிலருக்குத்தான் தெரிய வாய்ப்புண்டு. அவற்றில் சிலவற்றை இங்கே தருகின்றோம்.

சட்டிங்க் செய்கையில் பாண்ட் அளவை கூட்டி குறைப்பதற்கு கீபோட் இல் கன்ரோல் விசையை அழுத்தியபடி மவுஸ் வீலை சுற்றுங்கள். பாண்ட் அளவு வாசிக்க இலகுவாக கூடி குறையும்.

சட்டிங்கில் டைப் செய்யும் இடம் எப்போதும் ஒரு லைனில் இருக்கும் இதை அதிகரிக்க செய்வதற்கு கீபோட்




இல் சிப்ட் விசையை அழுத்தியபடி எண்டர் விசையை தட்டிக் கொண்டே போக டைப் செய்யும் இடத்தின் அளவு அதிகரிக்கும்.

சட்டிங்கில் டைப் செய்யும் எழுத்தை போல்ட் செய்ய *this* இவ்வாறு எழுதுங்கள்.


சட்டிங்கில் டைப் செய்யும் எழுத்தை இட்டாலிக் செய்ய _this_




இவ்வாறு எழுதுங்கள்.

திறக்கும் விண்டோக்களை tab விசை மூலம் கையாளலாம். ஒவ்வொருமுறை விசையை அழுத்தும் போதும் அடுத்த அடுத்த விண்டோக்கள் திறக்கும். tab விசையுடன் எண்டரையும் தட்டினால் சட் விண்டோ முழுதாக திறந்து கொள்ளும். கன்ரோல் விசையுடன் tab ஐ அழுத்தினால் சட் விண்டோவை தானாகவே முழுதாக திறக்கலாம்.

Google talk இல் ஒரே நேரத்தில் சுமார் 32767 நீளமான எழுத்துருக்களை எழுதலாம்.






# Iphone மூலம் காரை Start செய்யலாம்!

Smart Phoneகள் அறிமுகமாகிய பின்னர் அதன்மூலம் என்ன செய்யலாம் என்பதை விட என்ன செய்ய முடியாது என்னும் நிலை தான் இன்று தோன்றியுள்ளது. ஏற்கனவே பல சௌகரியங்கள் வந்த நிலையில் தினம்தினம் ஒவ்வொரு புதுமைகளும் வந்தவண்ணம் இருக்கின்றது. அதன்படி தற்போது எங்கள் கார்களை எம்மிடம் உள்ள Iphone மூலம் ஸ்டாரட் பண்ணலாம். ஒரு Remort Starter க்குரிய அத்தனை வேலைகளையும் இந்த Iphone மூலம் செய்யலாம்.

கதவைத் திறப்பது, பூட்டுவது, Trunk ஐ திறப்பது, Engine ஐ Start பண்ணுவது, Stop பண்ணுவது, போன்ற அனைத்து வேலைகளையும் இனி IPhone மூலமே மேற்கொள்ளலாம்! இதைப்பற்றி மேலும் அறிய http://www.viper.com/smartstart/ என்ற முகவரியில் சென்று பாருங்கள்.

# வெந்த மண்ணில் என்ன விடுப்பு?

பதுளை, வெலிமட, மஹநுவர,
தம்புல்ல, குருநாகல, வியங்கொட,
பொலன்னறுவ, கடவத்த, கெக்கிறாவ,
குளியாப்பிட்டிய, கொஹுவல, றம்புக்கன

வழித்தடம் மாறிய வண்டிகள் எங்கும்
பழிகிடக்கின்றன 'யாப்பன' பார்க்க!

நகரத்துத் தெருக்களிலும்
நாகவிகாரை முன்னும்
நல்லூரான் வீதி தொட்டு
நாவாந்துறை வரையும்
வண்ண வண்ண வண்டி அணி
வந்து நிக்குது
கண்ணிரண்டும் கண்டு கண்டு
வலி எடுக்குது!

கொய்த கனிகளொடு
கொய்யாக் கனிவகையும்
வேர்க்கடலை, சோளம்,
விறகு, பலகை, முகம் -
பார்க்கும் கண்ணாடி,
பற்றறி, மின்சாதனங்கள்
பிளாஸ்ரிக்கில் பூவும்,



பிரமிக்கும் பாத்திரங்கள்
கண்டகண் மற்றொன்றும் காண முடியாது -
திண்டாட, யாழ்ப்பாணத்
தெருநீளம் கடை விரித்தீர்!
தெருவோரம் மரநிழலில்
தண்டிறங்கிச் சமைக்கின்றீர்
வருவோரை வரவேற்று
வரலாறு படைத்தவர் நாம்!
யாழ்ப்பாணத்தான் செல்வம்
யார் யாரோ கொள்ளையிட்டார்
நீர்வாரிப் போனாலும்
நின்று பிடிக்க வல்லான்!

தலையைக் கவிழ்த்தபடி
தாம் தொலைத்த வாழ்க்கையினை
தேடுகிறார் தமிழர்கள்!
தென்னிலங்கைச் சோதரர்கள்,
இந்த மயானத்தில்
என்னத்தைத் தேடுகிறீர்?
வெந்த மண்ணில் என்ன விடுப்பு?

-சோ.பத்மநாதன்-

# 15 -03-2010 முதல் 31-03-2010 வரை

# ராசிபலன்

## மேடம்



**அசுவினி, பரணி, கார்த்திகை 1**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

## இடபம்



**கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு காலதாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## கடகம்



**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு காலதாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



## சிம்மம்



**மகம், பூரம், உத்தரம் 1**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர்கள் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## கன்னி



**உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2**

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## துலாம்



**சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## விருச்சிகம்



**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு காலதாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிகம் அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## தனு



**மூலம், பூராடம், உத்தராடம் 1**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தைநலம். வீடு வாகனம் செலவை ஏற் படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிகம் அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## மகரம்



**உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு. வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

## கும்பம்



**அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3**

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம்இருக்கும். உறவினர். அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு. வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் தொல்லையுண்டு. மன அமைதி இருக்காது.

## மீனம்



**பூரட்டாதி4, உத்தரட்டாதி, ரேவதி**

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் . அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு. வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

**சோதிடர் பொ. சந்திரலிங்கம்**
**இணுவில், யாழ்ப்பாணம்.**



# 3 நண்பர்கள்



மூன்று நண்பர்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய பிளாட்ஸில் 110 வது மாடியில் வசித்து வந்தனர். ஒரு முறை வெளியே சென்று வரும் பொழுது கரண்ட் இல்லாததால் படிகளில் ஏறி நடந்து செல்ல வேண்டி இருந்தது. 110 வது மாடி வரை செல்ல போர் அடிக்கும் என்பதால் ஆளுக்கு ஒரு கதை சொல்வது என்று முடிவெடுத்து கதை சொல்ல ஆரம்பித்தனர்.

முதலில் ஒருவன் காதல் கதை சொல்ல ஆரம்பித்தான். அவன் கதை சொல்லி முடிக்கும் போது 50 மாடிகளை கடந்திருந்தனர். அடுத்தவன் ஒரு நகைச்சுவை கதையை ஆரம்பித்தான். அவன் முடிக்கும் போது 100 மாடிகளை கடந்து விட்டிருந்தனர். இன்னும் 10 மாடிகள்தான் பாக்கி என்பதால் மூன்றாமவன் தான் ஒரு சிறிய சோகமான கதை சொல்லவிருப்பதாக கூறி சொல்லி முடிக்கவும் மற்ற இருவரும் அவன் கதையை கேட்டவுடன் மயங்கி விழுந்தனர்.

அப்படி என்ன கதை கூறியிருப்பான் என்று யோசிக்கின்றீர்களா? அது என்ன கதை தெரியுமா?

வீட்டு சாவியை மறந்து காரிலேயே வைத்து விட்டு வந்துள்ளதாக கூறினான்



# சட்டம் பேசுகிறது



செவே.விவேகானந்தன்
சட்டத்தரணி.

1906ம் ஆண்டளவில் தற்பொழுது இருக்கும் புறக் கோட்டை, மக்கள் வதியும் இடமாக இருந்தது. பசுமை நிறைந்த மரங்களும், தென்னை, பலா போன்ற பயன் தரு மரங்களும், அவற்றைச் சுற்றி பெரிய வீடுகளும் அமைந்திருந்தன. பணக்கார வீடுகளில் குதிரை வண்டிகளும், நடுத்தர வர்க்கத்தினரிடம் மாட்டுவண்டி, றிக்ஷோ போன்றவையும் போக்குவரத்திற்காக இருந் தன. புறக்கோட்டை, fோஜ விட பெரிதாகவும் மக்கள் செறிந்து வளர்ந்த இடமாகவும் இருந்தது. புகழ்பூத்த பெருமக்கள் வாழ்ந்த இடமாக இருந்தது.





அட்டிக்கல



ஜோன் கொந்தலாவல

பெரும்பான்மை பறங்கியர் வாழ்ந்த இடம். இப்பொழுது இருக்கும் செட்டி யார் தெருவில் பெரும் பகுதி சேர். பொன். இராமநாதனுக்கும், சேர். பொன். அருணாசலத்திற்கும் சொந்த மான வீடு வளவுகள் இருந்தன. அக் காலத்து புகழ்படைத்த அரசாங்க வழக்கறிஞர் சேர். றிச்சேட்மோகனின் வீடும், புறக்கோட்டையில் இருந்தது. இப்பொழுது வியாபார ஸ்தலமாக இருக்கின்ற புறக்கோட்டை, 1906ல் மக் கள் அடர்த்தியாக வாழும் நகரமாக இருந்தது.

காஸ்வேர்க்ஸ் வீதியில் றாம் வண்டி நிலையத்தின் அலுவலகமிருந் தது. அத்தெருவில்தான் காஸ் கம்பனி யுமிருந்தது. இன்றைய புறக்கோட்டை பஸ் நிலையத்தில் அடர்த்தியாக மக்கள் வாழும் வீடுகள் இருந்தன. ஐந்து வீதிகள் சந்திக்கும் சந்தியில் ஐந்து பக்கத்திற்கும் ஐந்து காஸ் லாம்புகள் எரிந்தன. அதனால் ஐந்துலாம்புச் சந்தி யென அழைக்கப்பட்டது. அச்சந்தியில் பிரதான வீதி கோட்டையை நோக்கிச் செல்லுகின்றது. அந்த இடத்தில் இன்று பல கடைக் கட்டிடங்களால் சூழப் பட்டு இருக்குமிடம்தான் பழைய மாநகர சபையும், நகர மண்டபமும் இருந்த இடம். இன்றும் ஒரு சிறிய பகுதிக்குள் மாநகர உறுப்பினர்களின் பொம்மைகள் வைக்கப்பட்டுள்ளன. இன்றைய குணசிங்கபுரத்தை ஊடறத்து 'டயஸ் பிளேஸ்' என்ற வீதி செல்லுகின்றது. அத்தெரு C.P. டயஸ் என்பவரின் பெயரைத் தாங்கி நிற்கி றது. அவர் வெஸ்லி கல்லூரியின் தலைமை ஆசிரியராக கடமை புரிந்த வர். மாநகர சபை சென்ற் செபஸ்தி யான் வட்டாரத்தின் உறுப்பினராக 25 வருடங்களுக்கு மேலாக இருந்தவர். டயஸ் வளவு ஒன்றும் அவ்வீதியில் இருந்தது. அந்த இடத்திற்கு 'டயஸ் பிளேஸ்' என்று பெயர் சூட்டப் பட்டது. இன்றும் அப்பெயருடன் வீதி இருக்கின்றது. டயஸ் பிளேஸ் வீதி மக்கள் வாழும் மனைகளாகவே இருந் தன. பிறைஸ் பூங்கா என்ற பெயரில் பூங்காவனமும் இருந்தது. இன்றும் பிறைஸ் பூங்கா சிறிய விஸ்த்திரணம்

கொண்டதாக இருக்கின்றது. அந்த பூங்காவை அண்டி பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல என்பவரின் பெரிய தோர் அரண்மனை இருந்தது. அந்த வீட்டில் 1906ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் திகதி இரவு பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல சுடப்பட்டார். இரண்டு நாட்களின் பின்னர் அவர் மரணம் அடைந்தார். சுமார் 103 வருடங்களுக்கு முன்பு முழு இலங்கைக்கும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் கொடுத்த ஒரு விடயம்தான் புறக்கோட்டை டயஸ் பிளேசில் வசித்த பிறான்சிஸ் டிக்ஸன் அட்டிக்கலவின் கொலையாகும்.

பிரான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல எவ்வாறு சுடப்பட்டார்? ஏன் சுடப்பட்டார்? யாரால் சுடப்பட்டார்? என்பனவற்றை பொலிசார் துருவித் துருவி விசாரித்தார்கள்.

பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல கொலை செய்யப்பட்டார் என பொலிஸ் விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டது. பறன் சிங்கோ, சிங்கோன் பெரேரா ஆகிய இருவரும் பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கலவை கொலை செய்தமைக்காகக் குற்றம் சாட்டப்பட்டனர். மூன்றாவது நபரான, ஜோன் கொத்தலாவல என்பவர் கொலைக்கு உடந்தையாக இருந்தமைக்காக குற்றம் சாட்டப்பட்டார்.

பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல செல்வந்தரான முதலியார் ஜெமோரிஸ் அட்டிக்கலயின் மகன் ஆவார். 1884ம் ஆண்டு பிறந்தார். இவரது இளமைப் பருவத்தில் தந்தையார் இறந்து விட்டார். தந்தையாரின் மரணத்தின் பின் பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கலவிற்கு பல தென்னந் தோட்டங்கள், கறுவா, கொக்கோ, றப்பர் தோட்டங்கள், காரீயம் கொண்ட பல காணிகள் சொந்தமாக வந்தடைந்தன. இவரது மூத்த சகோதரி ஜோன் கொத்தலாவலயை திருமணம் செய்து கொண்டார்.

பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கலவிற்கு சொந்தமான பல காணி நிலங்களையும் பராமரிக்கின்ற பொறுப்பு ஜோன் கொத்தலாவலைக்கு வந்தடைந்தது. பால வயதான பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல தானே அவற்றை பராமரிக்க வேண்டுமென விரும்பினார். 1904ம் ஆண்டு கவர்னரிடமிருந்து சட்டப்படி வயதடைந்தவர் என்ற ஆவணத்தைப் பெற்றுக் கொண்டார். அன்றைய காலத்தில் பராயம் அடைந்தவர் என்றால் 21 வயதை அடைய வேண்டும். அப்பொழுதுதான் ஒருவர் சுதந்திரமாக தனது உரிமைகளை பாதுகாக்க முடியும். கவர்னரிடமிருந்து பராயமடைந்தவர் என்ற (LETTERS OF VENIA AETATIS) ஆவணத்தை பெற முடியும். அவ்வாறான ஆவணத்தைப் பெற்றுக் கொண்டு தனது செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் சொத்துக்களை பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல பராமரித்து வந்தார்.

ஜோன் கொத்தலாவல பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கலவின் சொத்துக்களைப் பராமரித்து வந்த பொழுது அதன் ஒரு பகுதி செல்வத்தை தானே ஆண்டு அனுபவித்து வந்தார். ஆனால், பிரான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல தனது சொத்துக்களைப் பராமரிக்கத் தொடங்கியவுடன் ஜோன் கொத்தலாவல தனது வருவாயை இழந்தார். இது அவரது சினத்தைத் தூண்டியது.

ஜோன் கொத்தலாவல 1865ம் ஆண்டு பண்டாரகம என்ற இடத்தில் பிறந்தார். பொலிஸ் சி.ஐ.டி திணைக்களத்தின் தலைவராக கடமை செய்து இளைப்பாறியவர். இவர் சுதந்திரதாகம் கொண்டவர். சிங்கள அரசியல்வாதிகள் ஆங்கில அதிகாரிகளின் தாளத்திற்கமைய நடனமாடிய பொழுது, இலங்கைக்கு சுதந்திரம் வேண்டுமென குரல் கொடுத்த சிங்களவர். அதனால் இளம் சந்ததியினரின் அபிமானத்தைப் பெற்றிருந்தார். அரசியலில் நுழைவதற்கு பணம் தேவைப்பட்டது. வந்த பெரும் செல்வமும் இல்லாமல் போனதால், அரசியலிற்கு வருவது தடைப்பட்டது. அதனாலும் ஜோன் கொத்தலாவல கவலை அடைந்தார்.

பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல திருமணம் செய்யவில்லை. அவரது மூத்த சகோதரியை ஜோன் கொத்தலாவல திருமணம் செய்திருந்தமையால், பிறான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கலவின் பெரும் செல்வத்தை தான் அடைய வேண்டுமென ஜோன் கொத்தலாவல விரும்பினார். அதனால் கொலை செய்வதற்கான காரியத்தை ஜோன் கொத்தலாவல செய்தார் என பொலிஸ் விசாரணையில் வெளிப்பட்டது.

வழக்கில் இரண்டாம் எதிரியான சிங்கோன் பெரேரா பொலிஸ் கொன்ஸ்ரபிள். அவர் ஜோன் கொத்தலாவலைக்குக் கீழ் கடமை ஆற்றியவர். இளைப்பாறியபின் ஜோன் கொத்தலாவலையின் தோட்டக்காரனாக வேலை செய்தவர்.

கொலையில் பங்குபற்றியவர்களில் முக்கியமானவர் பிலா என்பவர். கொலை நடைபெற்றதற்கான



எல்லாவகை விடயங்களிலும் பங்கு பற்றியிருந்தார். எனவே எல்லா நிகழ்வுகளையும் இவர் அறிந்திருந் தார். அவருக்கு எதிராக வழக்குத் தொடரவில்லை. அவரை அரசதரப்பு சாட்சியாக மாற்றினார்கள். அவர் கடந்தவற்றை தத்ரூபமாக எடுத்துக் கூறினார்.

யூரர் முன்பு நீதியரசர் வுட் றென்ரன் (WOOD RENTON) வழக்கை விசாரித்தார்.

வாக்கேஸ் கம்பனியில் வேறு ஒரு ஆள் மூலம் கொத்தலாவல துப்பாக்கி யொன்றை வாங்கியிருந்தார். பிலா தனது சாட்சியத்தில் விபரமாக விபரித் தார். துப்பாக்கி வாங்கியவர் பெயர், ஊர் ஒன்றும் ஒருவருக்கும் தெரியாது. கொத்தலாவலைக்கு மட்டுமே தெரிந் திருந்தது. துப்பாக்கி தனது நண்பர் ஒரு வரின் உபயோகத்திற்காக வாங்கப் பட்டதாக கொத்தலாவல கூறியிருந் தார்.

இதற்கிடையில் பிரான்சிஸ் டிக் ஷன் அட்டிக்கலவிற்கு செய்திகள் அனுப்பப்பட்டன. மிக விரைவில் கொலை செய்யப்படுவார் என்பது தான் அச்செய்தி மரணப்பயமுறுத்த லின் பின், பிரான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல தனியாக ஒரு இடமும் சென்றதில்லை. பொலிசிற்கும் முறைப்பாடு செய்திருந்தார். பொலி சார் அடிக்கடி அவரது வீட்டிற்குச் சென்று வந்தார்கள். மாலை ஆறு மணிக்குப்பின் ஓரிடமும் போக வேண்டாம் என்றும் வீட்டிலே இருக்கும்படி பொலிசார் பிரான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கலைக்கு ஆலோ சனை வழங்கினர். அத்தோடு, மிகவும் நம்பிக்கையுள்ள வேலைக்காரையும் தோட்டக்காரரையும் வைத்திருக்கும் படி பொலிசார் கூறினர். அதன் பிரகாரம் மாலை ஆறு மணிக்குப்பின் வீட்டில் பிரான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல இருந்து கொண்டார். வீட்டிலும் தனியாக இருப்பதில்லை. இரவு படுக்கும் பொழுதும் ஒருவரை துணைக்கு வைத்துக் கொண்டார். மாலை ஆறு மணிக்குப் பின் எவ ரையும் வீட்டிற்கு அழைப்பதில்லை. மிகவும் நம்பிக்கையானவர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தியிருந் தார்.

சதிகாரர்கள் தங்களது சதி வேலையை வெற்றிகரமாக கொண்டு சென்றனர். கொத்தலாவலைக்கு மட் டுமே துப்பாக்கி வாங்கியவரையும், சுட்டவரையும் தெரிந்திருந்தது. சகல தையும் வெற்றிகரமாக செயல்படுத் தச் செய்துவிட்டு 1906ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ந் திகதி ஜப்பானிற்கு ஜோன் கொத்தலாவல சென்று விட்டார். பிரான்சிஸ் டிக்ஷன் அட்டிக்கல கொலை செய்யப்படும் பொழுது ஜப்பானில் நின்றால் தன் மீது பொலிசாருக்கு ஐயம் வரமுடி யாது என்று ஜோன் கொத்தலாவல திட்டம் தீட்டினார். அவர் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது. ஜப்பானிலிருந்து மனைவிக்கு எழு திய கடிதங்கள் ஜோன் கொத்தலா வலையைக் காட்டிக் கொடுத்தன. பல சாட்சிகளும் கொத்தலாவலைக் கெதி ராக சாட்சியம் பகிர்ந்தனர். குறிப்பாக பிலாவின் சாட்சியம் கொத்தலாவ லையை தப்பி ஓடவிடவில்லை.



பிலா தனது சாட்சியத்தில் ஜோன் கொத்தலாவலையின் கொலைக்கான பங்கை விபரமாகக் கூறினார். பல நாட்களாக சாட்சியம் அளித்தார். பொலிஸ் அதிகாரியான ஜோன் கொத்தலாவலைக்கு தான் தூக்குத் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என நன்றாக விளங்கியது. அதனால் மனம் உடைந்த ஜோன் கொத்தலா வல தற்கொலை செய்யத் தீர்மானித் தார். ஏதோவிதமாக நஞ்சு மருந்தை சிறைச்சாலைக்குள் கொண்டு வரச் செய்தார். நஞ்சை அருந்தி தற்கொலை செய்து கொண்டார். அக்காலத்துப் பத்திரிகைகள் பெரும் பரபரப்பாக இச் செய்தி யைப் பிரசுரித்தன. இலங்கையின் பட்டி தொட்டியெல்லாம் இக் கொலையைப் பற்றி பேசிக் கொண்டனர்.

கொத்தலாவலையின் தற் கொலைக்குப் பின்பும் பிலாவின் சாட்சியம் தொடர்ந்தது. அவரது சாட்சியத்தில் சிங்கோன் பெரேராவின் கொலையின் பங்கை விபரித்த பொழுது, சிங் கோன் பெரேரா நீதிமன்றத்தில் மயங்கி விழ்ந்தார். ஏதேதோ பிதற்றினார். தனது குற்றத்தை ஏற்பது போலவும் பிதற்றினார். யூரி அவரை குற்றவாளி எனக் கண்டது. பறன் சிங்கோவை விடுதலை செய்தது. கொழும்பை மட்டுமல்ல இலங்கை முழு வதையும் பரபரப்பில் ஆழ்த்திய கொலை வழக்கு முடிவுற்றது.

'சட்டம் பேசுகின்றது' எனும் இப் பகுதிக்கு வாசகர்கள் சட்டம் தொடர்பான கேள்விகளையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்பலாம். பிரபல சட்டத்தரணி கள் பதிலளிக்க காத்திருக்கிறார் கள்.




இந்த ஹெயார் ஸ்டைல் வகைகளை நீங்கள் வீட்டிலிருந்தபடியே செய்துகொள்ளலாம். நேரமும் செலவும் மிச்சம். அழகாக ஸ்டைல் செய்து அமர்க்களமாகச் சென்று அனைவரையும் அசத்தலாம்.

### முதல் வகை

இந்த ஹெயார் ஸ்டைல் பிரஞ்சு ரோலில் ஒரு புது வகை. இதை மொடர்ன் பிரெஞ்சு ரோல் என்பர். இந்த வகை குறைவான முடி உள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றது. ரொம்பவும் சிம்பிளான அலங்காரத்துடன் திருமண வரவேற்பில் நிற்க விரும்பும் மணப்பெண்களுக்கு ஏற்ற ஹெயார் ஸ்டைல் இது. இதில் போனிடெய்ல் போடுவதில்லை என்பதால் ஒரே ஒரு சாண் முடி உள்ளவர்களும் இதைப் போட்டுக் கொள்ளலாம்.

# அழகாய் ஜொலிக்க சில ஹெயார் ஸ்டைல் வகைகள்






தலைமுடி முழுவதையும் பின் பக்கம் இழுத்து வாரிக்கொண்டு ஒரு கற்றை முடியை மட்டும் காது பக்கத்தில் விட வேண்டும். கை எடுக்காமல் முடியைச் சுற்றி பன் போலப் போட வேண்டும். கையை எடுக்காமல் முடியைச் சுற்றுவதால் ஒரு பக்கம் ரோல் போலவும் ஒரு பக்கம் பன் போலவும் வரும். குறைந்த முடிக்கு சப்ளிமெண்ட் செய்ய ஹெயார் ரோல்ஸ் உண்டு. இவை கறுப்பு பிரவுன் எனப் பல நிறங்களில் உண்டு. இதைக் கொண்டைப் பகுதியில் வைத்தால் நன்றாக இருப்பதுடன் முன்பக்கம் பார்க்கப் பெரியதாகவும் அசல் முடி போலவும் இருக்கும். இவற்றை வாங்கிப் பயன்படுத்தலாம். அப்படியே விரலினாலும் முன்புற முடியைச் சுருட்டி ஹெயார் பின் போட்டு வைத்தால் முடி நன்கு சுருண்டு நிற்கும்.

### இரண்டாவது வகை

தழையத் தழைய ஹெயார் ஸ்டைல் செய்து கொள்ள விருப்பப் படும் பலருக்கும் விருப்பம் இருந் தாலும் அதற்கேற்றபடி முடியும், நீளமும், அடர்த்தியும் அமையாத நிலையில் கவலைப்படுவர்.

கவலையே வேண்டாம். அதற் கெனவே அறிமுகமாகியுள்ளவை தான் ரப்பில்ஸ்கள். முடியினால் ஆன இந்த சிகை அலங்கார சாதனம் உட்புறம் அலுமினியக் கம்பியால் ஆனது. இது வளைத்தபடி வளை யும். முடியை நன்கு வாரி போனி டெய்ல் போட்டு அதை அப்படியே சிறிய கொண்டையாகச் சுற்றிய பின்பு அதில் ரப்பில்ஸ் வைத்து Attach செய்து பாருங்கள். உங்கள் இஷ்டம் போலச் சிறப்பான முடி யில்லாத குறையை மறைத்து தழையத் தழைய பெரிய ஹெயார் ஸ்டைலாக அமைக்க முடியும். இதையே தலைக்கு மேலும், பெரிய கொண்டையாகவும் போடலாம்.



### மூன்றாவது வகை

ஹெயார் ஸ்டைலும் குறைந்த முடி உள்ளவர்களுக்குத்தான். குறைவான சின்ன முடியை வாரி சின்னப் போனிடெய்ல் போட்டு சவுரி வைத்து நீண்ட பின்னலாகப் பின்னி நுனி பிரியாமலிருக்க ஒரு ரப்பர் பேண்ட் போடுவதோ அல்லது கறுப்புக் கயிறு கட்டுவதோ செய்ய வேண்டும். இதையே கொண்டை யாகச் சுற்றி அதில் கொண்டை ஊசி செருக வேண்டும். நீண்ட கூந்தல் உள்ளவர்களும் சவுரி வைக்காமல் அப்படியே பின்னி கொண்டை சுற் றிக் கொள்ளலாம். சிவப்பு ரோஜா இதழ்களை ஒரு பக்கமாகக் கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பொக்கே செய்யும் போது பயன் படுத்தும் பச்சைத் தழையையும் இதே போல கட்டி வைத்துக் கொண்டு கொண்டையின் மீது ஒன் றின் மேல் ஒன்று (தலா ஒரே வரிசைதான்) வைத்து அலங்காரம் செய்ய வேண்டும். பட்டுப் புடவை களுக்கு இது ரொம்பவும் மேட்ச் ஆகும். அந்த நாளில் இதைத்தான் பின்னி பிச்சோடா போடுவது என் பர். இன்று சில மாற்றங்களுடன் புது ஹெயார் ஸ்டைலாக உருவெடுத் துள்ளது.

குறைவான முடி உள்ளவர்கள் அதை வாரி சிறிய போனிடெயில் போட்டு ரவுண்டாகப் பின் செய்து அதில் கிளிப்புடன் கூடிய ஹெயார் attachmentகளைப் பயன்படுத்தி அன்றாடம் ஒரு ஹெயார்ஸ்டைல் செய்து கொள்ளலாம். கிளிப்புடன் கூடிய ஹெயார் attachment கள் குறை வான முடி உடையவர்கள் குறிப்பாக முடியை மிகவும் குட்டையாக வெட் டிக் கொண்ட இளம்பெண்கள் திரு மண நாளன்று ஹெயார் ஸ்டைல்கள் செய்து கொள்ள இது மிகவும் கைகொடுத்து உதவக்கூடியது. இழுத் தாலும் அவிழ்ந்து வராது. முடியுடன் சேர்த்துக் கிளிப் செய்து விடலாம். ஹெயார் ஸ்டைல்களைக் கலைத்த பின்பு இரவில் முடியை நன்கு பிரித்துப் போட்டுக் காற்றாட விட வேண்டும்.

-ரதி-







# தகவல்களைத் திருட Teem Viewer

ஒரு நல்ல வசதியை நம் மக்கள் எப்படியெல்லாம் மோசடிக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு டீம் வ்யூவர் ஒரு நல்ல உதாரணம்.

ரிமோட் சப்போர்ட் என்பார்களே, அதற்காகப் பயன்படுவது தான் டீம் வ்யூவர். உலகின் ஒரு மூலையில் இருந்தபடி வேறெங்கோ ஒரு கம்பியூட்டரில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த டீம் வ்யூவர் பயன்படுகிறது. பைல்களை மாற்றிக் கொள்வது, பிரசண்டேஷன் செசன்களை நடத்துவது போன்றவையும் சாத்தியம். வெறும் இரண்டரை எம்பி அளவுள்ள ஒரு பைலை தரவிறக்கம் செய்தால் போதும். நமது வேலையைத் தொடங்கி விடலாம். நமது கணனியில் நிறுவ வேண்டும் என்கிற அவசியம்கூட இல்லை. அட்மினிஷ்ட்ரேட்டர் அதிகாரங்களும் தேவையில்லை. ஒரு நொடியில் இங்குள்ள திரை, உலகின் வேறொரு மூலையில் உள்ள கணனித் திரையில் அப்படியே தெரியும். இங்கிருந்தபடியே ரிமோட் கண்ட்ரோல் மாதிரி அந்தக் கணனியை இயக்கலாம். இரு கணனிகளுக்கும் இண்டர்நெட் இணைப்பு இருக்க வேண்டும். அவ்வளவுதான்.



ஏற்கெனவே பல உளவு மென்பொருள்களை இயக்கி வரும் பிரவுசிங் சென்டர்கள் டீம் வ்யூவரை கொஞ்சம் வலுவாகவே பயன்படுத்தி வருகின்றனர். டெக்ஸ்ட் சாட் செய்வதைக்கூட இவர்கள் copy செய்வார்கள். ஈமெயில் பாஸ்வேட் முதல் ஒன்லைன் பேங்கிக் பாஸ்வேட்வரை திருடுவார்கள். அதாவது ஏற்கெனவே இயக்கப்பட்டிருக்கும் கணனியில் டீம் வ்யூவர் இயக்கப்பட்டிருக்கும். அதில் வழங்கப்பட்டிருக்கும் பாஸ்வேட் ஏற்கெனவே copy செய்யப்பட்டு இந்தக் கணனி வேறொரு கணனியுடன் இணைக்கப்பட்டிருக்கும்.


கீ லொக்கர் உள்ளிட்ட பல்வேறு நச்சு நிரல்களின் வேலையை டீம் வ்யூவர் மட்டுமே செய்துவிடும்.




இவ்வளவு ஏன், நமது அலுவலகத்தில் நண்பர்கள்கூட உளவு வேலை செய்வதற்கு இந்த மென்பொருள் பயன்படக்கூடும். உஷார்!

## சூரிய ஒளி

சூரிய ஒளியை மின்சக்திக்குப் பயன்படுத்திக் கொள்ளும் சோலார் தொழில்நுட்பம் வேகமாகப் பெருகி வருகிறது. சோலார் கப்பல் விமானம் கட்டிடம் விளக்கு அடுப்பு என்று இதன் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பல்வேறு நாடுகளில் சோலார் கட்டிடங்கள் இருக்கின்றன கட்டப்படுகின்றன. தற்போது சீனாவில் ஷாங்டாங் நகரில் டெனு பகுதியில் உலகின் மிகப் பிரம்மாண்டமான சோலார் கட்டிடம் கட்டப்படுகிறது. 8 லட்சம் சதுர அடி கொண்ட கட்டிடத்தின் மேற்பகுதியில் சோலார் தகடுகள் பதிக்கப்படுகின்றது. இந்த அலுவலக கட்டிடம் இன்னும் ஒரு ஆண்டுக்குள் செயல்படத் தொடங்கும் என்று தெரிகிறது. வருங்காலத்தில் கட்டிடங்களில் அலங்கார கண்ணாடிகளுக்குப் பதிலாக சோலார் தகடுகளை பதிக்கும் பழக்கம் அதிகரிக்கும் என்றால் ஆச்சரியமில்லை.






# மௌனத்தின் பாலை

**வானொலி** வரலாற்றுக்கும் இலங்கைக்கும் மிக நீண்டதொரு வரலாற்று உறவு உண்டு. மார்க் கோணியில் ஆரம்பித்த வானொலி ஒலிபரப்பு 1922 இல் பிபிசி லண்டனில் ஆரம்பிக்கப்பட்டதோடு பரிணமித்தது. பிபிசி ஆரம்பித்ததை அடுத்து மூன்றே மூன்று ஆண்டுகளின் பின்னர் தென் ஆசியாவின் முதலாவது வானொலி ஒலிபரப்பான கொழும்பு ரேடியோ (பின்னாளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) இலங்கையில் தொடங்கப்பட்டது. இன்று இலங்கையில் திரும்பிய பக்கம் எல்லாம் வானொலிகள் என்றாகிவிட்டது. வானொலி என்றாலே தொடரும் சினிமாப் பாடல்கள், இடைவிடாத தொலைபேசித் தொடர் பாடல்கள், சில போட்டி நிகழ்ச்சிகள், எப்போதேனும் ஊறுகாய தொட்டுக் கொள்வது போல சில பயனுள்ள நிகழ்ச்சிகள் என்ற அளவிலேயே ஒலிபரப்பு இன்று மாறிவிட்டது. இன்றைய தமிழ் வானொலிகளின் உள்ளடக்கமே இது மட்டும்தான் என்று அஞ்சாமல் சொல்லலாம். விளம்பரங்களையும் சினிமாப்பாடல்களையும் நம்பி மட்டுமே இங்கு ஒலிபரப்பு நடக்கிறது. சமயமும், சங்கீதமும் ஒலிக்கும் அரச தேசிய வானொலியின் பயனுள்ள நேரங்களை எல்லாம், அரசியல் விழுங்கி ஏப்பம் விடுவதை இங்கே கட்டாயமாக சுட்டிக் காட்ட வேண்டிய தேவை கிடையாது.



இப்படி நீட்டி முடக்குவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. ஊடக வளர்ச்சி பேச்சாகி, எழுத்தாகி, பத்திரிகையாகி, வானொலியாகி, தொலைக்காட்சியாகி கணனியும் அதிநவீன தொழில் நுட்பமும் வளர வளர தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து நிற்கிறது. இத்தகு வானொலிப் பிறப்புக்கும் அது படும் இளைப்புக்கும் நாம் அடைந்ததோ எதுவுமில்லை. நேயர்கள் என்று வானொலி நெஞ்சுருகிச் சொல்லுகிற மக்களின் தேவைகள், பிரச்சினைகள் எவற்றையும் அவை வெளிக்கொண்டு வருவதில்லை. பிரச்சினைகளையே பேசாத எம் வானொலிகள் எமக்கான தீர்வுகளைச் சொல்ல வேண்டிய தேவைகளும் அற்றவையாகின்றன.

இந்த இடத்தில்தான் நாம் சமூக வானொலிகள் குறித்து புரிந்து கொள்ள வேண்டியவர்களாகிறோம். எமது பிரச்சினைகளை பூசி மெழுகாமல் எம் குரலிலேயே ஒலிபரப்ப வல்லவை அவை. அதீத சுயலாப நோக்குத் தலையீடுகள் அற்றவை. இத்தகைய சமூக வானொலிகள் பற்றி உங்களில் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறது. சமூக வானொலி லாப நோக்கற்றது என்பதுவே அதற்கான முதன்மை வரைவிலக்கணம் ஆகிறது. சமூக வானொலியை கிராமிய வானொலி, பங்குபற்றல் வானொலி, சுதந்திர வானொலி, ஜனரஞ்சக வானொலி எனப் பல பெயர் கொண்டழைக்கிறார்கள். ஐரோப்பாவில் இதனை உள்ளூர் வானொலி என்று அழைப்பதும் உண்டு. இத்தனை விதமாக சமூக வானொலி பெயர் மாற அடிப்படையாய் அமைவது இற்றைவரை அதற்கான வரைவிலக்கணத்தை சொல்ல முடியாமல் போனது தான். ஆனால் இன்றைய பிரபல வானொலிகளுக்கும் சமூக வானொலிக்குமான ஒரே வேறுபாடு, சமூக வானொலி குதிக்க விரும்பாத சந்தைப் போட்டி. சந்தைப் போட்டி லாபத்தையும் வருமான மேலீட்டத்தையும் கொண்டது. இலாப நோக்கற்ற சமூக வானொலியின் உள்ளடக்கம், செயற்பாடு, தன்மைகள் எல்லாமே ஒட்டுமொத்த சமூகத்தின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்காக மக்களின் குரலாக மக்களுக்காகவே செயற்படுவது மட்டுமே. குறித்த சமூகத்தின் அபிவிருத்தியில் பங்குகொள்கின்ற இலாப நோக்கற்ற வானொலியாக செயற்படுவதால் இதனை சமூகவானொலி என்பதே பொருத்தமானது.





ஒரு சமூக வானொலிக்கான அத்தியாவசியத் தேவை இன்று எம்மிடையே எழுந்துள்ளது. மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. இன்றைய நிலையில் எமக்கான தேவை என்ன? வடக்கு கிழக்கில் போரின் பின்னரான யதார்த்த வாழ்வுக்குள் நுழைய அல்லல்படுகிற மக்களுக்கு ஓர் ஊடகம் செய்ய வேண்டியது என்ன? அவர்களுக்கான

அல்லது அவர்களுக்கேயான கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பாது காப்பு உள்ளிட்ட அடிப்படையான தேவைகளை அவர்களின் குரலாக எடுத்துத் தரவல்ல ஊடகம் எங்கே? தன் மண்ணிலேயே அகதியாய்ப் போன அச் சமூகத்தின் புனர்வாழ்வு அபிவிருத்திக்கு இன்று தேவையாய் இருப்பது ஆற்றல் மிகுந்ததோர் சமூக வானொலி. சில நாடுகளில் குறித்த சமூகமொன்றின் அபிவிருத்தியை வேகமாய் உந்தித் தள்ளுமோர் உபா யமாக சமூக வானொலிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் பெரும் வெற்றிகளையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். சமூக வானொ லியின் முக்கிய நன்மையாக அது உள் ளூர் பிரதேச மக்களின் பிரச்சினை களையும் தேவைகளையும் பிரதி பலிக்கும் குரலாய் இருப்பதைச் சொல்லலாம். உள்ளூர்ச் செய்திக ளெல்லாமே பொதுவாக தேசிய ஊடகங்களில் முதன்மை பெறு வதில்லை. ஆனால் அதையே குறித்த சமூக வானொலியால் சாதிக்க முடியும். தவிரவும் குறித்த சமூகத்திற் கான அவசியமான மற்றும் தேவை யான செய்திகளை எல்லாம் சமூக வானொலியின் வழியாக வெளிக் கொண்டு வரலாம். நோய் பரவல் முதல் சந்தை நிலவரம், உள்ளூர்ச் சபைகளின் அபிவிருத்தி மேம் பாடு, குறித்த பிரதேச சபை என்ன திட்டங் களை முன்னெ டுக்கிறது என்






பவை உள்ளிட்ட அனைத்தையும் அச்ச முகத்தோடு பகிர சமூக வானொலி பெரிதும் பயன்படக்கூடியது. குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்து அபி விருத்தியை வேண்டி நிற்கும் மக் களுக்காக அவர்கள் குடியிருக்கும் இடங்களில் சமூகவானொலிகளை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் புனர்வாழ்வும் அபிவிருத்தியும் மேலும் வலுப்பெறுவதோடு வேகமும் கொள்ளும்.



சாகீர் மொஹமட்



# யார் அறிவாளி?



எப்பொழுதும் போல கணவன் சொல் கேளாத மனைவியும் கணவனும் ஒரு காட்டு வழியே போய்க்கொண்டு இருந்தாங்களாம். அப்ப ஒரு தவளை பாறையின் இடுக்கில் சிக்கி உயிருக்காக போராடிக்கொண்டு இருந் திச்சாம். இதைப் பார்த்த தம்பதியினர் தவளையைக் காப்பாற்றினாங்களாம். உடனே தவளை சுப்பர் டிரஸ் போட்ட பொண்ணா மாறி 'நான் இந்த காட்டு தேவதை. ஒரு முட்டாள் முனிவரின் சாபத்தால் இப்படி ஆகிட்டன். என்னைக் காப்பாற்றிய உங்களுக்கு மாற்ற முடியாத 3 வரம் தாரன். ஆனா ஒரு ரூல்ஸ். யார் எந்த வரம் கேட்கிறாங்களோ அதை விட 10 மடங்கு மற்றவருக்கு கிடைக்கும்' எண்டு சொல்லிச்சாம்.

உடனே மனைவி நான்தான் முதல்ல கேட்பேனெண்டு அடம் பிடிச்சி 'நான் உன்னை மாதிரியே அழகான தேவதையா மாறணும்' எண்டு கேட்டாங்களாம். தேவதையும் 'இதோ நீங்க என்னை மாதிரியே அழகா மாறுங்க' எண்டு சொன்னதும் மனைவியும் சுப்பர் உடைக்கு மாறினாங்களாம். சில நொடிகளில் கணவனும் 10 மடங்கு அழகனா மாறி அசத்தினாராம்.

'நான் மிகப் பெரிய பணக்காரன் ஆகோணும்' எண்டு கணவன் அடுத்த வரத்தைக் கேட்டாராம். 'ஓகே நீங்க பெரிய பணக்காரன் ஆகுங்க' எண்டு தேவதை சொல்லவும் உடனே கணவன் சுவிஸ் பேங்கில் பில்லியன் டாலர்கள் கிரடிட் செய்யப்பட்ட கார்டுடன் பணக்காரன் ஆகிட்டானாம். சில நொடிகளில் மனைவியும் கணவனை விட 10 மடங்கு அதிகம் பணக்காரி ஆனாங்களாம். 'கடைசி வரத்தையும் நான்தான் கேட்பேன்' எண்டு மனைவி அடம்பிடிக்க ஓகே சொன்னாங்களாம் தேவதையும் கணவனும்.


நான்தான் அழகாவும் பணக்காரியாவும் ஆகிட்டனே. என்னை இதைச் செய்.. அதைச் செய்யெண்டு தொந்தரவுபடுத்திய இந்தக் கணவனுக்கு பாடம் புகட்டுவோம் எண்டு யோசிச்சு ஒரு வரத்தை முடிவு பண்ணினாங்களாம். 'தேவதையே எனக்கு சின்னதா ஹார்ட் அட்டாக் வரோணும்' எண்டு வரம் கேட்டாங்களாம். தேவதையும் 'OK DONE உனக்கு சின்னதா ஹார்ட் அட்டாக் இருக்கும்' எண்டு சொல்லி மறைஞ்சிட்டுதாம். யார் அறிவாளி?


# பதப் பயணம்

**கடலாக** மாறிக் கிடக்கிறது
கோவிலடி!
அலையலையாய் வந்து
அடிக்கிறது சனவெள்ளம்!
ஆழும் அரசர் முதல் அடிமட்ட
ஏழைவரை
அங்க வஸ்த்திரம் அகற்றிப்
பணிகின்றார்!
அந்நியம் மறந்து
அருகில்வந்து புன்னகைத்துச்
சிறுவர்கள் பெண்டிர்
முதியோர்..
எனக்குவியும்
நெரிசலில் கசங்கிடுதெம் நிழல்!
கரங்களிலே
அருச்சனைத் தட்டேந்தி,
பெயர் இலக்கினம் சொல்லி,
தேங்காயில் கற்பூரத் தீபமேற்றி,
ஏதேதோ
வேண்டுதலில் எல்லோரும்
வீழ்ந்து எழுகின்றார்.
என்னென்ன வேண்டுதல்கள்
இவர்மனதிற் பூத்திருக்கும்?
எங்களது எண்ணற்ற வேண்டுதல்
இவ்
வீதியெங்கும்
அநாதைகளாய் இன்றும்
அலைந்து திரிகையிலே...
இவர்களது நேர்த்திகட்கெப்
பலன்கிட்டும்?
வழமைபோல்
மோனமே பதிலாய்ப்
பரம்பொருளின் முகம் மலரும்!
வெற்றிக் களிப்பு பிரயாணக்
களைப்பகற்ற
"சப்புமல் குமரயாவின்
சம்பந்தம்"
என்னவென்ற
தேடலுடன்.. வண்டிகள்
திரும்பிப் பயணமாகும்!

கடலாக மாறிக் கிடக்குது எம்
கோவிலடி!!
அலையலையாய் வந்து
அகல்கிறது சனவெள்ளம்!!

**த.ஜெயசீலன்**







மயில்வாகனம்
சர்வானந்தா



# கலைந்த பக்கங்கள்...

## பத்மஸ்ரீ எம்.கே. ராதா

திரையுலகில் பிரபல கதாசிரியராகவும், வசனகர்த்தாவாகவும் விளங்கியவர் எம். கந்தசாமியின் மகனான எம்.கே.ராதா. 1910 இல் பிறந்த இவர் சென்னை தங்கசாலையிலுள்ள இந்து பயலோஜிகல் உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயின்றார். எம்.கே.ராதா தனது ஒன்பதாவது வயதிலேயே நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இவர் நடித்த முதல் நாடகம் 'பக்தது ருவன்'. இவர் தனது தந்தை பணியாற்றிய மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பனி, T.K.S சகோதரர்களின் நாடகக் கம்பனி என்பன தயாரித்த நாடகங்களில் நடித்து வந்தார்.

எம். கே. ராதா கதாநாயகனாக முதலில் அறிமுகமான படம் 1935 இல் வந்த 'சதிலீலாவதி'. இதன் கதையை எழுதியவர் எஸ். எஸ். வாசன். இந்தப் படத்திலேயே எம். ஜி. இராமச்சந்திரன், சகோதரர் எம். ஜி. சக்கரபாணி, T. S. பாலையா ஆகியோர் அறிமுகமாயினர். எம். ஜி. ஆர் இதில் பொலீஸ்காரர் வேடத்தில் நடித்தார். எம்.ஜி.ஆரும், எம். கே. ராதாவும் நடித்த மற்றுமொரு படம் 'மாயா மச்சீந்திரா'. இப்படம் ராஜா சந்திரசேகரின் இயக்கத்தில் 1939ம் ஆண்டு வெளிவந்தது. இதே கால கட்டத்தில் நாவலாசிரியை வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய 'அனாதைப் பெண்ணில்' P. U. சின்னப்பாவுடன் எம்.கே.ராதா நடித்தார்.

அபூர்வ சகோதரர்கள் படத்தில் நல்லவனாகவும் கெட்டவனாகவும் மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்ட இரட்டை வேடத்தில் ராதா தோன்றினார். இதில் கதாநாயகி பானுமதி. இரட்டையர்களுள் அண்ணனை காதலிக்கிறாள் கதாநாயகி (பானுமதி). காதலியோடு அண்ணன் நெருங்கி பழகும்போது அதே காதல் உணர்வுகள் ஏற்படுகின்றன. சகோதரர்களுக்குள் சண்டை மூழ்கிறது. இந்த உணர்ச்சிப் போராட்டக் கதையை மையமாக வைத்து எழுதப்பட்ட படம் அபூர்வ சகோதரர்கள். இரு வேடங்களிலும் எம். கே. ராதா இயல்பாக நடித்திருந்தார். ஜெமினி தயாரித்த சம்சாரம் படத்தில் எம். கே. ராதாவும் புஸ்பவல்லியும் நடித்திருந்தனர். குடும்பப் பிரச்சினைகளை மையமாக வைத்து உருவான இப்படம் வெற்றி பெற்றது. புஸ்பவல்லி இதற்கு முன்பே ஜெமினியின் 'மிஸ். மாலினி', 'சக்ரதாரி' போன்ற படங்களில் நடித்திருந்தார். அந்தப் படங்களில் ஜெமினிகணேசன் முக்கிய வேடங்களில் நடித்திருந்தார். அப்போதுதான் ஜெமினி கணேசனுக்கும், புஸ்பவல்லிக்கும் காதல் மலர்ந்தது. பின்னர் இரகசியத் திருமணம் புரிந்துகொண்டனர். அவர்களுக்குப் பிறந்த பெண்களே ஹிந்தியில் ரேகாவும் அவரது தங்கை ராதாவும். அதனைத் தொடர்ந்து 'சந்திரமோகனா', 'பக்ததுளசிதாஸ்', 'சதிமுரளி', 'சௌதாமினி', 'மனமோகினி' போன்ற படங்களில் நடித்தார்.

இவை வெளிவந்தபோது ஜெமினி நிறுவனம் எம். கே. ராதாவை மாதம் 300 ரூபா சம்பளத்துக்கு ஒப்பந்தம் செய்துகொண்டது. 1941 இலிருந்து 1954 வரை 13 ஆண்டுகள்



ஜெமினியின் ஒப்பந்தத்தில் இருந்த எம். கே. ராதா, அந்தக் காலக்கட்டத்தில் தாசி அபரஞ்சி, கண்ணம்மா என் காதலி, சந்திரலேகா, அபூர்வ சகோதரர்கள், ஔவையார் உட்பட ஒன்பது படங்களில் நடித்தார். இவற்றில் முதல் படமான தாசி அபரஞ்சினியில் தவமணிதேவியெனும் கவர்ச்சி நடிகை அந்தக்காலத்திலேயே கூச்சமின்றி ஆடைக்குறைப்பு செய்து உடலழகைக் காட்டி புரட்சி செய்தார். எனவே பின்னால் வந்த சில்க் சுமிதா, ஜெயமாலினி, நமீதா போன்றோருக்கு முன்னோடியானவர் தவமணிதேவி.

ஜெமினி தயாரிப்பில் சந்திரலேகாவும் அபூர்வ சகோதரர்களும் மிகப்பெரிய வெற்றி பெற்றன. இவை எம்.கே.ராதாவுக்கு மிகப் பெரிய புகழை பெற்றுக் கொடுத்தன. சந்திரலேகாவில் எம்.கே. ராதா வீரசிம்மன் வேடத்தில் நடித்தார். இவருக்கு ஜோடியாக அந்நாளில் புகழ்பெற்ற T. R. ராஜகுமாரி நடித்தார். ஜெமினி தயாரித்த ஞானசவுந்தரியில் எம்.கே.ராதா நடித்தார். இதில் சுசிலா என்ற நடிகை கதாநாயகியாகத் தோன்றினார். பின்னர் வில்லன் நடிகர் சு.சூ. நாகேந்திரராவ் இயக்கத்தில் 'அன்பே தெய்வம்' படத்தில் எம். கே. ராதாவும் சந்தியாவும் இணைந்து நடித்தனர். நடிகை சந்தியா ஜெயலலிதாவின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் வணங்காமுடி, உத்தமபுத்திரன், கற்புக்கரசி போன்ற படங்களிலும் நடித்தார். நரசு ஸ்ரூடியோ தயாரித்த 'போட்டர் கந்தன்' படத்தில் குணச்சித்திர வேடத்தில் சிறப்பாக நடித்தார். எம். கே. ராதாவுக்கு 6 மகன்கள் 2 மகள்கள். இவரின் கலையுலகப் பணிகளை கௌரவிக்கும் வகையில் சென்னை சினிமா ரெக்னீசியன்ஸ் அமைப்பு ஆண்டு தோறும் எம்.கே. ராதா விருதை வழங்குகின்றது. ஜெமினி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் ஆகியோருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. எம்.கே.ராதாவுக்கு இந்திய அரசு பத்மஸ்ரீ விருதை வழங்கியது. சிறந்த நடிகரும் பண்பாளருமான எம். கே. ராதா இப்போது நம்முடன் இல்லை.







# வாசகர் கருத்து!

இருக்கிறம் சஞ்சிகையின் சேவை முழு நாட்டுக்கும் தேவை. காரணம் பக்க வடிவமைப்பு முதல் சகல அம்சங்களும் அற்புதம். இனி வரும் இருக்கிறம் சஞ்சிகையில் எமது நாட்டு படைப்பாளிகள், கலைஞர் அறிமுகப் படங்களையும் பிரசுரித்து எமது படைப்புக்களையும் விமர்சனங்களாக பிரசுரிக்க வேண்டும். 5ம் ஆண்டு சிறுவர் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் பகுதி, கேள்வி பதில் பரிசுப்போட்டி, ஹைக்கூ, படக்கவிதை பக்கங்களும் இதில் இடம்பிடித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். எந்த சஞ்சிகையும் இதுவரை ஊடக பயிற்சி நெறி செய்யவில்லை. இருக்கிறம் செய்வதையிட்டு வாழ்த்துக்கள். தொடரட்டும் உனது பணி. வாழ்க கலை.

ஸானாறிழா
சாய்ந்தமருது

ஆசிரியர் அவர்கட்கு அண்மைக்காலமாக இருக்கிறம் வாசித்துவருகிறேன். அது தனது 50வது இதழை வெற்றிகரமாக தொட்டமைக்கு என் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். தொடர்ந்து பல சாதனைகளை நிகழ்த்தி 100வது இதழையும் எட்டிப்பிடிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

சின்னத்தம்பி தர்மரெத்தினம்
சாவகச்சேரி

50 இதழ்களை எட்டிப்பிடித்து சாதனைப் படைத்த இருக்கிறமுக்கு என் வாழ்த்துக்கள். 50வது இதழில் அதிரடியாக ஆரம்பித்த பேய்க்கதைத் தொடர் எமது தொடர் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்துள்ளது. சிறுகதை சிறப்பாக உள்ளது. வழமையைவிட பக்க வடிவமைப்பு அழகாகவும் நேர்த்தியாகவும் உள்ளது.

வே.ராகுலன்
கோட்டாஞ்சேனை

வழமைபோல் நான் ரசிக்கும் ஆசிரியர் தலையங்கம் கடந்த முறையும் தனக்கே உரிய பாணியில் வந்திருந்தது சிறப்பானது. கதைகள், கட்டுரைகள், தொடர்கள், துணுக்குகள் என நீளும் ஒவ்வொரு ஆக்கமும் தரமானவை. வாழ்த்துக்கள்.

க.தனுஷன்
யாழ்ப்பாணம்

# இளமை புதுமை

# கலகல கலாட்டா



இருக்கிறம் டீம் துடிப்புள்ள இளைஞர்களைக் கொண்டு செய்துவரும் கலாட்டா நிகழ்ச்சிதான் இளமை புதுமை. மிகக் குறுகிய காலத்திலேயே வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப்பெற்ற இளமை புதுமை என்னும் இப்பகுதியில் இம்முறை நேத்ரா டீவியின் இளம் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் கலாட்டா இடம் பெறுகின்றது.

இன்று ஊடக மோகம் எமது இளைஞர்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில் அண்மைக்காலமாக தமிழ் பேசும் நெஞ்சங்களில் இடம்பிடித்திருக்கும் ஒரு அலைவரிசையே 'நேத்ரா டீவி'. இதில் பகுதி நேர நிகழ்ச்சி தொகுப்பாளர்களாக பணியாற்றும் அன்சஹூறான், தினேஷ், லக்ஷ்மி, பிரனீதா, ஷர்மிளா ஆகியோர்களை அண்மையில் எமது அலுவலகத்தில் சந்தித்தோம். சும்மா சொல்லக் கூடாது அமைதியாக இருந்த எமது இருக்கிறம் கட்டிடம் இவர்களது சிரிப்பொலியில் எழுந்து சிலாகித்தது.

'போன வருஷம் சும்மா போறிங்கா போச்சி. இந்த வருஷம் கல்யாணத்தோடு போகலாம் என்டு நினைக்கிறன்'. இப்படி கல்யாண எதிர்ப்பார்ப்போடு கண்களில் ஆவல் மின்ன வார்த்தைகளை அள்ளி வீசினார் நேத்ரா டீவியின் தொகுப்பாளர் அன்சஹூறான். மிகவும் வெட்கப்பட்டு கதைக்க கூச்சப்பட்ட பெண் தொகுப்பாளினிகளை ஏதாவது சொல்லி சீண்டிக்கொண்டே இருந்த அன்சஹூறான் இவர்களுக்கெல்லாம் சீனியர். சென்ற வருடத்தில் மறக்க முடியாத அனுபவம் என்ன? என்று தினேஸ் ஒரு கேள்வியுடன் தொடங்கினார். இதுக்குபோய் 'ஏய் நீ சொல் ஏய் நீ சொல்' என்று ஒரு சிறு கலவரத்தையே உண்டுபண்ணி விட்டார்கள். ஒருவாறு லக்ஷ்மியை பிடித்து மாட்டியும்விட்டார்கள்.

பகுதிநேர தொகுப்பாளினியாக இருக்கும் லக்ஷ்மி ஒரு ஆசிரியையும்கூட. 'நல்ல மாணவர்கள் கிடைச்சாங்க. ஒரு ஆசிரியை என்ட முறையில அவங்களுக்கு நிறைய கற்பிக்க முடியுது. நிறைய திறமை மிக்க மாணவர்கள் கிடைக்கிறதால என்னுடைய கற்பிக்கின்ற தகுதிய வளர்த்துக்கொள்ள முடியுது. நிறைய நிகழ்ச்சிகளை நேத்ராவில் செய்திருக்கிறன். போன வருஷத்தைவிட இந்த வருஷம் present பண்ணுறதில நிறைய முன்னேற்றம் கிடைச்சது. நிறைய அதிதிகளை சந்திக்கிறதால அவர்களிடம் நிறைய விடயங்கள் கற்றுக் கொள்ள முடியுது' என்றார் ஆசிரியருக்கே உரித்தான பொறுப்புணர்ச்சியுடன்.

சும்மா இருக்க முடியாத சர்மிளா 'அன்புக்கும் காதலுக்கும் என்ன வித்தியாசம்' என்று சற்று தூக்கலாகவே நமது லக்ஷ்மியிடமும் பிரனீத்தாவிடமும் கேட்டார். 'அப்பாடா ஆள விடுங்க' என்று லக்ஷ்மி மெதுவாக நழுவ பிரனீத்தாவோ ரொம்பதான் வெட்கப்பட்டார். இடையில் குறுக்கிட்ட அன்சஹூறான் 'அன்பென்றால் அம்மா. காதல் என்றால் அவர். அப்பிடித்தானே பிரனீத்தா' என்று கூற அவர் சற்றே முறைத்துப்பார்த்ததை நாங்கள் கவனிக்கத் தவறவில்லை. 'எல்லோரும் பழகும் விதம் வேறு. சிலர் குருட்டுத்தனமா பழகுவாங்க. சிலர் மென்மையா பழகுவாங்க. அது அவர்களின்ட குணவியல்புகள். அவர்கள் அப்படியான இயல்புடன் இருந்தாலும் நாங்கள் எங்களுக்கென்டு ஒரு தனித்துவமான இயல்பு இருக்கு. அந்த இயல்புடன் பழக வேண்டும். எப்பவுமே சிரித்து கதைக்கிறமாதிரி இருக்கனும்' என்று கூறி ஒருவாறு தன்னை தக்கவைத்துக் கொண்டார். அமைதியாக வேடிக்கை பார்த்துகொண்டிருந்த சர்மிளாவிடம் அச்சு ஊடகங்கள் பற்றி தினேஸ் கேட்க இருக்கிறத்தையே சாட்சிக்கு அழைத்துவிட்டார்.

'ஒவ்வொரு இருக்கிறத்திலும் நல்ல புதுப்புது அனுபவங்கள் கிடைக்குது. எந்த ஒரு பத்திரிகை என்டாலும் அது மக்களுக்கு பயனுள்ள வகையில இருக்கு. படிக்கிறதால ஏதோ ஒரு நன்மை என்டா நிச்சியமா எந்த ஒரு

பத்திரிகையையும் படிக்கிறதுல தவறில்ல' என்று சமாளித்த சா்மிளா கலையைப்பற்றி கொஞ்சம் எடுத்துவிட்டார். கலையும் வாழ்க்கையும் ஒண்டுதான். இப்ப நாங்க வாழ்க்கையையே கலையாகத்தான் வாழுறம். கலைஞர்கள் எண்ட வகையில எங்களுக்கு இன, மத, மொழி என்ற பேதமே கிடையாது. எல்லா இனத்தவர்களுடனும் பழகுறம். இத நாங்க வாழ்க்கையில கொண்டுவந்துட்டா எந்த பிரச்சினையும் இருக்காது. காலம் காலமாக இருக்கின்ற வாழ்க்கை நடைமுறைகளைத்தான் இந்த கலையினூடாக வெளிப்படுத்துறாங்க. அனேகமாக நாங்கள் வீட்டில் எந்த மன நிலையில் இருக்கின்றோமோ அல்லது அன்றைய தினம் நாங்கள் என்ன மனநிலையில் இருக்கின்றோமோ அதுதான் எங்கள் செயல்களிலும் பிரதிபலிக்கும். ஆனால் ஒரு தொகுப்பாளர் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்' என்று நீண்ட பெருமூச்சுடன் சொல்லி முடித்தார்.

பயிற்சியின் போதும் நிகழ்ச்சி தொகுப்பின் போதும் நடந்த பல சுவாரஸ்யமான விடயங்களை எம்மிடம் பகிர்ந்துகொண்டனர். 'வழமையாக 9.30 க்கு programe எண்டால் 9.29க்கு studio க்குப்போன சம்பவங்கள் இருக்கு. (என்ன ஒரு பங்சுவாலிட்டி?) இப்ப கொஞ்ச நாளா எனக்கு நான்தான் மேக்கப் போட்டுக்குறன். (ஏங்க மற்றவங்க சரியா போடுறதில்லையா?) எனக்கு Lecture பண்ணிய நாகபூசணி கருப்பையாவுடன் present பண்ண கிடைத்தது மறக்கமுடியாத சம்பவம். விஸ்வநாதன் சேர் தான் எனக்கு எப்படி present பண்ணுறது? எப்படி உடுக்கணும்? என்று எல்லா அடிப்படையையும் சொல்லித் தந்த குரு' என்று ஒரு பெரிய நன்றியுணர்ச்சியுடன் சொல்லி முடித்தார் அன்சஹான். `Interview நேரத்தில அதிக மாக papers வைத்துக்கொண்டு prepare பண்ணியது அன்சஹான்தான். நாங்க கிட்ட வரும்போது மெல்லமா மடிச்சி வைச்சிடுவார்' என்று லக்ஷ்மி சொல்ல அன்சஹான் முகத்தில் சிறிய நாணம் தொற்றிக் கொண்டது.

'இப்படித்தான் ஒருக்கா programe நடக்கும் போது நான் சில குறிப்புக்களை வைத்து எழுதிக் கொண்டு இருந்தன். திடீரென producer லக்ஷ்மி வணக்கம் சொல்லுங்க என்டார். நானும் செய்வதறியாது இரண்டு முறை வணக்கம் கூறிவிட்டேன்' என்று தன் அனுபவத்தைப் பகிர்ந்தார். அதைக் கேட்ட எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு வகையில மாட்டிவிட்டுக் கொண்டே இருந்த அன்சஹான் 'பிரனீத்தா இந்த பீல்டுக்கு வந்து 2 வருசமாகுது. இன்னும் அம்மாவோடதான் programe க்கு வருவாள். எப்ப ஆத்துக்காரரோட வருவாரோ தெரியல' என்று கடிக்க மீண்டும் களைகட்டியது இளைஞர் அணி. 'இரண்டுபேர் programe செய்யேக்க ஒரு சமநிலை இருக்க வேண்டும். சிலநேரம் ஒரே ஆள் தொடர்ந்து கதைச்சுக் கொண்டு இருந்தால் மற்றவருக்கு அது ஒரு வெறுப்புத்தன்மையை உண்டாக்கும்' என்று பொரிந்து தள்ளினார் தினேஸ். ஒருமுறை பிரனீத்தாவுடன் அன்சஹான் நிகழ்ச்சி நடத்திய போது அன்சஹான் நேயர்களிடம் அதிகமான கேள்விகளை கேட்டுவிட்டாராம். அந்த ஆதங்கத்தை வெளிப்படுத்திவிட்டார் போலும்.

காதலைப்பற்றி எவ்வளவோ கேட்டுப் பார்த்தோம். ரொம்ப அலோ்ட்டா இருக்காங்க போல. முதல் ரெக்கோர்டரை ஓவ் பண்ணுங்க சொல்றம் என்று தப்பிவிட்டனர். அட நம்ம தினேசை மறந்தே போய்விட்டோம். இத்துறைக்கு இவர் புதிது. கொஞ்சம் சைலண்டான அதோட தான் இந்த ஜவரில் கடைக்குட்டி என்ற அடக்கத்தில் இருந்த அவரிடம் அனுபவங்க



ளைக் கேட்ட போது '7 வருஷம் ட்ரை பண்ணி 1000க்கு மேற்பட்டவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டேன். முதல் programe பிரனீத்தாவுடன் அவங்க என்னோட programe பண்ணும் போது அதை எப்படி சொல்றது? ரொம்ப soft ஆக அதாவது ஒரு தாய் அனுசரிக்கிறதபோல (கொஞ்சம் ஓவரா தெரியேல்ல?) அனுசரித்தாங்க. மறக்கவே முடியாது' என்று குழைந்து நெளிந்து சொன்னார் தினேஸ். 'அன்சஹானுக்கு ஆண்டிமார்தான் ரசிகர்களாம். கல்யாணத்துக்கு ரொம்ப ரொம்ப அவசரப்படுறார். முடி நரைக்க முதல் கல்யாணம் பண்ணிக்கணுமாம்' என்று ஒரு போடு போட்டார் தினேஸ். அன்சஹான் நாணத்தால் தலை குனிந்ததைப் பார்த்த எல்லோரும் பெரிய சத்தமிட்டு கைதட்டினார்கள். 'லக்ஷ்மி அக்காவுக்கு சீக்கிரம் டும் டும் டும்' என்று சா்மிளா கூற சற்றே நாணம் வந்து முகம் சிவந்தார் லக்ஷ்மி. அதுமட்டுமல்ல லக்ஷ்மி இண்டைக்கு `programe க்கு 1/2 மணித்தியாலம் மேக்கப்பும் போட்டாங்க' என்றார அன்சஹான். கலகலப்பான அரட்டைகளுடன் நேரமும் நகரவே குதுகலமாக எங்களிடமிருந்து விடைபெற்றனர் அந்த இளம் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள்.

-வர்ஷினி-



சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சச்சின் காலடி எடுத்து வைத்து 20 ஆண்டுகள் நிறைவு பெற்றாலும் 16 வயதில் இந்திய அணிக்காக விளையாடிய அதே அதிரடியில் இப்போதும், 36 வயதில் அசைக்க முடியாத சாதனை வீரராக மிளிர்கிறார். கிரிக்கெட்டில் சாதனை என்றால் சச்சின் என்று கூறுமளவுக்கு இவர் படைத்த சாதனைகள் பல.


பெப்ரவரி 24, 2010, சச்சின் டெண்டுல்கரின் தினம். ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் உலகின் தலைசிறந்த வீரரான சச்சின் டெண்டுல்கர், ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட்டில் யாரும் சாதிக்க முடியாதென்று கருதிய இரட்டைச் சதத்தை எடுத்து வரலாறு படைத்த நாள். இந்த நாள் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட்டில் மறக்க முடியாத நாள். அதுவும் சச்சினுக்கு என்றுமே மறக்க முடியாத திருநாள்.

ஒருநாள் சர்வதேச போட்டிகள் விளையாட ஆரம்பித்து 39 ஆண்டுகளின் பின்னர், 2962 ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியிலே இந்த அரிய சாதனை சச்சினால் நிகழ்த்தப் பட்டது. தென்னாபிரிக்க அணிக்கெதிரான 2 ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியிலே குவாலியரில் இந்த சாதனையைப் படைத்தார் சச்சின்.

தென்னாபிரிக்க பந்து வீச்சை லாவகமாக எதிர்கொண்ட சச்சின் 90 பந்துகளில் சதத்தை எடுத்து அடுத்த 57 பந்துகளில் இன்னொரு சதம் எடுத்து, இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இதன்மூலம் சர்வதேச ஒருநாள் போட்டியில் இரட்டை சதம் பெற்ற முதல் வீரர் என்ற புதிய உலக சாதனையைப் படைத்தார். இனி இந்த சாதனையை இப்போதைக்கு யாராலும் முறியடிக்க முடியாதென்பதே எனது கணிப்பு.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதமடிக்கும் வாய்ப்புக்கள், பல ஆசிய வீரர்களுக்கு கிடைத்தது. ஆனால் அவர்கள் அந்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தத் தவறினர். 1997 ஆம் ஆண்டு இந்தியாவுக்கெதிரான போட்டியில் பாகிஸ்தானின் சயீத் அன்வர் 194 ஓட்டங்களைப் பெற்றார். 6 ஓட்டங்களால் இரட்டைச்சத வாய்ப்பு கைநழுவிப் போனது. அதன்பின் 1999ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் சௌரவ் கங்குலி இலங்கை அணிக்கெதிரான போட்டியில் 183 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அதே ஆண்டு சச்சின், நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் ஹைதராபாத்தில் 186 ஓட்டங்களைப் பெற்றார். அதன் பின் 2000 ஆம் ஆண்டு ஷார்ஜாவில் இந்திய அணிக்கெதிரான போட்டியில் சனத் 189 ஓட்டங்களுடன் வெளியேறினார். 2005 ஆம் ஆண்டு ஜெய்ப்பூரில் இலங்கை அணிக்கெதிரான போட்டியில் மகேந்திர சிங் டோணி ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்களைப் பெற, 2006 ஆம் ஆண்டு ஜோகனஸ்பேர்க்கில் தென்னாபிரிக்காவின் ஹேர்ஷல் கிப்ஸ் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான போட்டியில் 175 ஓட்டங்களுடன் களம் விட்டகன்றார். அதன் பின் 2009 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கெதிரான





ஜீ.கே.மயூரன்

# சாதனை நாயகன் சச்சின்

போட்டியில் சச்சின் 163 ஓட்டங்களுடன் உபாதை காரணமாக வெளியேறினார். அதே ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்கெதிரான போட்டியில் ஹைதராபாத்தில் சச்சின் 175 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இப்படி பல அதிரடி வீரர்கள் இரட்டைச் சதமடிக்க முயன்றும் முடியாமல் போனது. இது இப்படியிருக்க அதிகம் அறியப்படாத அனுபவமில்லாத சிம்பாப்வே வீரர் சார்ள்ஸ் கவுண்ட்ரி 2009 ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 194 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே புதிய சாதனையாக அமைந்தது. இப்போது, எல்லோரும் முயன்றதைப் பார்த்துவிட்டு நிதானமாக அதிரடியாக துடுப்பெடுத்தாடி புதிய உலக சாதனை படைத்து அசத்தியுள்ளார் சச்சின்.

இந்த வரலாற்றுச் சாதனையை 20 ஆண்டு காலமாக தனக்கு ஆதரவளித்து வரும் ரசிகர்களுக்கு அர்ப்பணிப்பதாகக் குறிப்பிடும் சச்சின், 2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க காத்திருப்பதாகவும் கூறுகிறார். சச்சினின் இரட்டை சதத்தால், குவாலியர் கிரிக்கெட் சங்கம் இந்த மைதானத்தின் பெவ்லியனுக்கு சச்சின் டெண்டுல்கரின் பெயரை சூட்ட விருப்பதாகவும் அறிவித்தது.

442 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின், 46 சதம் 93 அரைச் சதம் அடங்கலாக 17598 ஓட்டங்களைப் பெற்று, அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரராக முதலிடத்திலிருப்பதுடன் 46 சதங்களைப் பெற்று அதிக சதங்களைப் பெற்ற வீரராகவும் விளங்குகிறார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்ற பெருமையும், அதிக சதமடித்த பெருமையும் சச்சின் வசமே. (166 டெஸ்ட் போட்டிகளில் 47 சதங்கள் 54 அரைச் சதங்கள் அடங்கலாக 13447 ஓட்டங்கள்)

## சச்சின் சதம் அடித்தால் இந்தியா


சச்சின், ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் 46 சதம் அடித்துள்ளார். இதில் 33 போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இந்திய அணி இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி வெற்றி பெற்ற போட்டிகளில் சச்சின் 14 சதங்கள், 29 அரைச் சதங்கள் அடங்கலாக 5215 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சராசரி 56.68. ஒரு நாள் தொடரில், 39 இறுதிப் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின், 6 சதங்கள் 10 அரைச் சதங்கள் அடங்கலாக 1833 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 55.54.

ஒரு நாள் அரங்கில் அடித்த 46 சதங்களில் அந்நிய மண்ணில் அடித்தவை 28. இந்தியாவில் அடித்தவை 18 சதங்கள். ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அதிக தடவை (61) ஆட்ட நாயகன் விருது. அதிகதடவை தொடர் நாயகன் விருது வென்ற வீரர்கள் வரிசையிலும் சச்சின் முதலிடத்தில். இதுவரை15 தொடர்களில் தொடர் நாயகன் விருதை வென்றுள்ளார்.

அண்மைக் காலமாக சதம் குவிக்கும் வீரராக மாறிவரும் சச்சின், சர்வதேசப் போட்டிகளில்100 சதமடித்த முதலாவது வீரர் என்ற பெருமையை விரைவில் பெறுவார் என்றே தோன்றுகிறது. ஏராளமான விருதுகள், பட்டங்களைப் பெற்றுள்ள சச்சினுக்கு இந்திய அரசின் உயரிய விருதான பாரத ரத்னா விருதும் மிக விரைவில் கிடைக்கப் போகிறது.

கிரிக்கெட்டில் எண்ணற்ற சாதனைகளைப் படைத்துள்ள சச்சின் டெஸ்ட் கிரிக்கெட்டில் முச்சதத்தை பெறவில்லை என்பது சச்சினுக்கும் சச்சின் ரசிகர்களுக்கும் கவலையே. இதற்கு சச்சினின் துடுப்பு பதில் கூறுமா விரைவில்....

சாதனைகளுக்கு ஒரு நாயகன் சச்சின்...





கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# இருப்பு



பிய்த்துப் பார்க்கும் உலகு



people unlimited

HIVOS

நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம். இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் HIVOS பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து HIVOS பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் HIVOS, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.

# விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையிலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் ஜனரஞ்சக பொழுதுபோக்கு சஞ்சிகையான 'இருக்கிறம்' தற்பொழுது நாடுமுழுதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 'இருக்கிறம்' சஞ்சிகைக்கான விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்யமுடியும். விநியோகஸ்தர்கள் தங்களது சுயவிபரங்களை கீழுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மின்னஞ்சல் மூலமாகவும் உங்களது சுயவிபரங்களை அனுப்பி வைக்கலாம்.

**முகாமையாளர்,**
**விளம்பர சந்தைப்படுத்தல் பிரிவு,**
**இருக்கிறம்,**
**03, டொரிங்டன் அவனியூ,**
**கொழும்பு 7**
தொலைபேசி - 011 - 3150836, 011 - 2555529
மின்னஞ்சல் - irukiram@gmail.com

Jeya Offset Printers, No. 29 St`Sebastian Street, Colombo 12. Tel: 0112 478444